# தேர்ந்த கட்டுரைக

★★★★★★★★★★★★★★

## வெளியீடு -12




ழ விடுதலைப் புலி
வெளியீட்டு வாரியம்,
தமிழீழம்.

01 - 0? - 92

JPL
C2245
2245
PUB

# தேர்ந்த கட்டுரைகள்

○

★★★★★★★★★★★★★★

## வெளியீடு — 12

○

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

வெளியீட்டு வாரியம்,

தமிழீழம்.

***01-08-92***

பொது சன நூலகம் 12-08-1992

KOHA JPL

தேசிய நூலகப் பிரிவு மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

PUBLIC LIBRARY JAFFNA 87031

22455 C.C

87031 C.C

320.512|உ

# உள்ளே ...


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | மென்மையாகப் பேசியபடி கடுமையாக நடக்கும் அரசின் கொள்கை | 1—5 |
| 2. | புலிகளை நிலைகொள்ளாதிருக்கச் செய்தல் | 6—10 |
| 3. | திரு. கோபாலசாமியின் எழுச்சி | 11—14 |
| 4. | யூதர்களின் வரலாற்றில் புதிய கருத்துக்கள் | 15—19 |
| 5. | முஜாகுதீன்களுடைய வெற்றி தென் ஆசியாவின் அதிகாரச் சமநிலையை நிலை குலையச் செய்துள்ளது | 20—25 |
| 6. | நீண்டகால வாழ்விற்கு உயிர்ச்சத்து "சி"யைப் பாவியுங்கள் | 26—27 |
| 7. | சிரியாவின் ஆசாத் எல்லோருடைய நண்பனாகத் தோற்றமளித்தாலும் ஒருவருக்கும் நண்பனல்ல | 28—30 |
| 8. | கந்தலாமப் பிரச்சினையை பூதாகரமாக்கப் பார்க்கின்றார்கள் | 31—34 |
| 9. | லத்வியாவில் இனவேற்றுமை வளர்கிறது | 35—42 |
| 10. | கொரியாவின் அணு ஆற்றல் கொடுத்த அதிர்ச்சி | 43—45 |
| 11. | வெற்றி கொள்வதற்கு கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்றது | 46—48 |
| 12. | சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மூன்று போர்த்திறன் வல்லுனர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர் | 49—57 |
| 13. | விடுதலைப் புலிகளைப்பற்றி இந்தியாவின் தடுமாற்றம் | 58—64 |

14. செக்கோசிலவாக்கியா-மியூனிச் நகரத்தின் ஆவிகள் ஒன்று கூடுகின்றன 65—74

15. பராக்கிரமபாகுவின் மகளை மணமுடித் தான், சிங்கள நிகண்டு தந்தான் ஒரு பாண்டியத் தமிழ் வீரன்! 75—76

16. யாதும் ஊரே; யாவரும் கேளிர்! 77—80

17. சீர்குலைந்து போகும் ஒருநாடு 81—86

18. மாற்றமடைந்துவரும் பொருளாதாரத்தில் ஐக்கிய அமெரிக்கா வகிக்கும் இடம் 87—90

19. திரு. லுமும்பா அவர்களைக் கொன்றது யார்? திரு. மொபுட்டு அவர்களிலும் அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. 91—94

20- அரைத்த மாவையே அரைக்கின்றோம் 95—100

21. புலிகள் தாங்கள் நினைத்தபடி கடலில் நடமாடுகிறார்கள். 101—106

22. குறைவிருத்தி நாடுகளில் இராணுவச்செல வினம் இலங்கை குறித்தஒரு பரிசீலனை 107—117

23. ஜப்பானின் தலைப்பட்டினமான ரோக் கியோ ஒருநாள் தனது தகுதியை இழக்கவேண்டி நேரிடும் 118—121

27. வானூர்தியின் விபத்தைப் பற்றி முரண் பாடான கருத்து நிலவுகின்றது 122—128

26. இஸ்ரேல் நாட்டை புதிய உலகத்திற் குள் இட்டுச்செல்ல திரு யிற்சாக்கின் தலைமைத்துவத்தால் முடியுமா? 129—138

KOHA JPL

PUBLIC LIBRARY JAFFNA

87031

# தோழர்களுக்கு...

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 12-வது வெளியீடாகும்.

1-7-91-ல் முதலாவது தேர்ந்த கட்டுரைகள் வெளிவந்தது. இக்கட்டுரைகள் ஒன்றில் இருந்து நான்குவரை மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் என்றே வெளிவந்தது.

மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட கட்டுரைகளோடு வேறு பல கட்டுரைகளும், அரசியல் வகுப்புப் பாடங்களும் இவற்றில் இடம் பெற்றன.

தேர்ந்து எடுக்கப்பட்ட கட்டுரைகள் வெளிவந்ததால் இந்நூல் வரிசைக்கு தேர்ந்த கட்டுரைகள் என பெயரிடப்பட்டது.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறுபட்ட எண்ணங்களை சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும்.

இக்கட்டுரைகளில் உள்ள தகவல்கள் எல்லாம் சரியானவையல்ல.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணிப்பாதுகாப்பதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் மேலும் ஊக்குவிக்கும்.

# மென்மையாக பேசியபடி கடுமையாக நடக்கும் அரசின் கொள்கை

– தாரகி
(ஐலன்ட் - 7-6-92)

"வடக்குக் கிழக்கில் ஆயுதங்களோடு திரியும் தீவிரவாதிகளின் ஆயுதங்களை களைவதில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் அரசியல், இராணுவரீதியான இருவித யுக்திகளாகும்'' என மந்திரிசபைப் பேச்சாளரான திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 4 - 6 - 92 அன்று பத்திரிகையாளர்களுக்கு கூறினார்.

இனிமையாகப் பேசிக்கொள்ளும் அதே வேளையில் கடுமையாகத் தாக்கவேண்டும் என்பதே சனாதிபதியின் அணுகுமுறையாகும். ஜே. வி. பி. (*J.V.P.*) யினர் வெற்றிகரமான முறையில் அழிக்கப்பட்டனர். படுசிக்கலான நிலையிலுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அவர் வெற்றி அடைவாரா! தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுதங்களைக் களையும் அதே வேளையில், வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதே ஐக்கிய தேசிய கட்சியின் நோக்கமாகவிருக்கின்றது என்பது தற்பொழுது புலனாகின்றது.

திடமான நம்பிக்கையின் அறிகுறியே ஆயுதங்களைக் களையவேண்டும் என்ற குறிக்கோளாகும். தான் ஒருவரையும் தோற்கடிக்க விரும்பவில்லை எனவும் எல்லோரையும் வெற்றி

யடையச் செய்யவே விரும்புவதாகவும் சனாதிபதி வவுனியாவில் கூறியுள்ளார். அதே தினத்தில் அரசாங்கத்தால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட எப் 7 ரக (F 7) சுப்பர் சொனிக் குண்டு வீச்சு வானூர்திகள், ஒவ்வொன்றும் 250 இறாத்தல் எடையுள்ள நான்கு குண்டுகளைத் தாங்கிக்கொண்டு கட்டுநாயக்காவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பறந்துசென்றன. யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவ வேண்டும் என்பது ஒரு அரசியல் தீர்மானமாகும். இதன்மூலம் எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராக மேற்கொண்டு வரும் கோட்பரப்புகைகள் பயனற்றவையாக செய்யப்பட்டுள்ளன. குடாநாட்டின்மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளுவதை தெற்கிலுள்ளோர் வெகுகாலமாக எதிர்பார்த்திருந்தனர். அரசாங்கத்தின் நம்பகத்தன்மையில் எதிர்த்தரப்பினர் சந்தேகம் கொண்டிருந்தனர். இலங்கைப் பாதுகாப்புப் படையினர் யாழ்ப்பாணத்துக்குள் புகுந்து அதைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதைப் பார்ப்பதற்கு இந்தியா ஆவல் கொண்டுள்ளது. படையினருடன் சேர்ந்து செயலாற்றும் சில தமிழ்க்குழுக்கள், குடாநாட்டின் மீது மிக விரைவான மின்னல் வேகத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென வடக்கிலுள்ள படைத் தளபதிகளைத் தூண்டிவருகின்றனர்.

பாரிய பலமுனைத் தாக்குதல்களில் ஒன்றாகக் குறிப்பிடக்கூடிய இத்தாக்குதல் நன்றாகத் திட்டமிடப்பட்டதோ அல்லது தற்செயலாக திடீரென நடத்தப்பட்டதோ என்று திட்டவட்டமாகக் கூறமுடியாத வகையில் சனாதிபதி அவர்கள் வவுனியாவிலிருந்தபொழுது மேற்கொள்ளப்பட்டது. இனப்பிரிவினைவாதிகளுக்கு எதிராக வழமையாக மேற்கொள்ளும் மென்மையான வழிமுறைகளுக்கு மாறாக நவீன யுக்திகளைக் கையாண்டு ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகளின் இலட்சியத்தை அழிப்பதற்குத் தான் திடசங்கற்பம் பூண்டுள்ளார் என்பதையும், வடக்கில் இராணுவ வெற்றியே தனது குறிக்கோள் என்பதையும் இந்தத் தாக்குதல் மூலம் சனாதிபதி தெற்கில் உள்ள மக்களுக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

குற்றவாளிகளைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் காரணம்காட்டி இராசதந்திர ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ அழுத்தம் கொடுக்க முடியாத நிலையில் இந்தியா தற்போதுள்ளது. விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாகப் பலவீனப் படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் அதேவேளையில் அவர்களை ஆயுதமற்றவர்களாக்க வேண்டும் என்றும் கூறிவருகின்றது.

தேசிய நூலகப் பிரிவு,
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

அரசியல் மற்றும் இராணுவ ரீதியான இரு விதமான முறைகளை அரசாங்கம் கையாண்டு வருவதாகத் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறுகின்ற போதிலும் அது அதனது சுயநலத்தைப் பேணவேண்டியதன் காரணமாக இந்த இருவித மான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் கொள்கை செயற் படுத்த முடியாத ஒன்றாகவுள்ளது. இந்தக் காரணங்கள் யாவை? இக்காரணங்களினால் அரசாங்கம் கடைப்பிடிக்கும் இரு முறை களிலான யுக்திகள் ஏன் வெற்றியடைய முடியாமலிருக்கிறது? இதற்கான காரணங்கள் பின்வருமாறு :

(அ) விடுதலைப் புலிகள் மேல் இந்தியா கொண்டுள்ள நிலைப்பாடும், தன்னை ஒதுக்கிவிட்டு இனப்பிரச்சினை யில் தீர்வு ஒன்றும் காணக்கூடாது என்ற இந்தியாவின் உறுதியான நிலையும்,

(ஆ) தெற்கத்தைய அரசியலில் இந்தியாவின் செல்வாக்கு

(இ) சனாதிபதி சிறுபான்மையினர் பக்கம் சார்ந்தவர் என எடுத்துக்காட்டி அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதில் ஆற்றல்கொண்ட எதிர்க்கட்சியினர்.

(ஈ) வடக்கிலும் கிழக்கிலும் நிலைகொண்டுள்ள பாதுகாப் புப் படையினரின் தவிர்க்க முடியாத போர்யுக்திகள்

இத்தருணத்தில் தமிழர்களின் பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் முக்கிய பங்கை ஏற்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறி அதற்குரிய நடவடிக் கைகளைத் துரிதப்படுத்தினால் அரசியல் அதிகாரத்தில் ஈடாட் டம் காணவேண்டிவரும் என்பது அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரிந்த ஒரு விடயமாகும். வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்கெதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைத் தான் முழுமனதாக ஆதரிப்பதாக எடுத்துக் காட்ட வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்தியாவின் பகையுணர்ச்சி இலங்கைக்கு நன்மைதரக்கூடியதென்பதனால் விடு தலைப்புலிகளை அழிப்பதற்கான இராணுவ நடவடிக்கைகளுக்கு இச்சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமெனத் தெற்கிலுள்ள பலதரப்பட்ட மக்கள் கருதுகின்றார்கள்.

இந்தியாவை வஞ்சம் தீர்ப்பதற்காகவே விடுதலைப் புலி கள் விவகாரத்தில் தாங்கள் மென்மையான போக்கைக் கடைப் பிடிக்கின்றார்கள் என்று எழக்கூடிய கருத்தை அகற்றுவதில் அர

சாங்கம் அக்கறை கொண்டுள்ளது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாயின் வடக்குக் கிழக்கு இணைப்பு மாற்ற முடியாத தொன்றாகுமென எல்லாத் தமிழ்க் கட்சிகளும், குழுக்களும் கூறு கின்றன. கொள்கையளவில் இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வந்தாலும், மணலாறு குடியேற்றப் பகுதிகளைப் பற்றிய படையினரின் முக்கிய நோக்கங்களை இது சிதறடிப்பதாக இருக் கும். இந்தச் சூழ்நிலையில் வடக்குக் கிழக்குப் பிரச்சினையை இராணுவ ரீதியில் அணுகுவது அரசுக்குச் சுலபமாகும். இப்படிச் செய்வதன் மூலம் நாட்டில் ஒரு உறுதியான நிலையைக் கொண்டு வரமுடியும் எனவும் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கொடுக்கப்படும் அரசியல் தாக்கத்தைத் தணிக்க முடியுமெனவும் அரசாங்கம் நம்பக்கூடும்.

அரசாங்கத்தின் இருமுனை யுத்திகளிலொன்றான அரசி யல் தீர்வு என்ற குரல்கள் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவ தையே நோக்கமாகக் கொண்டதாகவிருக்கும். யாழ்ப்பாணத் திற்குள் இராணுவம் ஊடுருவிச் சென்றால், உள்நாட்டிலும், உலகெங்கணும் விடுதலைப் புலிகளுக்குள்ள மதிப்பு அழிக்கப் பட்டுவிடுமெனவும், இவ்வியக்கத்தை விட்டுப் பலர் பிரிந்து விடு வார்கள் எனவும், பெருந்தாக்குதல்களை மேற்கொள்வதற்குப் போதியளவு வலிமையை அவர்கள் பெறமுடியாதெனவும் அரசு எண்ணுகிறது. விடுதலைப் புலிகளைப் பற்றிய தகவல்கள் தற் போது போதியளவு யாழ். மக்களிடம் இருந்து பெறப்படுவதாகவும் அவர்களை பற்றிய தகவல்கள் மேலும் கூடுதலாகப் பெறமுடியும் என நம்பப்படுவதாகவும் சிலர் விவாதிக்கின்றனர்.

இவை காரணமாக 1987க்கு முன் தாங்கள் வகித்த நிலையை மீண்டும் வகிக்க முடியாத நிலை விடுதலைப் புலிகளுக் குத் தோன்றும் எனக் கூறப்படுகின்றது.

தாங்கள் அதிகாரங்களையும், செல்வாக்கையும் சிறிதள வேனும் நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்கும் ஆயுதக் குழுக்களில் பல விடுத லைப் புலிகளின் தளமாக விளங்கும் வடக்கிற்குள் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றன.

ஆதலால் தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியாக அணுகு வது அரசாங்கத்துக்கு இலகுவாயிருப்பதுடன் அரசியல் ரீதியாக வும் அதற்கு நன்மை பயக்கக் கூடியதாயுள்ளது. ஆதலால் இந் தியா இலங்கை எதிர்க்கட்சியினர், விடுதலைப் புலிகளுக்கு

எதிராக இயங்கும் குழுக்கள், மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றின் திட்டங்களை நோக்கின், தமிழர் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை அல்ல என்றே தோன்றுகின்றது. இனப் பிரச்சினைக்கு இணக்கம் மூலம் தீர்வு என்பது பேச்சளவிலேயே இருக்கும்.

சனாதிபதி வவுனியாவுக்கு வந்தபின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் எப் படித் திட்டமிட்டுள்ளார்கள்?

கடைசியாக வெளிவந்த அவர்களுடைய அதிகாரபூர்வ மான வெளியீடு அவர்களின் கருத்தை எடுத்துக் காட்டுகின்றது. அதில் விடுதலைப் புலிகள் பின்வருமாறு கூறுகின்றார்கள். ''தமி ழர் தேசியப்பிரச்சினைக்கு ஒரு முறையான தீர்வைக் காண்பதற் கான சாத்தியக் கூறுகளைக் காண்ப ற்கு விடுதலைப் புலிகள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் எனவும், பிரிந்து செல்வதென்ற இறுதித் தீர்வை எடுக்கு முன்னர் நீதியான தீர் வைப் பெறுவதற்கான எல்லாவிதமான வழிமுறைகளையும் கை யாளவேண்டுமெனவும் பல்தேசிய சமுதாயம் விரும்புகின்றது. அந்த அடிப்படையில் பல நாடுகள் விடுதலைப் புலிகளின் மீது இராசதந்திர ரீதியயான அழுத்தம் கொடுத்து வந்துள்ளன.

தனி அரசு ஒன்றை உருவாக்குவதற்கு மாறாக போதிய ளவு அதிகாரத்தைக் கொண்ட மாநில சுயாட்சி முறையை விடு தலைப் புலிகள் ஆலோசனைக்கு எடுக்கவேண்டும் என மேற்கத் தைய உலகத்தினர் அழுத்தம் கொடுக்கிறார்கள். அதேவேளை யில் சிங்கள அரசாங்கம் முறையான தீர்வு ஒன்றைக் காண்ப தற்கு மறுத்து அடக்கு முறையை அதிகரித்து அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியாத சூழ்நிலையைத் தோற்றுவித்தால் தமிழர்களை ஆதரிக்கவேண்டுமென்ற நிலைக்குத் தாங்கள் தள் ளப்படுவது தவிர்க்கமுடியாததொன்றாகிவிடும் என அவர்கள் கூறத்தயங்கவில்லை. பல்தேசிய நிலைமையைப் பொறுத்தே எங்கள் அரசியல் அணுகுமுறை தீர்மானிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் எப்படி உயர்ச்சி பெற்றார்கள் என் பதை நோக்கில் அவர்கள் தங்கள் அரசியல் பின்னடைவுகளை இராணுவ வெற்றிகள் மூலமும் தங்கள் இராணுவப் பின்னடைவு களை அரசியல் ரீதியான வெற்றிகள் மூலம் மாற்றி அமைத்துள் ளார்கள்.

சனாதிபதியின் மென்மையாகப் பேசியபடி கடுமையாகத் தாக்கவேண்டுமென்ற அணுகுமுறையும் இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் நன்மைபெறமுடியாதபடி விடுதலைப் புலி களை ஆக்கிவிடுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ★

# புலிகளை நிலைகொள்ளாதிருக்கச் செய்தல்

– றோகான் குணசேகரா
(ஐலன்ட் – 14-06-92)

கிழக்கை இராணுவத்தினர் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்வதன் நோக்கம் ஈழம் என்ற கோட்பாட்டின் இதயநாடியை இல்லாதொழிப்பதற்கே. பயங்கரமான கலவரங்கள் 1983 இல் தொடங்கியதின் பின் இராணுவத்தினரின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரிக்கப் பட்டபோதும், புலிகளுக்கெதிராக ஒரே நேரத்தில் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய தாக்குதலை ஆரம்பித்து இரு முனைகளில் போரை நடத்துவதற்கு போதிய ஆளணிகளையும் ஆயுதங்களையும் தளபாடங்களையும் மற்றும் அவர்களுக்குத் தேவையான வளங்களையும் பாதுகாப்புப் படையினர் கொண்டிருக்கவில்லை. அப்படி அவர்கள் கொண்டிருந்தால் விடுதலைப் புலிகளின் ஆற்றல் கூடிய கெதியில் சிதறடிக்கப்பட்டிருக்கும்.

புலிகளின் தலையாக யாழ்ப்பாணம் கருதப்படுமாகில் அதன் இருதயமாக கிழக்கு கருதப்படுகின்றது. உட்புக முடியாதஅடர்ந்த காடுகளையுடையதும், வடகீழ் கரையோரமாக உள்ளதுமான மணலாற்று நிலப்பரப்பில் பெருந்தொகையான தளங்கள், யாழ்ப்பாணத்தைப்போலவே புலிகளுக்கு முக்கியமானவைகளாகும். தங்கள் கோட்டையாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் அகற்றப்பட்டால் தங்கள் நீண்டகாலக் கரந்தடிப் போரை இந்தக் காடுகளில் இருந்துகொண்டு நடாத்துவதற்கு புலிகள் திட்டமிட்டுள்ளார்கள். வடக்கிலிருந்து தெற்குக்குத் தங்கள் போராளிகளை நகர்த்துவதற்கும் கடல்மூலம் தொடர்பு

கொள்வதற்கும் மணலாறு விடுதலைப்புலிகளுக்கு இன்றியமை யாததாகவிருக்கின்றது.

சீனாவிலே பெறப்பட்ட கடற்படையினரின் மூன்று புதிய பீரங்கிப் படகுகள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் பரி மாற்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்காக கிழக்குக் கடலைக் கண்காணிப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் காடுகளில் உள்ள தளங்களை விடுதலைப் புலிகள் பாவிக்க முடியாதவாறு செய்தால் அவர்கள் தங்கள் பலத்தை இழந்துவிடுவார்கள்.

யாழ்ப்பாணத்திலும் அலம்பிலிலும் புலிகளுக்கு எதிராக தாக்குதல்களை கூட்டுப்படைகள் மேற்கொள்ளும் அதேவேளை யில், கிழக்கில் அதிரடிப்படையினரும் சிறப்புப்படையினரும் இர கசியமான முறையில் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு புலிகளின் தலைமைப் பீடத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகின்றார் கள், அடர்ந்த காடுகளுக்குள் சிறப்புப் படையினால் மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக அல்லது மறைந்திருந்து தாக்குதலை மேற்கொண்டதன் காரணமாக சென்ற மூன்று வாரங்களில் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த குறைந்தது ஒன்பது தலைவர்கள் கொல் லப்பட்டுள்ளனர். இறந்தவர்களுள் புலிகளின் மட்டக்களப்பு மற் றும் அம்பாறை நிலப்பரப்பின் புலனாய்வுத் துறைத் தலைவ ரான நித்தி, கிழக்கில் மாணவர் தலைவரான வாசிங்ரன் இந் தியாவில் பிரபாகரனுடன் பயிற்சிபெற்ற மூத்த உறுப்பினரான குலதீபன், சித்தாண்டிக்கும் ஏறாவூருக்கும் நகர்த் தலைவர் களாக இருந்த நாதன், கிறிஸ்டி கிழக்கிலுள்ள புலிகளின் முக்கிய தலைவரின் உதவியாளரான நேசன் ஆகியோர் அடங்குவர்.

ஆனால் கிழக்கை விடுதலைப்புலிகள் இல்லாத பிரதேச மாக மாற்றவேண்டுமாயின் பாதுகாப்புப் படையினர் கிழக்குக்கு அப்பால் உள்ள பிரதேசத்தையும் கருத்தில் கொள்வதுடன் மாகாணத்தின் எல்லைகளிலும் இராணுவ வேலி அமைக்க வேண்டும். இராணுவ அதிகாரம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவை கள் அண்மையில் ஏப்ரல் 15 ஆம் திகதி மாற்றி அமைக்கப்பட்டு புதிய ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்புத் தலைமையகம் கொழும் பிலே அமைக்கப்பட்டது போல், டேடார்த் திறமைவாய்ந்தவர் களைக் கொண்ட ஒரு தலைமைப் பீடத்தை அனுராதபுரத்தி லும் அமைத்ததன் காரணமாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நாலு சிறப்புக்கடமை படையணிகளில் ஒன்றினது அதிகாரத்தின் கீழ் மணலாற்றுப் பிரதேசம் கொண்டுவரப்பட்டுள்ளது.

"ஈழத்தை அழிக்க வேண்டுமாயின் ஈழம் என்ற கோட்பாட்டை அழிக்க வேண்டும் என படைத்தளபதியான லெப்ரினன் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின கூறுகிறார். கிழக்கை கட்டுப்பாட்டுக்குக்கீழ் கொண்டுவருவதன்மூலம் ஈழத்துக்கு அடிப்படையாகவுள்ள கிழக்கு இணைப்பை இல்லாது செய்தால் ஈழத்திற்கான அடிக்கற்கள் அழிக்கப்பட்டுவிடும். யாழ்ப்பாணத்தை அல்லாது திருக்கோணமலையையே தங்கள் தலைநகராக ஆக்க வேண்டும் என்று புலிகள் விரும்புகிறார்கள்.

இந்தச் சிக்கலுக்கு கிழக்கு இருதயமாக இருந்தபோதிலும் தலையாக விளங்கும் யாழ்ப்பாணத்தை இராணுவம் மறந்து விடக்கூடாது. இராணுவம் கிழக்கிலும் வடக்கிலும் புலிகளைத் தாக்கி நிலைகுலையச் செய்வதன் மூலமும் அவர்களுக்கு அடிக்கடி நெருக்குதல் கொடுப்பதன் மூலமும் அவர்கள் தாங்கள் நினைத்தவேளையில் தங்கள் படைகளை ஒன்று சேர்த்து நினைத்த இடத்திற்கு அதை நகர்த்தி இராணுவத்தை எதிர்க்காதிருக்கச் செய்யமுடியும். இராணுவ நடவடிக்கை மந்தகதியில் இருக்கும் வேளைகளிலேயே விடுதலைப் புலிகள் தங்கள் நடவடிக்கைகளை அதிகளவில் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதை பட்டறிவு எடுத்துக்காட்டியுள்ளது, உதவிக்கு வரும் மேலதிக துருப்புக்கள் வருமுன் தாக்கிவிட்டு ஓடும் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஏற்படும் இழப்புக்களைச் சந்திப்பதைவிட, புலிகளும் இழப்புக்களைச் சந்திக்கக்கூடிய வகையில் வலியச்சென்று தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டு இழப்புக்களைச் சந்திப்பது நல்லது.

அதனாலேயே போர்முனையிலுள்ள தளபதிகளுக்குள் தொடர்பைக் கூட்ட வேண்டும் என்ற நோக்கில் இந்த இரு பிரதேசங்களையும் ஒரு போர் பிரதேசமாக்கி, வடக்குக் கிழக்கு பிரதேசம் எங்கணும் விடுதலைப் புலிகளுடன் போரில் ஈடுபட இராணுவம் ஆர்வம் காட்டுகின்றது. முன்பிருந்த உயர் கூட்டுப் படையின் அதிகாரத்தைக் குறைத்து அதை ஓர் ஆலோசனை கொடுக்கும் அமைப்பாக மாற்றி, கட்டளைகளையும் கட்டுப்பாடுகளையும் சீரான முறையில் கொடுப்பதற்கும், குழப்ப நிலையையும், வேலைப் பெருக்கத்தையும் நீக்குவதற்கும், முப்படைகளில் தரை உயர்ச்சி நிலையிலுள்ள வான்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தன, கடற்படைத்தளபதி உப அட்மிறல் கிளான்சி பெர்னாந்து மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் வைத்தியரத்தின ஆகியோரின் தலைமையின் கீழ் புதிய சிறப்பு கட்டமைப் படைத்தலைமைப்பீடம் ஒன்று ஜனாதிபதி பிரேமதாசா

வினால் அமைக்கப்பட்ட பின்னரே சென்றமாதம் யாழ்ப்பாணத் தில் ஐந்து முனைகளிலும், முல்லைத்தீவிலும், மன்னாரிலும், வவுனியாவிலும் ஒரே நேரத்தில் புலிகளுக்கெதிராக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வேலைப்பெருக்கத்தை நீக்குவதற்காக உண்மையில் புதிய கூட்டுப்படைத் தலைமைப்பீடம் முன்பிருந்த கூட்டுப்படைத்தலைமைப்பீடத்தின் கட்டமைப்பையே பாவிக்கின்றது. போர்முறைகளை முன்னெடுத்துச் செல்லும் தலைமைப்பீடத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் உண்டு. இந்தப் பிரிவுகளைக் கொண்டு நடத்தும் தளபதிகள் ஒவ்வொருவரும் இரு சிறப்பு கடமைப் படை (*Task Force*) பிரிவுகளைக் கொண்டுள்ளார்கள். அதிரடிப் பிரிவுத் தளபதிகள் தங்கள் பிரதேசத்திலுள்ள பிரிகேட்டுகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பர்.

முப்படைகளில் உயர்ந்த பதவி வகிப்போர் நெருங்கித் திட்டமிடுவதற்கும், தொடர்பு கொள்வதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதற்கும், போர் நடவடிக்கைகளை வெற்றிகரமானதாக ஆக்குவதை உறுதிப் படுத்துவதற்காகவுமே இராணுவத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. சிறப்பு கடமைப் படைப்பிரிவின் உருவாக்கம் இராணுவக் கட்டளையிடும் அமைப்புக்குள் கூடுதலான ஒரு பிரிவை உருவாக்கிய போதிலும் நல்ல விளைவுகளைப் பெறுவதற்கு இது தேவை என மூத்த படைத் தளபதிகள் கூறுகிறார்கள்.

புதிய மாற்றங்கள் துருப்புகளையும் கருவிகளையும் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்குக் கொண்டு செல்வதை சுலபமாக ஆக்குகின்றது எனவும், துருப்புகளை அமர்த்துவதை சரியான வழியில் மறுபரிசீலனை செய்ய உதவுவதாகவும், சண்டை நடக்கும் இடங்கள் எங்கும் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக துருப்புக்களைக் கொண்ட பல பட்டாலியன்களைக் கொண்ட நடமாடும் படையணி ஒன்றை உருவாக்கவும் இது உதவியுள்ளது எனவும் படைத்தளபதிகள் கூறுகிறார்கள்.

ஒவ்வொன்றும் 10, 000 பேர்களைக் கொண்ட, வான்படை மற்றும் கடற்படை ஆகியன காவல் கடமைகளைப் புரிந்து வரும் படையினரை அதிலிருந்து விடுவித்து உதவுவதற்காக தங்கள் படையில் உள்ள தரைப்படையினர் சிலரைக் கொடுத்துள்ளது. தேசிய காவல் துறையினர் (*National Guard Battation*) உட்பட தற்பொழுது படையில் சுமார் 100,000 துருப்புக்கள்

உள்ளனர். இதன் விகிதாசாரம் படையினர் 60 விகிதமும் தேசிய காவல் துறையினர் 40 விகிதமுமாகும்.

சிதைவுறுத்தப்பட்டபோதும் இப்பொழுதும் விடுதலைப் புலிகள் வலிமையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என படைத் தளபதிகள் கூறுகிறார்கள். விடுதலைப் புலிகளை பற்றிய புல னாய்வின் கணிப்புகள் அவர்களிடம் தேர்ச்சியடைந்த போராளி கள் 2000 பேர் உட்பட 6000 - 7000 போராளிகள் இருப்ப தாக எடுத்துக் காட்டுகின்றது. எண்ணற்ற படையினரைப் பலி கொண்ட தாக்கி மறையும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திய பின்னர், புலிகள் சென்றமாதம் தெல்லிப்பழையை இழந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான சாவகச் சேரியைப் போன்ற இவ்விடம் புலிகளுக்கு மிக முக்கியமான இட மாகும். அத்துடன் கடல் புலிகளுக்கு வசதிகளைக் கொடுக்கும் குடாநாட்டின் வடக்குக் கரையும் அத்துடன் அடர்ந்த காடு களுக்குள் உள்ள தளங்களுக்குப் பொருள்கள் வழங்கல் செய்வ தற்கு நன்றாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்ட தளங்களைக் கொண்ட அலம்பிலையும் புலிகள் இழந்துள்ளார்கள்.

இத்துடன் கடல் கண்காணிப்புகளை அவதானித்து இர வில் கடல்கண்ணிகளை வெடிக்க வைக்க உபயோகப்படுத்தும் றாடர் (Radar) நிலையத்தையும் அவர்கள் இழந்துள்ளார்கள். கடல் கொந்தளிப்பு இல்லாதிருந்தால் கூடுதலான அழிவை புலி கள் சந்தித்திருப்பார்கள் என படைத்தளபதிகள் கூறுகிறார்கள். வானூர்தி தாக்குதல், பீரங்கித் தாக்குதல், மற்றும் ஏவுகணைத் தாக்குதல், ஆகியவற்றுக்கு கடல்புறா உள்ளாக்கப்பட்டபோது பல கடல் தலைவர்களை புலிகள் இழந்துள்ளாரகள் என கடற் படைத் தளபதி கிளான்சி பெர்னாந்தோ கூறுகிறார். புலிகள் எரிபொருள் பதுக்கிவைத்திருந்த இடமொன்றும் தீப்பற்றி நாச மாகியுள்ளது. புலிகள் வடக்கிலிருந்து தெற்குக்கு நடமாடுவதைத் தடுக்கும் நோக்குடன், முல்லைத்தீவு, அலம்பில் மற்றும் புல் மோட்டை ஆகிய இடங்களில் கடற்படையினர் தளங்களை அமைத்துள்ளனர்.

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் ஒரு சிறிய அள வில் வெளிநாடுகளிலும் விடுதலைப் புலிகள் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதால் இந்த இயக்கத்தைப் பலமிழக்கச் செய்ய பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற வாதம் வலுப்பெறுகின்றது. யாழ்ப்பாணத்தைக் கைப் பற்றுவதன் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாதென் பதை வான்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தன ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் அரசியல் தீர்வு ஒன்று கொண்டுவரு வதற்கு கிளர்ச்சியின் தீவிரத்தன்மையை கூடுமானவரை குறைக் கவே இராணுவம் எண்ணுகின்றது எனவும் இவர் கூறுகின்றார்.

# திரு. கோபாலசாமியின் எழுச்சி

—தாரகி—

(ஜலண்ட்- 14 06.92)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக திரு. கருணாநிதி அவர்களுக்குப் பின் யார் பதவி ஏற்பார்? இந்தமாதம் முற்பகுதியில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் கட்சித்தேர்தல் நடந்துகொண்டிருந்த வேளையில் தமிழ்நாட்டு வாக்காளர்கள் மனத்தில் தோன்றிய முக்கிய கேள்வி இதுவேயாகும். இந்தியாவில் ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்ட கட்சிகளில் ஒன்றான இக்கட்சியின் தலைமைத்துவத்துக்கு பெரும் போட்டியிருப்பதை, இதற்காக நடந்த விறுவிறுப்பான போட்டி எடுத்துக் காட்டியது. இத்தேர்தலில் திரு. கருணாநிதிக்குப் பின் பெரும் செல்வாக்கும், வலிமையும் மிக்கத் தலைவராக திரு. கோபாலசாமி எழுச்சி பெற்றார்.

கட்சியின் இளைஞர் மன்றத்தின் தலைவரும் திரு. கருணாநிதியின் மகனுமாகிய திரு. மு க. ஸ்ராலின் அவர்கள் கட்சியின் தலைவராக வரக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்க திராவிட முன்னேற்றக்கழகத் தலைமைத்துவம் பெரும் முயற்சி எடுத்துவந்துள்ளது. திரு. கோபாலசாமியின் தீவிரமான பேச்சுக்களாலும் ரஜீவ் காந்தியின் கொலைக்குப் பின் திரு. பிரபாகரனுடன் அவர் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பினாலும் திரு. கருணாநிதி அமைதி இழந்தார். விடுதலைப்புலிகளை மறைத்து வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட திரு. கோபாலசாமியின் சகோதரரான திரு. ரவிச்சந்திரன் அவர்கள் சிறப்பு காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்தக்கொலை தொடர்பாக திரு. கோபாலசாமியும் கைதுசெய்யப்படுவார் என்ற சான்றில்லா செய்திகளும், ஊகங்களும் தமிழ்நாட்டுப்பத்திரிகைகளில் வரத்தொடங்கின. தமிழ் நாட்டைவிட்டு ராஜீவ் காந்தி உயிருடன் செல்லமாட்டார் என ராஜீவ்காந்தி கொல்லப்படுவதற்கு சற்றுமுன் அவர் தனது உரையொன்றில் கூறியதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிரிகள் கூறியுள்ளனர். விடுதலைப்புலிகளை ஒதுக்கி நடக்கவேண்டும் என்ற கட்சியின் தீர்மானத்துக்கு மாறாக திரு. கோபாலசாமி தொடர்ந்தும் தீவிரவாதப் போக்கை கடைப்பிடித்திருந்ததினால் அவருடைய பேச்சுக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் சிக்கலாக இருந்தன.

கட்சி உறுப்பினர்கள் புலிகளைப்பின்பற்றி நடக்கவேண்டும் எனவும், திராவிட முன்னேற்றத்திற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டால், அவர்களும் விடுதலைப்புலிகளாக மாறவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். இதன் காரணமாக அவரை கட்சியிலிருந்து வெளியேற்ற கட்சிக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திரு. கோபாலசாமியை ஒன்றில் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் அல்லது அவரை ஒதுக்கியாகுதல் வைத்திருக்க வேண்டும் என மத்திய புலனாய்வுத்துறையினரும், அரச அதிகாரத்திலுள்ளவர்களும் திரு. கருணாநிதிக்கு நெருக்குதல் கொடுத்தனர். ஆனால் இந்த விடயத்தை கட்சியின் மத்திய குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்த பொழுது திரு. கருணாநிதி கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது.

திரு. கோபாலசாமியின் இடத்தை நிரப்புவதற்கு தென் மாவட்டங்களில் குறிப்பாக அந்தப்பகுதியில் போர்க்குணம் கொண்ட சாதியினரான மறவர் சமூகத்தில் ஒருவர்தானும் இருக்கவில்லை என அப்பொழுது பேசப்பட்டது. ஆனால் திரு. கருணாநிதி மற்றும் அவருடைய மருகரான திரு. முரசொலி மாறன் ஆகியோரின் வெறுப்புக்கு மத்தியிலும் திரு. கோபாலசாமியின் செல்வாக்கும் அதிகாரமும் கட்சிக்குள் வேகமாக வளர்ச்சி பெற்றது. இறுதியாக இந்த மாதத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் தேர்தலில் இவர் கட்சிக்குள் தனது அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளார். திரு. கோபாலசாமியை தோற்கடிப்பதற்காகவே திராவிட முன்னேற்றக்கழகத்தின் இளைஞர் மன்றத்தை இந்தத் தேர்தலில் திரு. கருணாநிதி ஈடுபடுத்தினார் என தமிழ் நாட்டுப் பத்திரிகையின் ஒரு சாரார் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் திரு. கோபாலசாமிக்கு சார்பானவர்கள் பெரும்பான்மையான மாவட்டக் கிளைகளில் வெற்றியை ஈட்டிய

224SC.L

வேளையில் திரு. மு. க. ஸ்ராலினின் இளைஞர் மன்றத்தால் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் படுதோல்வியைத் தழுவிக் கொண்டனர். விடுதலைப்புலிகளின் இலட்சியத்தில் தனக்குள்ள பற்றை திரு. ஸ்ராலின் அடிக்கடி வெளிப்படுத்திவந்த போதிலும் ரஜீவின் கொலைக்குப் பின், தனது தந்தையின் பாதையைப் பின்பற்றி நடக்கவிரும்பினார். இதற்கு மாறாக திரு. கோபாலசாமி, திருவாளர்கள் பிரபாகரனும், மாத்தையாவுடனும் மனமார்ந்த உறவை பேணி வருகின்றார்.

திரு. கோபாலசாமியை ஒதுக்கி அவரை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் திரு. கருணாநிதியைக் கண்டித்துள்ளார்கள். கூடிய சீக்கிரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிகாரத்திற்கு வராதுவிடினும் கட்சிக்குள் தங்களின் நண்பரின் எழுச்சி தமிழ்நாடு முழுவதும் உள்ளதும் நன்றாக அமைக்கப்பட்டதுமான திராவிட முன்னேற்றக்கழகத்தின் உறுப்பினர்கள் மீது ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென்பதை புலிகள் நன்கு அறிவர்.

தனது தீவிரமான பேச்சுக்களால், தமிழ்த் தீவிரவாதத்தை, தமிழ்த் தேசிய வாதம் என திரு. கோபாலசாமி வலியுறுத்துவதால் உண்மையாகவே இப்படியானதாக்கம் புலிகளுக்கு நன்மையையே விளைவிக்கும்.

தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களில் மேலாதிக்கம் கொண்டவர்களும், மரபுவழியாக போர்க்குணம் கொண்ட மறவர்களைத் தங்கள் பக்கம் ஈர்ப்பதற்காக பிரிவினைக்கான போராட்ட காலத்தில் தமிழ் மக்களின் மரபுவழிப் போராட்ட தன்மைகளையும், சிறப்புக்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் மேன்மைப்படுத்தி வந்தது.

தமிழ் நாட்டின் தென்பகுதியில் செல்வாக்கைப் பெற்ற போர்க்குணம் கொண்ட சாதியிலிருந்து திரு. கோபாலசாமி ஒரு இளம் தலைவராக எழுச்சி பெற்றார். 1983ம் ஆண்டிலிருந்து 1987ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதில் திராவிட முன்னேற்றக்கழகம் ரெலோ (TELO) இயக்கத்தினரை ஆதரித்த பொழுது இவர் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டார். இந்திய அமைதி காக்கும் படையினர் விடுதலைப் புலிகளுடன் போர் புரிந்துகொண்டிருக்கும் வேளையில் திருவாளர்கள் பிரபாகரனையும், மாத்தையாவை

224SC

யும் வன்னிக்காடுகளுக்குள் இரகசியமான முறையில் சந்திப்ப தற்கு வந்ததன் மூலம் இவர் ஒரு சர்ச்சைக்குரிய ஆளரானார்.

தமிழ் தேசியவாதம் பற்றிய தனது கருத்துக்களை விடு தலைப் புலிகளுடன் தான் ஏற்படுத்திக்கொண்ட நெருங்கிய உற வுகள் மாற்றிவிட்டன என இவர் பின்னர் ஏற்றுக்கொண் டார். இதன் பின் இவர் தன்னுடைய பேச்சுக்களின் போது போது தமிழருடைய மரபுவழிபோர் ஆற்றல் பற்றியும், புலிகள் புரியும் போரையும் உதாரணமாகக்காட்டி பேச ஆரம்பித்தார். பகைவர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட பொழுது தற்கொலை புரிந்துகொண்ட பண்டைய மன்னனான இரும்பொறையைப் பற்றிய வீரகாவியமும் தன்மானமுள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும் என்ற கருத்தை இவர் கொண்டிருந்தார்.

மதுரையில் நடாத்தப்பட்ட திராவிட முன்னேற்றக்கழக மகாநாட்டின் போது "வையன்னா கோவன்னாவின் தற் கொலைப்படை" (கோபாலசாமி அவர்கள் அவரின் முதலெ ழுத்துக்களாலேயே அழைக்கப்படுவது வழக்கம்) என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கொடியைத் தாங்கிக் கொண்டு பல இளை ஞர்கள் பவனிவந்தனர். அதைக்கண்டு அதிர்ச்சியடைந்த திரு. கருணாநிதி உடனடியாக அந்தக்கொடியை நீக்கும்படி அந்த இளைஞர்களை வற்புறுத்தும்படி தனது தோழர்களை பணித் தார் என 1992ம் ஆண்டு ஜூன் மாதம் 3ம் திகதி வெளிவந்த ஜூனியர் விகடன் கூறுகின்றது. திரு. வை. கோபாலசாமிக்கு கட்சிக்குள் இருக்கும் செல்வாக்கை எப்படியும் இல்லாது செய்ய வேண்டும் என்று திரு. கருணாநிதி உறுதி பூண்டுள்ளார்.

ஆனால் இது ஒரு சிக்கலான விடயம் என்பதை திராவிட முன்னேற்றக்கழகக் கட்சியின் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன. திரு. கோபாலசாமி ஒருதீவிரவாதத் தலைவ ராக வர இயலாது. ஆனால் அவர்மேல் பொதுமக்களுக்குள்ள மதிப்பும் அவரின் பேச்சாற்றலும், தமிழ்நாட்டில் ஜெயலலிதா வுக்கும், டெல்லிக்கும் எதிரான உணர்வலைகளை வளர்க்க முயல்வோர் இடையே தமிழ் தேசிய உணர்வையும், போராட்ட தன்மையையும் வளர்க்கின்றது.

# யூதர்களின் வரலாற்றில் புதிய கருத்துக்கள்

(நியூசுவீக்-18-5-92)

## இசுரவேலின் பண்டைக் காலத்தைப் பற்றிய எண்ணங்கள் மிகவும் தவறானவையா?

இந்தக் கதையின்படி ஓர் இசுரேலிய மாணவனை யானையைப் பற்றிய கட்டுரை வரையும்படி கோரப்பட்டது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட வினாத்தாளின் தலையங்கம் ''யானைகளும் யூதர்களின் பிரச்சினைகளும்'' என்றிருந்தது.

பேரழிவினால் ஏற்பட்ட சாம்பல் மேட்டின்மேல் இசுரேல் என்ற நாடு கட்டி எழுப்பப்பட்டுள்ளது. யூதர்களின் தலைவிதி இசுரேலுடன் ஒட்டி உறவாடுவதோடல்லாமல், அதில் அம்மக்களுக்கு ஒரு தனிப்பட்ட ஆர்வமும் இருக்கின்றது. தற்போதைய இசுரேலின் பார்வையில், அதன் வரலாறு ஆய்வு முறைகளிற் பல, உண்மைக்குப் புறம்பானவை என அறிவுழைப்பினரும் அறிவாளர்களும் எதிர்த்துவருகிறார்கள். உண்மையான வரலாற்றை பார்க்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இப்படியானவர்கள் தாங்கள் யூதர்களின் உண்மையான வரலாற்றை அறிந்தவர்கள் எனக் கூறிக்கொண்டு தங்கள் கருத்துக்கு எதிராக செயல்படும் தற்போது நடைமுறையிலுள்ள வரலாற்றுப் பிரிவுக்கு ஒரு பெயரும் சூட்டியுள்ளனர். அதாவது அதை யூதர்களின் வரலாற்று லச்றிமோசு (Lachrymose school of Jewisd History) எனக் கூறுகின்றனர். யூதர்கள் பட்ட இன்னல்களை இந்த இசுரேல் நாடு வரப்போகும் சந்ததியினர்களுக்குப் போதிக்க வேண்டும். அதே வேளையில், இசுரேல் இவ்விடயத்தை மிகைப்படுத்துவதாகவும் எண்ணுகின்றனர். இந்த ஆய்வுப் பிரிவு வரலாற்றைப் போதிப்பதென வெளிக்காட்டிக்

கொண்டு யூதர்கள் பட்ட இன்னல்களையே போதிக்கிறது எனக் கிபுறு பல்கலைக்கழக வரலாற்று ஆசிரியர் திரு. றெபர்ட் விசுறுச் அவர்கள் கூறுகின்றார்.

ஸ்பெயினிலிருந்து (Spain) யூதர்களை வெளியேற்றி இவ்வாண்டு 500 ஆண்டுகள் முழுமையடைகின்றன. இவ்வாண்டு இந்தச் சிக்கல் எழுந்துள்ளது. இந்த யூத வெளியேற்றம் நாடுபூராவும் அரசாங்கத்தால் துக்க தினமாக நினைவு கூரப்படுவது பொருத்தமானதாகும். இச்சிக்கலில் வேண்டுமென்றே சில விடயங்கள் மறந்தவைபோல் விடப்பட்டுள்ளன என இந்தச் சிக்கலைப் பற்றி விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள். ஸ்பானிய யூதர்கள் மட்டும் தான் கிறிஸ்தவ ஸ்பெயின் நாட்டிலிருந்து விரட்டப்படவில்லை. அதிக எண்ணிக்கையான முசுலிம் இனத்தவர்களும் அவர்களது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இன்னல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் தப்பி வெளியேறிய யூதர்களை ஒட்டமான் பேரரசன் 2வது சுல்தான் பயிசிட் (Sultan Bayezid) தனது நாட்டில் உடனடியாகக் குடியமரும்படி கோரினான் என்பதையும் அங்கே அவர்கள் சில நூற்றாண்டு காலம் செழிப்பாக வாழ்ந்துவந்தனர் என்பதையும் இந்த அரச நிகழ்ச்சிகள் மூடிமறைக்கின்றன.

பிரதம மந்திரி திரு. யிற்சாக்சாமிர் (Yitzhak Shamir) அவர்களின் லிகுட் கட்சி (Likud) 1977ம் ஆண்டு பதவியேற்ற பின்னர் இம்மாதிரியான எதிர்மறை வரலாறே அரசாங்கப் பாடசாலைகளில் போதிக்கப்பட்டுவருகின்றது. இந்த லிகுட் கட்சி அரசாங்கம் எப்பொழுதும் கல்வியமைச்சை, வெளியுலகத்தை வெறுக்கும் தேசிய மதக்கட்சிக்கு ஒதுக்கிவைத்துள்ளது. இந்த தேசிய மதக்கட்சி லிகுட் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து இருக்கும் ஒரு சிறிய கட்சியாகும் லிகுட் கட்சியும் அதன் தோழமைக்கட்சிகளும் யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை முன்னணிக்குக் கொண்டுவந்த இசுரேலில் மாத்திரம் தான் யூதர்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழமுடியும் என்ற மாயையைத் தோற்றுவிக்கிறார்கள் என இதை விமர்சிப்பவர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட கொள்கைகளினால் இந்த வலதுசாரித் தலைமைத்துவத்தை தற்போதுள்ள விமர்சனத்திலிருந்து பாதுகாக்க முடியும் என அரசாங்கம் நினைக்கின்றது என சில அறிவியலாளர்கள் நம்புகின்றனர். கல்விபுகட்டப்படும் பொழுது வரலாறு போதிக்கப்படவில்லை. எங்கள் நாட்டுக்கு எல்லாரும் எதிரிகள் என்ற கொள்கையைத் திணிக்கின்றார்கள் என்கின்றார் கிபுறு பல்கலைக்கழகத் தத்துவப்பேராசிரியர் அபிசாய் மார்காலிட் அவர்கள்.

## பாட்டுப்போட்டி

செமற்றிக்(Semetic) என்ற இனம் யூதர்களையும் அராபியர்களையும் குறிக்கின்றது அத்துடன் யூதர்களின் கடவுளான நோவாவின் மகனின் வழித்தோன்றல்களான யூதர்களையும் குறிக்கின்றது. யூரோவிசன் பாட்டுப் போட்டியின் முடிவை வைத்து எல்லோரும் செயற்றிக் இனத்தவர்களுக்கு அதாவது யூதர்களுக்கு எதிரானவர்கள் என மிகைப்படுத்திக் காட்டவும், மக்களின் மனதில் தாக்கங்களை ஏற்படுத்தவும் முடியும் என அரசு எண்ணியது. சென்றவருடம் யூரோவிசன் (Eurovision) என்றழைக்கப்படும் பாட்டுப்போட்டியில் பங்கேற்ற இசுரேல் குழுவினருக்கு இரண்டாம் இடம் கிடைத்தது. செர்மனியர்கள் இசுரேலியர்களின் மெட்டுக்கு வாக்களிக்கவில்லை எனவும் இது செர்மனியர்களின் செமற்றிக் இன எதிர்ப்பைப் பிரதிபலிக்கின்றதெனவும் இசுரேலிய பாராளுமன்றமான நெசற் (Knesset) றின் சபாநாயகர் திரு. டோவ் சிலான்க்கி குறைகூறினார். இந்த மனப்போக்கு ஒன்றே திரு சாமிரின் அரசாங்கத்துக்குத் தாங்கள் கைப்பற்றிய நிலப்பரப்புக்களை வைத்திருப்பதற்குப் போதுமானதாக இருந்தது. இசுரேலிய அரசாங்கத்தின் கொள்கைகளை வேறு நாடுகள் எதிர்க்கும் பொழுது அதை செமற்றிக் இனத்தவர்களுக்கு எதிராகச் செயற்படும் கொள்கை எனக்கூறி நிராகரிக்கிறார்கள் எனக்கூறுகின்றார் காரெற்சு (Haaretz) பத்திரிகையாசிரியர் திரு.கிடியன் சமற் அவர்கள். செமற்றிக் இனத்தவர்களுக்கு எதிரானது எனக்கூறும் குற்றச்சாட்டுக்கள் யூத நாட்டின் இரகசியமற்ற வெளிப்படையான ஆயுதங்கள் என அவர் மேலும் கூறுகின்றார். மட்ரிட் (Madrid) டில் நடைபெற்ற இணக்கப் பேச்சுவார்த்தைகளில் இசுரேலை பங்கெடுக்கச் செய்ததன் மூலம் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் அவர்களும், அமெரிக்க இராசாங்க அமைச்சர் திரு.யேம்ஸ் பேக்கர் அவர்களும் செமற்றிக் இனத்தவர்களுக்கு எதிரானவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்கள்.

அமெரிக்காவிலுள்ள யூதர்கள் வளமான வாழ்க்கை நடத்துவது லக்றிமோசு ஆய்வுப் பிரிவினருக்குத் தடையாகவுள்ளது. இசுரேலிய சியோனிசுவாதிகள் (யூத தாயக இயக்கத்தினர்) தங்கள் யூதநாட்டுக்கு வந்த குடியமரவேண்டுமென்று வேறுநாடுகளிலிருக்கும் யூதர்களைக் கோரும்போது அமெரிக்க யூதர்களை விட்டுவிடுகின்றனர். இந்தவிடயம் பற்றி பேச்சு எழும்போதெல்லாம், அமெரிக்கா செமற்றிக் இன எதிர்ப்பாளர்களின் புகலி

டம் என இசுரேலிய சியோனிசவாதிகள் கூறிக்கொள்கின்றனர். அமெரிக்காவில் அமைந்துள்ள மக்களை அவமதிப்பதற்கு எதிரான கழகம் (Anti Defamation Leaque) செமற்றிக் இனத்தவர்களுக்கு எதிரான 1879 சம்பவங்களை வெளியிட்டபோது அங்கு அமெரிக்காவில் எவரும் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஆனால் இசுரேலில் அவ்வறிக்கை தலையங்கச் செய்தியாக வெளியிடப்பட்டது.

அமெரிக்காவிலுள்ள யூதர்கள் மதச்சம்பந்தமான விடயங்களில் பாகுபாடுகளை எதிர்நோக்குவதில்லை என்பது சில இசுரேலியர்களைப் பீதியடையச் செய்கிறது. அமெரிக்க யூதர்கள் அந்த நாட்டு மக்களுடன் கலப்பதால் ஏற்படும் விளைவு இது என அவர்கள் கலங்குகிறார்கள். இப்படியான சம்பவங்கள் இரண்டாவது பேரழிவுக்கு இட்டுச்செல்லும் என அஞ்சுகிறார்கள். அண்மைய புள்ளிவிபரங்களின் அமெரிக்காவிலுள்ள யூதர்களின் 50% வரையானோர் தங்கள் மதமல்லாத வேற்று மதத்தினரை திருமணம் செய்துள்ளதாகவும் தங்கள் பிள்ளைகளை யூதப் பிள்ளைகள் போல் வளர்ப்பதில்லை என்பதும் தெரியவந்துள்ளது. நீண்ட காலம் இப்படி நடந்தால் அமெரிக்காவில் யூத மக்கள் இல்லாமற் போய்விடுவார்கள் என யூத சமுதாய புள்ளிவிபர ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வரலாற்றைப் பொறுத்தவரை இசுரேலிய வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றுப் பாடத்தில் சமநிலை பேணப்பட வேண்டும் எனக் கூறிய போதும் இந்த எதிர்மறைக் கொள்கையை அடியோடு விட்டுவிடவும் அவர்கள் விரும்புகிறார்களில்லை. 15ம் நூற்றாண்டில் ஸ்பெயின் (Spain) நாட்டில் யூதர்கள் வாழ்வது கடினமாகவிருந்ததெனை ஸ்பெயினைப் பற்றிய விடயங்களில் நிபுணராக விளங்கும் கீபுறு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு கெயிட் பெயிட் கூறுகின்றார். உண்மையில நிகழ்ந்தவற்றையே வரலாற்றில் போதித்துவருவதாக அரசாங்க மேலாளர்கள் ஆணித்தரமாகக் கூறிவருகின்றனர். கடந்தகாலத்தைப்பற்றிப் போதிக்கும்போது நடந்தவற்றை அப்படியே புகட்டுவது எதிர்மறையானது என்றால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகலல்லர் எனக் கல்வி அமைச்சைச் சேர்ந்த மேலாளர் ஒருவர் கூறுகின்றார்.

ஒரு வழியிலோ அல்லது வேறு வழியிலோ வரலாற்றுப் பாடங்கள் அனைத்தும் தெரிந்தெடுக்கப்படவேண்டியவை. யூதர்களுக்கு இழைக்கப்பட்ட துன்புறுத்தல்களை கட்டாயமாக எடுத்துக்காட்டுவதன் மூலம் வரலாற்று வாயிலாக யூதர்களின் சாத

னைகள் மறைக்கப்படுவதற்கு இசுரேலிய மேலாளர் சிலவேளைகளில் வழிவகுக்கின்றனர் போல் தெரிகின்றது. ''தேசிய இயக்கத்தில் பங்குகொள்ளாத அயன்ஸ்ரின் (Einstein) மற்றும் ஏனைய அறிவியலாளர்களிலும் ஒவியர்களிலும் அவ்வளவு அக்கறை காட்டப்படாது இரண்டாந்தர, மூன்றாந்தர சியோனிச வாதிகளின் பெயர்கள், அவர்கள் இறந்த பின்னர் வீதிகளுக்குச் சூட்டப்பட்டுள்ளது'' எனக் குறிப்பிடுகின்றார் வரலாற்று ஆசிரியரான விசுறிச் அவர்கள். ஆனால் இசுரேலியர்களின் உலகப்பார்வையைச் சீர்செய்ய லக்றிமோசு ஆய்வுப் பிரிவினரால் எடுக்கப்பட்ட முடிவு என்கிறார். இசுரேலியருடைய வரலாற்று நூல்கள் தேசிய பாதுகாப்பின்மையை வலியுறுத்தி வருகின்றன. இன்று மத்திய கிழக்கு சிக்கலைத் தீர்ப்பதற்கு இந்தக் கருத்தும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது.

**குறிப்பு:-**

அண்மையில் இசுரேலில் நடந்த தேர்தலில் லிகுட் கட்சி தோல்வி அடைந்துள்ளது. தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்துள்ளது.

சாதாரண மக்கள் நிபுணர்கள் ஆவதற்கான அளவுக்கு அறிந்து வைத்துக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் நிபுணர்கள் மத்தியில் சிறந்தவர்கள் யார் என்று அவர்களால் தீர்மானிக்க முடியும்.

—சாமுவேல் பட்லர்

# முஜாகுதீன்களுடைய வெற்றி தென் ஆசியாவின் அதிகாரச் சம நிலையை நிலைகுலையச் செய்துள்ளது

(லியன் ஒக்கேர்சு டெயிலிநியூசு - 19.06.92)

இன்னொருவரால் பெறப்பட்ட வெற்றி என இதை ஒதுக்கிவிட்டிருக்கலாம். இருந்த போதிலும் போர் பல கண்டு விழுப்புண் ஏந்திய ஆப்கானிஸ்தானிய முஜாகுதீன் காபூலுக்குள் வெற்றிநடை போட்டுச் சென்ற போது 20 ஆண்டுகாலமாக பாகிஸ்தானுக்கு இருந்து வந்த பாதுகாப்பற்ற நிலை ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

1971ம் ஆண்டு ஒரு திருப்புமுனை தோன்ற ஆரம்பித்தது. தேசிய விடுதலைக்காக கிழக்குப் பாகிஸ்தானியரால் நடாத்தப்பட்ட போர் பங்களாதேசம் என்ற நாட்டை உருவாக்க வழி வகுத்தது. பாகிஸ்தானை நிரந்தரமாக இரு கூறுகளாக ஆக்கும் பங்கை உண்மையில் இந்தியாவே வகித்தது.

இந்தியா தேசிய விடுதலை இயக்கங்களின் காவலன் என்பதன் நம்பகத்தன்மை எப்படி இருந்தபோதிலும் பாகிஸ்தானைப் பலமிழக்கச் செய்து தென்ஆசியாவில் அதை ஒரு பலம் குறைந்த நாடாக ஆக்குவதற்கு இந்தியா சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது என்பது விரைவில் தெளிவாயிற்று. பங்களா தேசத்தை உருவாக்கியதன் மூலம் அது தன்னுடைய குறிக்கோளை நிறைவேற்றிக்கொண்டது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னுள்ள இருபது ஆண்டுகாலமும் இந்தப் பிராந்தியத்தில் இந்தியா தன்னை ஒரு ஆற்றல் மிக்க

நாடாக வளர்த்து வந்துள்ளதைக்காணலாம். இராணுவரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்தியா தென்ஆசியாவில் வலிமையுள்ள நாடாக விளங்கியது. இதன் செல்வாக்கு குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் விரைவில் வளர்ச்சி அடைந்தது. உலக நாடுகளில் இந்தியா செல்வாக்குச் செலுத்தக்கூடிய இதன் ஆற்றலை யாரும் சந்தேகிக்க முடியாதிருந்தது.

மறுபுறத்தில் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த பங்கை வகிப்பதில் பாகிஸ்தான் திருப்திப்படவேண்டியிருந்தது. ஆப்கானிஸ்தான் மீது சோவியத் ஒன்றியம் 1979ல் மேற்கொண்ட படையெடுப்பு, பாகிஸ்தானின் பாதுகாப்பின்மையை அதிகரித்ததுடன் அதன் மேற்குப்பக்கம் சோவியத் நாட்டின் தாக்குதலுக்கு உள்ளாக்கக்கூடிய நிலையிலும் இருந்தது. அப்படியிருந்தும் சோவியத்நாட்டின் படையெடுப்பு பாகிஸ்தானுக்கு எண்ணற்ற வாய்ப்புக்களையும் கொடுத்தது.

ஆப்கானிஸ்தான் முஜாகுதீன்களையே தனது துருப்பாகப் பாவிக்க பாகிஸ்தான் முடிவெடுத்தது. சோவியத் நாட்டுக்கு சார்பான கம்யூனிச அரசைப் பலமிழக்கச் செய்வதற்கு மாத்திரமின்றி இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதற்கும் இவர்களைப் பயன்படுத்த பாகிஸ்தான் எண்ணியது. இவர்களைத் தூண்டுகோலாகப் பாவித்து இவர்களின் சார்புடன் மேற்காசியாவின் விடயங்களில் தன்னுடைய செல்வாக்கைச் செலுத்தப் பாகிஸ்தான் கருதியது.

முஜாகுதீன்களை ஆதரிப்பது அமெரிக்காவுக்கும் நன்மை பயப்பதாக அப்பொழுது இருந்தது. பாரசீகக்குடாப் பிரதேசத்துக்குள் எப்பொழுதும் சுதந்திரமாக நடமாடுவதை அமெரிக்கா விரும்பியது. பத்து ஆண்டுகளாக நடைபெற்ற போரில் முஜாகுதீன்களை இராணுவரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் அமெரிக்காவும், பாகிஸ்தானும் போதியளவு ஆதரித்து வந்துள்ளன.

பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில், பொறுமை அவர்களுக்கு நன்மையைக்கொடுத்துள்ளது. சோவியத் ஒன்றியம் சிதைவுற்றவுடன், காபூலிலுள்ள கம்யூனிச அரச வீழ்ச்சியுற்றதும் காபூலை முஜாகுதீன்கள் கைப்பற்றியதும் தென் ஆசியா மற்றும் தென் மேற்கு ஆசியாவின் அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. பாகிஸ்தானின் மேற்கெல்லையில் அதற்கு நட்புநாடுகள் உண்டு. இந்த இஸ்லாமிய நட்பு நாடுகளுடன் சேர்த்து பாகிஸ்தான் கூட்டுறவு

நட்பை ஏற்படுத்தலாம். ஏப்பிரல் 29ம் திகதி காபூலுக்கு வருகை தந்ததன் மூலம் பாகிஸ்தானிய பிரதம மந்திரி திரு. நவாஸ் செரீப் எதிர்காலத்தில் அந்த நாட்டுடன் ஏற்படுத்தக் கூடிய உறவுகளுக்கு அடிக்கல்லை இட்டுள்ளார்.

பார்வையாளர்கள் கூறுவதுபோல ஆப்கானிஸ்தானில் தோன்றியுள்ள புதிய நிலைமைகள், பாகிஸ்தானின் போர்த்திற தன்மைக்கு வசதியாக இருக்கின்றன. ஆப்கானிஸ்தானை முஜாகுதீன்கள் கைப்பற்றமுன் பாகிஸ்தானின் மேற்கு மற்றும் கிழக்கு எல்லைகள் இராணுவ ரீதியில் பாதுகாப்பற்ற எல்லைகளாக இருந்தன. மேற்கு எல்லை சோவியத் ஒன்றியத்தினாலும், கிழக்கு எல்லை இந்தியாவினாலும் தாக்கக்கூடிய நிலையில் இருந்தன. தற்பொழுது மேற்கு எல்லையையிட்டு அது கவலை கொள்ள வேண்டியதில்லையாகையால், கிழக்கு எல்லையிலுள்ள இந்தியாவிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் தனது முழுக்கவனத்தையும் செலுத்த முடியும்.

மறுபுறத்தில் இந்தியா தன் வடபகுதியிலுள்ள பல இஸ்லாமிய நாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பாகிஸ்தானுடன் ஆப்கானிஸ்தானையும் ஈரானையும் சமாளிக்க வேண்டியுள்ளது. விடயங்களை மேலும் சிக்கலாக்குவதற்கு முன்னைய சோவியத்தின் மத்திய ஆசியக் குடியரசுகளாகவிருந்து தற்பொழுது சுதந்திரம் பெற்ற கேர்கிசியா (Kirghizia) கசாகசுத்தான் (Kazakhstan) உசுபெகித்தான் (Uzbekistan) தட்சிக்கிசுதான் (Tadzikistan) துர்க்மெனிஸ்தான் Turkmenistan) மற்றும் அசர்பைசான் (Azerbaijan) ஆகிய நாடுகள் இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுபவையாயிருக்கின்றன.

பெருந்தொகையான அணு ஆயுதத்தைக் கொண்டிருக்கும் கசாகசுத்தான் தங்களுக்கு அச்சுறுத்தலாகவிருப்பதாக ஏற்கனவே மேற்குலக நாடுகள் கருதுகின்றன இந்த நாடுகள் எல்லாவற்றிலும் 300 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் உற்பத்தி வளங்கள் உள்ளவர்கள் என்றும் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்றும் பல தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்களென்றும் அறியமுடிகின்றது.

இந்த இஸ்லாமிய நாடுகளின் வளர்ச்சிப் பெருக்கம், இஸ்லாமிய அணி ஒன்று உருவாகுவதை எடுத்துக்காட்டுகின்றது என மேற்குலகநாடுகளின் தொலைத்தொடர்பு சாதனங்கள்

தெரிவிக்கின்றன. ஆகையால் தென் ஆசியப்பிராந்தியத்தில் அதிகாரசமநிலை தற்போது பாகிஸ்தானுக்கு சார்பாகவே இருக்கின்றது.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கம் சரிவுறுகின்றது என்று தற்போது கூறமுடியாவிடினும், அது தான் நினைத்தது போல் நடக்கமுடியாது என்று கூறுவதில் தவறேதுமில்லை. இந்தப்பிராந்தியத்தில் எழுச்சிபெற்றுவரும் இஸ்லாமிய நாடுகளின் இராணுவ, அரசியல் மற்றும் இராசதந்திர ஆதரவைப்பெறும் வாய்ப்பிருப்பதும், முன்னர் இருந்ததைவிட தற்போது சுய உறுதியும், சுயநம்பிக்கையுமுள்ளதுமான பாகிஸ்தானை இந்தியா எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இருப்பினும், இந்தப் பிராந்தியத்தில் கூடியவிரைவில் பதற்றம் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆயுதப்பெருக்கப் போட்டியில் தீவிரமாக ஈடுபடக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதுடன், பரீட்சார்த்திகரமாக மே மாதம் 29ம் திகதி இந்தியாவால் ஏவப்பட்ட இரண்டாவது நடுத்தர ஏவுகணையான அக்னி இதன் ஆரம்பப்படியாக இருக்கின்றது.

அணுவாயுதப் பரவலுக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், அமெரிக்கா நெருக்கடியைக் கொடுத்துவருகின்றது. காஷ்மீர் விவகாரத்தில் இந்தப்பிராந்தியத்திலுள்ள இரு வல்லரசுகளும் இறுதியாக போர்புரியும் நிலைக்குத் தள்ளப்பட்டு அந்தப்போரில் அணுவாயுதத்தை உபயோகிப்பார்கள் என்ற அச்சம் காரணமாகவே அமெரிக்கா இதில் விடாப்பிடியாக உள்ளது.

பலதரப்பட்ட ஆயுதக்கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் தனக்கு உண்மையிலேயே சவாலாக இருக்கக் கூடிய ஆற்றல் பெற்ற இந்த இரு நாடுகள் மீது தனது இராணுவ மேலாதிக்கத்தையும், இந்தப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கையும் நிலைநாட்டுவதற்கு அமெரிக்கா அக்கறையாகவிருக்கின்றது. ருசிய நிறுவனம் ஒன்று இந்தியா அண்டவெளி ஆய்வு நிறுவனத்திற்கு உந்துகணைகளின் தொழில்நுட்பத்தை (Rocket-Technology) வழங்குவதற்கு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டதிற்கு ருசியா மீதும் இந்தியா மீதும் அமெரிக்கா விதித்ததடை இதற்கு உதாரணமாகும்.

இந்த விடயங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது அக்னி ஏவுகணை பரீட்சிக்கப்பட்டது. அமெரிக்காவின் சர்வாதிகாரப் போக்கை இந்தியா எதிர்க்கின்றது என்று காட்டுவதற்கு மாத்திரமின்றி தனது சொந்த மூலவளங்களைக் கொண்டு தனது பாதுகாப்புத் தேவைவையை முழுமைப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளது என்பதையும் இந்த ஏவுகணையை ஏவியதன் மூலம் இதுவெளிக்காட்டியுள்ளது. இந்தியா அதனுடைய சட்டபூர்வமாக பாதுகாப்புத் தேவைகளைப் பெறுவதை யாராலும் தடுக்கமுடியாது.

இந்தியாவின் அயல்நாடுகளில் தோன்றியுள்ள புதிய அடிப்படைவாதம் பெரிய அளவில் ஆயுதங்களைப் பெருக்க அதைத் தூண்டும். அமெரிக்கா கொடுக்கும் நெருக்குதல்களால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. பிராந்தியத்தில் செல்வாக்கு மிக்கவர்கள் சட்டத்தை மதிக்காது தாங்கள் நினைத்ததைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். தென் ஆசியாவில் தன்னாதிக்கத்தைச் செலுத்துவது அமெரிக்காவுக்குச் சுலபமான காரியமாக இருக்கப்போவதில்லை.

இப்படியான சூழ்நிலைகளில் இந்தியாவிலுள்ள இந்துக்களின் கடும்போக்கு முன்னெப்போதுமில்லாதவாறு தீவிரமடையும். இந்தப்பிராந்தியத்தில் முஸ்லிம் அடிப்படைவாதத்தால் எழக்கூடிய அச்சுறுத்தல் பாரதீய ஜனதாக்கட்சிக்கு நன்மைபயப்பதாகவிருக்கும்.

இந்துசமயம் புத்தெழுச்சி பெறவேண்டுமென்ற கொள்கையையுடைய பாரதீய ஜனதாக்கட்சி, இந்துக்களைப் பெரும்பான்மையிராகக் கொண்ட இந்தியா அழிவை எதிர்நோக்கின்றது என்ற வெறியை ஊட்டும் கோஷத்தை எழுப்புவதன்மூலம், முஸ்லிம்களுக்கு எதிரானவெறுப்பை தூண்டிவிடக்கூடும். இந்தத் தீவிரவாதப் போக்குகள் காரணமாக இணக்கம் ஏற்படுத்த முடியாத தீவிரவாத இந்துவெறி அதிகரிக்க இடமுண்டு.

அதிகாரத்தைக் கைப்பற்ற நாட்டமுள்ள மதசார்பற்ற இடை நிலைக்கொள்கையைக் கடைப்பிடிக்கும் கட்சிகள் கூட பாகிஸ்தான் மீதும் அதனுடன் தொடர்புள்ள விடயங்கள்மீதும் கடும் போக்கை கடைப்பிடிப்பதற்கு கட்டாயப்படுத்தப்படுவார்கள். இந்திய அரசியலில் பெரும் ஆற்றலாக தற்போது கணிக்கக் கூடிய பாரதீய ஜனதாக்கட்சியைத் தோற்கடிப்பதற்கு இந்த கடும்போக்கு நல்லவழிமுறையாக விளங்கும்.

தற்போதுள்ள சாவால்களை நீண்ட தூரத்துக்கண்ணோட்டத்துடனும் புத்திசாதுரியத்துடனும் எதிர்கொள்ளாவிடின் பிரதம மந்திரி நரசிம்மராவ் அவர்களின் சிறுபான்மை அரசாங்கத்திற்கு நெருக்குதல்கள் அதிகரிக்கக்கூடும். பாகிஸ்தானுடனுள்ள உறவுகள் மேலும் மோசமடைந்து பகைமையும் நீடித்தால் பாரதீய ஜனதாக்கட்சியைப் போன்ற இனவாத அமைப்புக்கள் வலிமைபெறும்.

இனவாத அமைப்புக்களின் வளர்ச்சி இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையும். இனவாதத்தாலும் குறுகிய நாட்டுப் பற்றாலும் செல்வாக்குப் பெறும் அரசியலில், சிறுபான்மையினரின் பிரச்சனைகளை மத்திய அரசாங்கம் உதாசீனம் செய்யும் நிலைதோன்றும். உதாரணமாக சிறுபான்மையினரின் விடயங்களில் மத்திய அரசாங்கம் மென்போக்கைக் கடைப்பிடிக்கின்றது என்று குற்றம் சுமத்தப்படும் என்ற அச்சத்தின் காரணமாக பஞ்சாப் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகளில் தீர்வு ஒன்றைக் காணமுடியாதிருக்கும். இதன் பேறாக அழிவை ஏற்படுத்தக்கூடிய கிளர்ச்சிகளும் வன்முறைகளும் தொடர்ந்தும் நடைபெறும். இதனால் இந்தியா பிளவுபடுவது எந்நேரத்திலும் நடக்கலாம்.

---

**குணமாகாத நோய்**

**நோயாளி:** நான் உன்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறேன். குணமாகனும்னு எனக்கு விருப்பமே இல்லை.

**நர்சு:** நீங்க குணமாக மாட்டீங்க. நீங்க என்னைக் காதலிக்கறது டாக்டருக்குத் தெரிஞ்சுடுச்சு. அவரும் என்னைக் காதலிக்கிறார்.

---

# நீண்டகால வாழ்வுக்கு உயிர்ச்சத்து 'சி' யைப் பாவியுங்கள்

-நியூசுவீக்- 18.5.92-

சொறி,சிரங்கு வராமல் தடுப்பதற்கு உயிர்ச்சத்து'சி' சிறந்தது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஆனால் இந்த உயிர்ச்சத்து சாதாரணமான உயிர்க்கொல்லிகளான புற்றுநோய்களையும், இருதயநோய்களையும் வராமல் தடுப்பதற்கு இது உதவுமா என்பதில் நிபுணர்களிடையே கருத்துவேற்றுமை காணப்படுகிறது லொசு ஏஞ்சலிலுள்ள கலிபோர்ணியாப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 10 ஆண்டுகாலமாக மாநிலங்களிலுள்ள சுகாதாரக்கணிப்பீடுகளை அண்மையில் ஆராய்ந்தார்கள் இந்த ஆய்வின் முடிவுகளைச் சென்ற வாரம் 'தொற்றுநோயியல்'' (Epideminology) என்ற சஞ்சிகையில் வெளியிட்டபோது, இந்த உயிர்ச்சத்தைப் பாவிப்பது நன்மை பயக்கும் என்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு 25 அகவைக்கும் 74 அகவைக்கும் உட்பட்ட 11,000 மக்களைக் கொண்ட 1970ம் ஆண்டுகளில் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறை மற்றும் தங்களின் உணவு பற்றிய முழுக்குறிப்புக்களையும் இவர்கள் விரிவாகக்கொடுத்திருந்தனர். பத்து ஆண்டு காலமாக ஆராய்ச்சியாளர்கள் இவர்கள் மீது கவனஞ் செலுத்தி வந்தனர். இதில் பங்கேற்றவர்களைச் சிறு சிறு பகுதியினராகப் பிரித்து, இவர்களின் இறப்பு விகிதங்கள் உற்று நோக்கியபோது-

உயிர்ச்சத்து 'சி'யைக் கூடுதலாக உட்கொள்பவர்கள் நீண்டகாலம் வாழ்ந்துள்ளார்கள் என்ற முடிவுக்குத் தொற்றுநோய்த் தடுப்பாளர் யேம்சு என்சுறோம் அவர்களும் அவருடைய சகாக்களும் வந்தார்கள். சாப்பாட்டாலும் ஏனையவைகளாலும் நாளொன்றுக்கு 300 மில்லிகிராம் உயிர்ச்சத்து 'சி'யைப் பெற்று வந்த ஆண்களின் இறப்பு வீதம் 50 மில்லிகிராமுக்குக் குறைவாகப் பெற்றுவந்தவர்களின் இறப்பு விதிதத்திலும் பார்க்க 41 சதவீதமாகக் குறைந்திருந்தது தெரியவந்துள்ளதது. இந்த உயிர்ச்சத்தைப் பாவிப்பவர்களின் ஆயுட் காலம் ஏறக்குறைய ஆறு ஆண்டுகளால் அதிகரித்துள்ளது. பெண்களில் அவ்வளவு மாற்றம் காணப்படவில்லை. கூடுதலான 'சி' உயிர்ச்சத்தை உட்கொள்ளும் பெண்களில்-10 சதவீதமானவர்களே, குறைவாக உயிர்ச்சத்து 'சி'யை உட்கொண்டவர்களிலும் பார்க்க கூடுதல் காலம் வாழ்ந்துவந்துள்ளனர். உயிர்ச்சத்து 'சி' யைக் கூடுதலாக உட்கொண்ட இரு பாலாரிலும் இருதய நோய் குறைவாகக் காணப்பட்டது.

உயிர்ச்சத்து 'சி' தானா உண்மையாக நன்மைபயக்கும் காரணி என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. உயிர்ச்சத்து 'சி, யைக் கூடுதலாக உட்கொள்பவர்கள் தங்களுடைய மற்றைய விடயங்களிலும் கூடுதலான கவனம் எடுக்கிறார்கள் என்கிறார் நியூயோர்க் மவுன்ட் சினாவுள்ள மருத்துவக் கல்லூரியின் ஊட்டச்சத்து நிபுணரான டாக்டர் விக்டர் கர்பாட் அவர்கள். உயிர்ச்சத்து 'சி'யை மேலதிகமாக உட்கொள்பவர்கள் நிறை குறைந்தவர்களாகவும், புகைபிடிக்காதவர்களாகவும், தேகப்பயிற்சி செய்பவர்களாகவும் பழவகைகளை அதிகமாக உட்கொள்பவர்களாவும் இருப்பதால் அவர்கள் நீண்ட காலம் வாழ்கின்றார்கள் என அவர் மேலும் கூறுகின்றார்.

இந்தக் கூற்றில் உண்மைகள் இருக்கக்கூடும் என்று கூறும் திரு என்சுறோம் அவர்கள் தனது முடிவுகளை அறிவிக்குமுன்னர் இப்படிப்பட்ட பத்து காரணிகளை ஆராய்ந்து அவற்றைத் திருத்தியுள்ளதாகக் கூறியுள்ளார். இந்த ஆராய்ச்சி மூலம் வெளிவந்த தகவல்களைப் போல் ஏனைய உணவுகளால் ஏற்படும் மாற்றங்கள் அல்லது கொலசுரோல் போன்றவைகளில் குறைவுகளை உண்டாக்குதல் போன்றவை இந்த அளவுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவில்லை என்பதை இந்த விடயத்தை விமர்சிப்பவர்கள் நன்றாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் கூறுகின்றார். ★

# சிரியாவின் ஆசாத் எல்லோருடைய நண்பனாகத் தோற்றமளித்தாலும் ஒருவருக்கும் நண்பனல்ல

(நியூசுவீக் 18.5.92)

அமெரிக்க சனாதிபதி திரு.யோர்ச் புஷ் அவர்களின் புதிய உலக ஒழுங்குக்கு ஆதரவளிப்பான வெளித்தோற்றத்தை முதலாவதாகக் கொடுத்தவர் சிரியாவின் சனாதிபதி கவேசு ஆசாத் (Hafez Assad) அவர்ளே ஆவர். தனக்கு உதவியளித்துவந்த சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைவதற்கு முன்பே 1980ம் ஆண்டின் பிற்பகுதியில் டமாசுகசில் இருந்து வந்த பயங்கரவாதி அபுநிதாவின் தலைமையகத்தை மூடியதோடு மற்றைய பயங்கரவாத இயக்கங்களின் மீதும் தனது பிடியை இறுக்கி அமெரிக்காவுடன் உறவாடத் தொடங்கினார். அமெரிக்கா தலைமையிலான கூட்டணியினர் சதாம் குசேனுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறக்கியபோது இந்தக் கூட்டணியினருடன் சேர்ந்து அராபிய கடும்போக்காளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அத்தோடு ஈராக்கின் ஸ்கட் (Scud) ஏவுகணைத் தாக்குதலுக்கெதிராக இசுரேலியர் பதிலடி கொடுப்பது நியாயமானதே என ஒருமுறை கருத்துத் தெரிவித்தார். போர் முடிவுற்றதும் நடைபெறவிருக்கும் மத்திய கிழக்கு இணக்கப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது பற்றிச் சிறிது காலத்தைப் போக்கினார். சிரியாவிலுள்ள 4000 யூதர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று அமைதியான முறையில் குடியமர ஒப்பவேண்டும் என்று அமெரிக்காவும் இசுரேலும் நெடுங்காலமாக விடுத்துவந்த கோரிக்கைக்குச் சென்றமாதம் அவர் இணங்கினார்.

இப்படியிருக்கும் பொழுது திரு. புஷ் சந்தோசமடையா தது ஏன்? அவர் அமெரிக்காவினதும், மேற்குலகத்தின தும் மரியாதையைக் குறைக்க ஆணித்தரமாக முயன்று வருகின் றார். அராபியர்களுக்கு ஆயுதம் விற்பதற்குப் புஷ் நிர்வாகம் தடைவிதித்ததையிட்டுக் காரசாரமான அறிக்கைகளை அண் மைய வாரங்களில் வெளியிட்டுவருகின்றார். அத்தோடு ஐக்கிய நாடுகள் சபையால் லிபியாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட வானூர்தி தடையை முறியடிக்கப் போவதாக கூறிவருகின்றார். அத்தோடு ஈராக்குடன் நல்லுறவை வளர்ப்பதற்கான அறிகுறி களை வெளிப்படுத்தி வருகின்றார். அமெரிக்கர்கள் சமாதானம் வேண்டி நிற்கிறார்களா? அல்லது சரணாகதியடையவேண்டு மென நினைக்கிறார்களா? என்று தான் மீண்டும் சனாதிபதியா கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் திரு. ஆசாத் சென்ற மார்ச் மாதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது உண்மை நிலையை வெளிக்காட்ட திரு. ஆசாத் முன்வருவாரா? அவர் இப்பொழுதே இவைகளை இருமுறை வெளிக்காட்டியுள்ளார். தான் திறமையாகச் செய்யக்கூடியவற் றையே திரு. ஆசாத் செய்கின்றார். எந்த நேரத்தில் இந்த எரி மலை வெடிக்கும் என்ற நிலையிலிருக்கும் பிரதேசத்தில் இருந் துகொண்டு தான் எப்பக்கம் சாய்வார் என்பதை வெளிக்காட் டுகின்றார். ஈராக்குடனான போரின்போதும், சமாதானப் பேச்சு வார்த்தைகளின்போதும் தான் கொடுத்துவந்த ஆதரவுகளுக் குப் பொருளாதார அனுகூலமானவற்றைப் பெற இதுதான் தக்க தருணம் என வாசிங்டனுக்குச் சமிக்கை காட்டுகின்றார். ஆனால் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டிய லில் திரும்பவும் சிரியாவை அமெரிக்க இராசாங்க அமைச்சு சேர்த்துள்ளதால் அது அமெரிக்க உதவிகளையோ, கடன் களையோ அல்லது கடனுதவிகளையே பெற்றுக்கொள்வது தடுக் கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளுக்கு மாற்றங்கள் ஏற்ப டும்வரை திரு.ஆசாத் அவர்கள் தொடர்ந்தும் ஒரு சாராரை மறுசாராருக்கு எதிராக ஈடுபட வைப்பதில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் சிரியா மேற்குலக நாடுகளுக்குத் தலையாட்டும் பொம்மையல்ல என அந்நாடுக ளுக்கு எச்சரிக்கைவிடுவதாகவும், அரேபியநாட்டு மக்களின் பாது காவலன் தானே எனவும், வாசிங்டனுக்கு வால்பிடிப்பவனல்ல எனவும் அராபியர்களுக்கு எடுத்துகாட்டுவதாக உள்ளது என டமாசுகசிலுள்ள மேற்கு நாட்டு இராசதந்திரி ஒருவர் கூறிகின் றார்.

## மிகநெருக்கமாக

லெபனானின் விவகாரத்தில் இன்னுமொரு பலப்பரீட்சை வர இருக்கிறது போல் தெரிகின்றது. அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடன் ஏற்பட்ட 'ராய்ப்' தீர்வுத்திட்டத்தின்படி வரும் செப்டம்பர் மாதம் முடிவதற்குள் சிரியா தனது 40,000 படையினரையும் வெளியேற்றிப் பெக்கா (Bekaa) பள்ளத்தாக்குக்குப் பின்வாங்கச் செய்யவேண்டும். தனது படைகள் லெபனான் நாட்டில் இருப்பதாலேயே அங்கு உள்நாட்டுப் போர் மூளவில்லை எனச் சிரியா கூறுகின்றது. லெபனானில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் தோன்றிய கலவரங்கள் காரணமாக சென்றவாரம் இந்த நாட்டு அமைச்சரவை பதவி விலகவேண்டிய நிலைக்கு வந்தது. இதனால் திரு.ஆசாத் அவர்களின் அணுமுறைக்குப் பெரும் மதிப்பு ஏற்பட்டது. ஆனால் உடன்பாட்டைச் சரிவர நிறைவேற்றும்படி சிரியாவைக் கோரும்படி திரு.புஷ் அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படும். ஈரான்-ஈராக் போரின் போது வாசிங்டன் ஈராக்குடன் நடந்துகொண்டதுபோல சிரியாவுடனும் நடந்துகொள்ளும் என்று ராய்ப் உடன்படிக்கைக்கு முழு ஆதரவு கொடுத்த அமெரிக்காவை விமர்சிப்பவர்கள் கூறுகின்றனர். போருக்குப் பின்னிருந்த நல்லுறவுக் காலம் முடிந்துவிட்டது. இருபகுதியினரும் தம் தேவைகள் கருதி கொண்ட இணக்கமே இம் முடிவாகும் சூழ்நிலைகளைக் கணித்து அதற்கேற்ப முடிவுகள் எடுப்பதில் புரிந்து கொள்ள முடியாத மனிதர் என அழைக்கப்படும் ஆசாத்தைப் போல ஒருவரை காணமுடியாது.

### எதற்கும் போகும் நிலை

சண்டையின் நடுவே கணவனைப் பார்த்து மனைவி கத்தினாள்;- 'இன்னும் ஒரே ஒரு வார்த்தை என்னைத் திட்டினீர்களானால் அப்புறம் நான் விதவையாகி விடுவேன்.'

# கந்தளாயப் பிரச்சினையை பூதாகரமாக்கப் பார்க்கின்றார்கள்

— அனுரத்த திலக்சிறி —

(ஒப்சேவர் - *21.6.92*)

சென்ற சில வாரங்களாக நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளின் பயனாகக் கந்தளாமா உல்லாசவிடுதிச் சிக்கலை எதிர்க்கட்சிகள் முன்னெடுத்துச் செல்லும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. முதலாவதாக, இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்த சிக்கல் வந்தது. இந் நடவடிக்கையைப் பின்பற்றி இலங்கையும் விடுதலைப புலிகளைத் தடைசெய்யும் என்று எண்ணிய எதிர்க் கட்சியினர் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் விடுதலைப் புலிகளைத் தடை செய்யாததைக் கண்டு அவர் அவர்களுடனான போக்கில் மென்மையைக் கடைப்பிடிக்கின்றார் எனக் குற்றஞ் சாட்டினர். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபா கரன் அவர்களைப் பிடிப்பதற்கு இந்தியா நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் எதிர்க்கட்சியினர் சிலர் மகிழ்ச்சியாகப் பேசத் தொடங்கினர். இந்தியா மேற்கொள்ளும் இப்படியான நடவடிக்கை திரு. பிரேமதாசா அவர்களை அதேநேரத்தில் தண்டிக்க எடுக்கும் நடவடிக்கை என்றும் எண்ணினர். ஆனால் இவர்கள் எதிர்பாராத வகையில், விடுதலைப் புலிகளின் மேல் பலமுனைத் தாக்குதல்கள் தொடங்கின. இதன் மூலம் சனாதிபதி பிரேமதாசா இவர்களின் நோக்கத்தை வெற்றிகரமாக முறியடித் தார். இந்த இராணுவ நடவடிக்கை எதிர்க்கட்சிகளின் முழுத் திட்டத்தையும் குழப்பியதோடு, அவர்களை ஒன்றும் பேசமுடி யாமல் இருக்குமாறு செய்தது. இது நீண்டகாலம் நீடிக்கவில்லை. விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதனால் பயனேதும் கிடைக்காதென அறிந்த எதிர்க்கட்சியினர் திரு. பிரேமதாசா அவர்களுக்கு எதிராகச் சிங்கள பௌத்த பேரின

வாதத்தைச் செயல்பட ஊக்குவிக்கும் ஒரு சிக்கலை தேடித்திரிந்தனர். இப்படித் தேடிக் கண்டுபிடித்ததே இந்தக் கந்தலாமா உல்லாசப் பயணிகள் தொடர்மாடி விடுதிக்கட்டிடச் சிக்கலாகும்.

தொடக்கத்தில் நான் ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். இந்தக் கந்தலாமா உல்லாசப் பயணிகள் விடுதி கட்டுவதனால் ஏற்படும் சுற்றுச் சூழல் மாசுபடுத்தலைப் பற்றிய நன்மை தீமைகளை எடுத்துக்காட்டுவது எனது முயற்சியல்ல. இந்த விடயத்தை இதைப்பற்றிய வல்லுனர்களின் கைகளில் விட்டுவிடுவோம். சிங்கள பௌத்த பேரினவாத ஆற்றல்களை திரு. பிரேமதாசா அவர்களின் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எப்படித் தூண்டி விடுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதே எனது நோக்கமாகும். அண்மைக் காலமாக வெளிவரும் தீவிரமான அறிக்கைகளையும், பேச்சுக்களையும் உற்றுநோக்கும்போது, கந்தலாமாவில் ஒரு தொடர்மாடி உல்லாசப் பயணிகள் விடுதி கட்டுவதா, இல்லையா, என்பதில் தான் பௌத்த சமயத்தின் வளர்ச்சி எதிர்காலத்தில் தங்கியிருக்கின்றது என ஒருவர் நினைக்கவேண்டிவரும் என்று நினைத்தால், அந்த நினைவை ஏற்படுத்தியதற்காக மன்னிப்புக் கோருகின்றேன். ஒன்றை மாத்திரம் மறக்கக்கூடாது. உல்லாசப் பயணிகளுக்கு உலகம் முழுவதும் செல்ல இடமிருக்கின்றது. ஆனால் சிங்கள பௌத்தர்களாகிய எங்களுக்குச் செல்வதற்கு வேறிடமில்லை. இதற்கு முன்னர், ஒரு குளத்துக்கும் அதற்கருகாமையிலுள்ள பௌத்த கோவிலுக்கும் அருகே ஒரு உல்லாச விடுதி கட்டவில்லை என்று ஒருவர் நினைத்தால் அதையிட்டு அவரை மன்னிக்கக் கோருகின்றேன். ஆனால் எல்லாப் பண்டைய நகரங்களிலும், அனுராதபுரம் தொடக்கம் பொலநறுவை வரையும், சிகிரியா தொடக்கம் கதிர்காமம் வரையிலும் உல்லாச விடுதிகள் இருந்துள்ளன. அவைகளால் பௌத்தமதம் அழிக்கப் படவில்லை. ஆனால் இதிலும் பார்க்க கூடுதலான அழிவுகளை மகாசங்கத்தைச் சேர்ந்த சில பௌத்த மதக் குருமார்கள் செய்து வருகின்றனர். அதாவது சாதி வேறுபாடுகளை வெளிக்காட்டி மக்களைத் துன்புறுத்தல், இன, மத சிறுபான்மையினருக்கெதிராகப் போர் தொடுப்பதை நியாயப்படுத்தல் ஆகியவற்றில் இந்தப் பௌத்த குருமார் ஈடுபடுகின்றனர். இவைகள் யாவும் கௌதம புத்தரின் போதனைகளுக்கு எதிரான, அவற்றை மீறும் செயல்களாகும்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அனுரா பண்டாரநாயக்கா, ஒரு மிதவாதி. அவர் மிதவாத சனநாயகவாதிகளைக் கொண்ட ஒரு பிரிவினரை அக்கட்சியில் பிரதிநிதிப்படுத்துகின்றார்

என்பது சரியா? சனநாயகமும், திறந்த பொருளாதாரக் கொள்கையும் அவரது கையில் இருப்பது பாதுகாப்பாக இருக்கும் என்பது சரியா?

அது தான் தவறு.

இந்த உல்லாசப்பயணவிடுதி கட்டுவதனால் குளங்களின் பண்பாடுகளுக்கு ஆபத்து ஏற்படுவதோடல்லாமல் அது புத்த சாசனத்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். இதனால் எங்கள் கட்சி இச்செயலை எதிர்க்கின்றது. (யூன் மாதம் 15ம் திகதி திவயின பத்திரிகையில் வெளிவந்த செய்தி) இரணவிலவில் கட்டப்படவிருந்த உல்லாசப்பயணிகள் விடுதிக்குக் காட்டப்பட்ட எதிர்ப்புகளுக்குச் செவிமடுத்த அரசாங்கம் கந்தலாமாவில் கட்டப்படவிருக்கும் உல்லாசப் பயணிகள் விடுதிக்கு எதிர்ப்புகள் தோன்றும் போது அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஏனெனில் இந்த எதிர்ப்புகளுக்குப் புத்த பிக்குகள் தலைமை தாங்குவதனாலா? கத்தோலிக்கக் குருமார்களின் எதிர்ப்புக்களினால் இரணவிலவில் கட்டப்படவிருந்த உல்லாசப் பயணிகள் விடுதித்திட்டத்தைக் கைவிட்ட அரசாங்கம், கந்தலாமாவில் கட்டப்படவிருக்கும் உல்லாசப்பயணிகள் விடுதித் திட்டத்தை எதிர்க்கும் பௌத்த குருமாரின் ஆலோசனைகளுக்குச் செவிடுமடுத்து இத்திட்டத்தை நிறுத்தினாலென்ன? (திவயினவிலும், லங்காதீபவிலும் யூன் மாதம் 15ந் திகதி வெளிவந்த செய்திகள்) இது அனுரா "பில்லி பண்டா" பண்டாரநாயக்காவின் பேச்சு, கண்களை உருட்டிப்பேசும் ஒருமொழிதெரிந்த சிங்களவெறிப்போக்குடையவரின் பேச்சல்ல - மக்களே அறிந்துகொள்ளுங்கள்.

இன்னும் ஒரு மிதவாதியான திரு மகிந்த இராசபக்சா அவர்களின் பேச்சைப் பார்ப்போம்.

வெள்ளையர்கள் எங்கள் குளங்களையும், பண்டைக்காலத்தில் நம் நாட்டிலிருந்த தன்னிறைவையும் இல்லாதொழித்தனர். ஆனால் எங்களுடைய தேசியப் பண்பாட்டை அவர்களால் அழிக்க முடியவில்லை. அக்காலத்தில் வெள்ளையர்களால் செய்ய முடியாததை இப்போது திரு. தொண்டமான் செய்ய முயலுகின்றார். ஒவ்வொரு குளங்களுக்கு மருகே உல்லாசவிடுதிகளை அமைப்பதன் மூலம் சிங்களக் கிராமங்களை அழிக்க முயலுகின்றார்கள். ( லங்காதீப - யூன் 15 )

## தொண்டாவுக்கு ஒரு பாடம் புகட்டவேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மிதவாதத் தலைவர்கள் இதற்குத் தேவையான அடிக்கல்லை இட்டபின்னர் திரு. திலக்

கருணாரத்தின, இந்த இருவரும் விட்ட இடம் தொட்ட இடம் ஆகியவற்றிலுள்ள வெற்றிடங்களை நிரப்புகின்றார். இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள ஆற்றல் வாய்ந்த மனிதன் திரு தொண்டமான் மாத்திரம் தான் தோட்டத் தமிழர்களிடம் ஏறக்குறைய 54,000 ஏக்கர் நிலம் இப்போது உண்டு. ஆனால் சிங்களவருக்கு ஒரு மயானம் கட்டுவதற்கு ஒரு அங்குல நிலமாகுதல் இல்லை.

தொழிலை இழக்கும் இரண்டு லட்சம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சாகுபடிபண்ணாத நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் கிராமிய வளர்ச்சித் திட்டமொன்று இருக்கின்றது. திரு. தொண்டமானின் ஆதிக்கத்தை முறியடிக்கவேண்டும். இல்லாவிட்டால் சில ஆண்டுகளில் சிங்களவரும், முசுலிம்களும் இந்த நாட்டில் வாழும் உரிமையை இழப்பர். இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாகத் திரு. தொண்டமான் ஒரு தமிழ் அரசை மலைநாட்டில உருவாக்க முயற்சிக்கின்றார்.

சிங்களவர்களை வளர்ச்சி அடையாதவர்கள் என நினைக்கும் திரு. தொண்டமான் திட்டமிட்டு மெள்ள மெள்ள சிங்களவர்களின் உரிமைகளைப் பறிப்பதில முனைப்புடன் செயல்படுகின்றார். இப்படிப்பட்ட கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காகத் தான் திரு. தொண்டமான் இந்தக் கந்தலாமா உல்லாசப்பயணிகள் விடுதித்திட்டத்தை உருவாக்கியுள்ளார். செல்வாக்குள்ள இடத்து மக்களினால் அவர் பாதுகாக்கப் பட்டாலும், இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடாமல் தடுக்கும் வகையில் அவருக்குப் பாடம் புகட்டவேண்டும்.

உல்லாசப் பயணிகள் வீடுதிகள் கட்டுவதால் நாட்டுக்கு நன்மைகள் ஏற்படும் என்று பொய்களை கூறிச் சிங்கள மக்களைத் திரு. தொண்டமான் ஏமாற்றப்பார்க்கின்றார். தம்புள்ளையில் நல்ல நிலையிலுள்ள புத்தசமயப் பண்பாட்டை ஒரு தமிழரின் படையெடுப்பினால் சீரழிக்கச் செய்வதே திரு. தொண்டமானின் நோக்கமாகும். பெரும்பான்மைச் சிங்களவரின் உரிமைகளையும், அவர்களது அரும்பெரும் செல்வங்களையும் அழிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை முறியடிப்பதற்குத் தம்புள்ளை மக்களுக்கு கெல உறுமய தனது முழு ஆதரவையும் வழங்கும்.

# லத்வியாவில் இனவேற்றுமை வளர்கிறது

— லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ் —

(ஐலண்ட் - 19. 05 92.)

கடந்த ஆண்டு லத்விய மக்கள் வீதிகள் தோறும் சோவியத் இராணுவத்தின் முன் நின்று தங்களுக்கு விடுதலை வேண்டும் என்று கூக்குரலிடும் பொழுது அவர்களுடன் சேர்ந்து சனா றூபின்சிக்கும் (Jana Rubinchik) விறுவிறுப்பானதும் அதி தீவிர மானதுமான போர்க்குரலை எழுப்பவோ அல்லது விறுவிறுப்பான தேசிய கீதத்தைப் பாடவோ தயங்கவில்லை. தனது 22 வயதில் றூபின்சிக் தான் பிறந்த மண்ணை மீட்டெடுத்துத் தனது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்காக தன்னாலானவற்றைச் செய்வதில் மகிழ்ச்சி அடைந்தாள்.

முடிவில் லத்வியாவுக்கு விடுதலை கிடைத்தது.
ஆனால் றூபின்சிக் தோல்வியை தழுவ வேண்டி நேரிட்டது.

லத்வியாவில் நடந்த சுதந்திரத் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் தனது மக்கள் தொகையான 2.7 மில்லியன் மக்களில் ஏறக்குறைய அரைவாசி மக்களை, அவர்கள் சட்டவிரோதமான வெளி மக்கள் எனக்கூறும் சட்டத்தை முதலாவதாகக் கொண்டுவந்தது. இந்தச் சட்டம் றூபின்சிக்கையும் பாதிப்புக்குள்ளாக்கியது.

இந்த சிக்கல் எல்லோரையும் பாதிக்கின்றது என அரசாங்கப் பேச்சாளரான அலெக்சாண்டர் மேர்லின்ஸ் கூறுகின்றார். "இந்த சிக்கலை இப்பொழுதே நாங்கள் தீர்க்காவிட்டால் ஒரு பெல்வாஸ்ற்றோ (Belfast) அல்லது பெய்ருட்டோ (Beirut) இங்கு தோன்றும். அதை ஒருவரும் விரும்பவில்லை," என அவர் மேலும் கூறுகின்றார்.

இந்த முரண்பாடான குடியுரிமைச் சட்டத்தின் பின்னணியில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இழந்த ஒரு தேசிய அடையாளத்தைத் தேடும் முயற்சி காணப்படுகின்றது. முன்னைய சோவியத் ஒன்றியத்தின் கீழ் 51 ஆண்டுகளாக இருந்ததை மறைக்கவும், ருசிய மயப்படுத்தப்பட்ட எல்லாவற்றையும் இல்லாதொழிக்கவும் எடுக்கும் முயற்சிகளும், ருசியாவினால் குடியேற்றப்பட்ட மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் உணர்ச்சி வசப்பட்டு எடுக்கப்படும் முயற்சிகளாகும். லத்வியாவுக்கு ஒரு தேசிய அடையாளம் கொடுப்பதற்காக எடுக்கப்படும் முயற்சியில் றாபின்சிக் போன்றோர் தங்கள் அடையாளத்தை இழக்க வேண்டிவரும்.

சோவியத் ஒன்றியம் லத்வியாவைக் கைப்பற்றுவதற்கு முன்பாக 1940 ம் ஆண்டுக்கு முன்னர் குடியுரிமை பெற்றவர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் சாதாரண குடியுரிமை வழங்கப்படும். மற்றையவர்கள் எல்லோரும் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் குடியுரிமைச் சட்டங்கள் கடுமையாக உள்ளதாகவும், அவற்றிற்கு முகம் கொடுப்பது கடினமானதெனவும் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

லத்வியாவின் அயல்நாடான லிதுவேனியாவில் ருசிய மக்கள் மிகக் குறைவாக உள்ளனர். அந்நாடு சுதந்திரம் பெற்றபோது அங்குள்ள அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது. எஸ்தோனியாவில் வாழ்ந்துவரும் 37% விகித ருசியர்கள் அந்நாட்டுக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் இரு ஆண்டுகளில் அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படும்.

லத்வியாவின் குடியுரிமைச்சட்டப்படி, குடியுரிமைக்கு விண்ணப்பிப்போர் லத்வியாவில் தொடர்ந்து 16 ஆண்டுகள் நிரந்தரமாக வாழ்ந்திருக்க வேண்டும். அத்துடன் லத்வியாவின் அரசியல் யாப்பை அறிந்திருப்பதோடல்லாமல் கடினமான லத்விய மொழியையும் தெரிந்திருக்கவேண்டும். வேற்று நாட்டுக் குடியுரிமை இருந்தால் அவற்றை அவர்கள் இழக்கவேண்டும். அத்துடன் லத்வியாவுக்கு உண்மையாக இருப்பதாகவும் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும். குடியுரிமை அற்றவர்கள் வாக்களிக்கவோ, அரசாங்கத்தில் தொழில் பார்க்கவோ, சொத்துக்களை வைத்திருக்கவோ முடியாது.

தற்பொழுது அமுலில் இருந்து வரும் இருமொழிச்சட்டம் நீக்கப்பட்டு எல்லாவிதமான உயர்கல்விப் படிப்புக்களும் லத்விய

மொழியிலேயே போதிக்கப்படும் எனப் புதிய சட்டம் கூறுகின்றது. குடியுரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள் சொத்துக்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படுவர்.

"நான் கட்டாயம் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பேன். எனக்குக் குடியுரிமை கிடைக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் எனது தாயாருக்குக் குடியுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில் எனது தாயாருக்கு லத்விய மொழி நன்றாகத் தெரியாது'', எனக்கூறும் றூபின்சிக்கில் ருசிய, பொலிஷ் யூத இரத்தம் ஓடுகின்றது. ஆனால் லத்விய இரத்தம் ஓடவில்லை.

''எனது தேசிய இனம் என்னவென்று என்னைக் கேட்டால் அது எனக்குக் கடுமையான கேள்வியாக இருக்கும்", என அந்த இளம் பத்திரிகையாளர் கூறினார். "நான் வளரும்பொழுது லத்விய மொழிப் பாடல்களையும், அந்த நாட்டு நாடோடிக் கதைகளையும் படித்துள்ளேன். அத்தோடு லத்விய மக்கள் கொண்டாடி வரும் நத்தார் கோடைகாலச் சங்கிராந்தி போன்ற விடுதலை நாட்களை கொண்டாடியுள்ளேன். ருசியர்கள் இவ்விடுதலை நாட்களைக் கொண்டாடுவதில்லை. அத்துடன் எனக்கு எனது தாயார் ருசியமொழி இலக்கியங்களைப் படிப்பித்துள்ளார். அத்தோடு சிறந்த பண்டைக்கால ருசிய ஓவியக் கலையிலும் எனக்கு விருப்பமுண்டு. நாங்கள் ருசிய மொழியையே பேசுகின்றோம்'' என அவள் மேலும் கூறினாள்.

இப்படியிருந்தும் லத்வியா தான் அவள் பிறந்த இடம். லத்வியாவைத் தவிர வேறெந்த நாட்டையும் 23 ஆண்டுகளாக அவர் அறிந்திருக்கவில்லை. ருசியர்களுடன் நான் நீண்டகாலம் இருக்கும் பொழுது எனக்குத் தடுமாற்றம் ஏற்படுகின்றது. அதேபோன்று லத்விய மக்களுடன் இருக்கும் போதும் இடைக்கிடையே தடுமாற்றம் தோன்றுகின்றது. நான் இவர்களுக்கிடையில் தனிமையாக இருப்பது போல் உணர்கின்றேன். இதை என்னால் விளக்க முடியாது'' என அவள் மேலும் கூறுகிறாள்.

அவர்கள் எதையோ பறிகொடுத்து விட்டோம் என நினைப்பதை லத்வியர்கள் முக்கியமாக மூத்த லத்வியர்கள் நன்றாக விளங்கிக்கொள்கிறார்கள்.

1940 ம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட பின்னர் இந்த மூன்று பால்ரிக் நாடுகளும் செம்படையின் மேலாண்மைக்குக் கீழ் வந்தன. இந்த மூன்று குடியரசுகளையும்

ருசிய மயமாக்க எடுத்த நடவடிக்கைகளினால் அக்குடியரசுளின் மக்கள் மனவேதனையும் துன்பமும் அடைந்தனர்.

ருசியாவினால் அமைக்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளில் தொழில் புரிவதற்கு 1.5 மில்லியன் ருசியர்கள் இம்மூன்று குடியரசுகளிலும் குடியமர்த்தப்பட்ட வேளையில் 10 ஆயிரக்கணக்கான லத்வியர்களும், லிதுவேனியர்களும், எஸ்தோனியர்களும் தங்கள் தாய் நாட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். சோவியத் ஒன்றியத்திலுள்ள எந்தவொரு குடியரசும் தன்னிறைவு பெறக் கூடாது என்ற மொஸ்கோவின் திட்டமே இந்தப் பாரிய குடியேற்ற நடவடிக்கையாகும்.

இந்நடவடிக்கைகள் மூலம் பால்ரிக் நாடுகளில் லத்வியா பாரிய தொழிற்சாலைகளையும் கொண்ட நாடாகத் திகழ்ந்தது. அத்துடன் இந்தப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள 1.20,000 சோவியத் துருப்புக்களின் தலைமைப் பீடமாகவும் லத்வியா இருந்துவந்தது. லத்வியநாட்டின் மேப்பட்ட வாழ்க்கைத் தரத்தை அறிந்து கொண்ட சோவியத் இராணுவத்தினரில் 40,00-60,000 மேலாளர்கள் வரை ஓய்வுபெற்ற பின்னர் லத்வியாவிலேயே விரும்பிக் குடியமர்ந்துள்ளனர்.

சோவியத் பேரரசு சிர்குலைந்தபின்னர் சென்ற கோடை காலத்தில் லத்வியா சுதந்திரம் பெற்றது. லத்விய நாட்டில் ருசிய மொழியே மேலோங்கி இருந்தது. லத்வியாவின் தலைநகரமான றிக்கா (Riga) வின் சனத்தெகையான 916,500 மக்களில் 70சதவீதமாயுள்ள ருசிய மக்கள் தங்களைத் தங்கள் தலைநகரிலேயே சிறுமைப்படுத்துவதாக லத்விய மக்கள் எண்ணுகின்றனர்.

ருசியர்கள் தாமாகவே குடிபெயர்ந்து செல்லவேண்டுமென்று கோரும் வலதுசாரி லத்விய குடியுரிமைக் கட்சியின் தலைவரான 37 வயதுடைய திரு. மாறிஸ் கிறீன்பிளட்ஸ், எமக்கு ஒருநாடு இல்லாமல் போகின்ற நிலைமை தோன்றியுள்ளது என அறை கூவல் விடுக்கின்றார்.

'லத்விய மக்களின் வாழ்க்கைத் தரம் இழிநிலையிலுள்ளது. ஆனால் ருசிய வன்கவர்வாளர்களுக்கு சிறந்த வீட்டு வசதிகளும், உன்னதமான தொழில்களும் வழங்கப்பட்டுள்ளன' எனத் திரு. கிறீன்பிளட்ஸ் மேலும் கூறுகின்றார்.

இந்தக் காங்கிரஸ் தன்னுடைய அமைப்பை ஒரு நிழல் அரசாங்கமாகக் கருதுகின்றது. பாராளுமன்றம் சட்டரீதியற்ற முறையில் தெரிவு செய்யப்பட்டது. ஏனெனில் லத்வியக் குடிமக்கள்

அல்லாதோரும் வாக்களித்துள்ளனர். உண்மையான குடியுரிமை பெறத் தகுதியுள்ள 30,000 மக்களுக்குத் தேசிய அடையாள அட்டை வழங்கியுள்ளோம். அத்துடன் எங்களுக்கு இரகசிய இராணுவம் ஒன்றுடனும் தொடர்புள்ளது எனத் திரு. கிறீன் பிளட்ஸ் கூறுகின்றார்.

தேவையேற்படின் லத்வியக்குடியரசின் மக்களைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே 3000 உறுப்பினர்களைக் கொண்ட தேசியப்படை இரகசியமாக ஆயுதங்களையும், பயிற்சியையும் பெற்று வருகின்றது எனத் திரு கிறீன்பிளட்ஸ் கூறுகின்றார்.

ஆனால் ருசிய சமூகத்தவர்களுக்கும், லத்விய சமூகத்தவர்களுக்கும் இடையே ஒருவித சச்சரவும் ஏற்படவில்லை. அத்துடன் யாரும் துன்புறுத்தப்பட்டதாகவோ பாகுபாடு காட்டப்பட்டதாகவோ புகார் எதுவும் செய்யப்படவில்லை.

றிக்காவிலுள்ள பூங்காவில் நின்று கொண்டு தேசியவாதிகளின் செய்திப் பிரசுரங்களை வழங்கிக் கொண்டிருந்த மைக்கா கவினிக்கோவா என்ற பெண்மீது தெருவில் சென்றுகொண்டிருந்த குறைந்தளவிலான மக்களே கவனஞ் செலுத்தினர்.

லத்விய, ஆங்கில மற்றும் ருசிய மொழிகளில் கையால் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கிக்கொண்டு, ''ருசியர்கள் நம் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும், ஏனெனில் அவர்கள் எங்கள் நாட்டில் குடியேற்றப்பட்டவர்கள்'' என இந்த 53 வயதான லத்வியப் பெண் கூறுகின்றாள்.

''ருசியர்கள் ருசியாவில் வசிக்கவேண்டும். அவர்களுக்கு இது தாய் நாடாகாது'' என கவினிக்கோவா மேலும் கூறுகின்றாள்.

ருசியர்கள் லத்வியர்களுடன் சேர்ந்து வாழவிரும்புவதுபோல சில அறிகுறிகள் தென்படுகின்றன. ருசிய மொழியையும், லத்வியமொழியையும் கற்பதற்கு வெவ்வேறு பாடசாலைகள் முன்னர் இருந்துவந்தது. தங்கள் இனத்தைப் பொருட்படுத்தாது இம்மொழிகளில் எவற்றையேனும் தங்கள் பிள்ளைகள் கற்பிப்பதற்குப் பெற்றோர்கள் தேர்ந்தெடுக்கலாம். முதன் முறையாக லத்விய மொழி மூலம் கற்பிக்கப்படும் ஆரம்ப பாடசாலைகளிலும், மற்றும் பாலர் பாடசாலைகளிலும் சேர்வதற்குப் பெருந்தொகையான ருசிய மாணவர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

''குடியுரிமை விடயம் ஒரு கடினமான விடயமாகும்'', எனக்கூறுகின்றார் தன்னை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத

மேற்குநாட்டு இராசதந்திரி ஒருவர் 80% பாரிய முதலீடுகள் முன்னர் நியமிக்கப்பட்ட ருசியர்களின் கட்டுப்பாட்டிலேயே இப்போதும் உள்ளது. காவல்துறையிலும், இராணுவத்திலும் 90% வீதமாக அவர்களே இன்னும் இருந்துவருகின்றனர். „தனது வீட்டை இழந்த நிலையிலோ அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்ட நிலையிலோவுள்ள ஒரு ருசியரை எனக்குக்காட்டுங்கள் பார்க்கலாம்'' என மேலும் இவர் கூறுகிறார்.

201 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டச் சபையிலும், அல்லது பாராளுமன்றத்திலும் உள்ள பலதரப்பட்ட பிரிவினர், லத்வியர் அல்லாதோருக்கு குடியுரிமை வழங்கி அவர்களை லத்வியாவில் இருக்கவிடுவதற்கும் அல்லது குடியுரிமையில்லாது தொடர்ந்து அந்நியராக லத்வியாவில் இருப்பதற்கும் ஆதரவாயுள்ளனர்.

குடியுரிமைச் சட்டத்தைப் பற்றி இறுதித் தீர்மானம் எடுக்க நாள் குறிக்கப்படாவிட்டாலும், லத்வியக் கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்காக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் கடைசித் திகதி யூலை மாதம் 1 ம் திகதி என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் லத்விய மொழியை அரசமொழியாக அமுல்படுத்தும் இன்னொரு சட்டம் மே மாதத்தில் கொண்டுவரப்படும்.

ஐந்து ஆண்டுகாலம் நிரந்தரமாக வசித்தவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம் என்பதைப் பிரதம மந்திரி ஜவார்ஸ் கோட்மானிஸ் தெட்டத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அதேவேளையில் செம்படை நாட்டில் இருப்பதை வரவேற்காத போதிலும் ருசியப் பொதுமக்கள் அங்கிருப்பதை விரும்புகின்றார்.

''இங்கு இனவேற்றுமை உருவாக்கப்படவில்லை'' என இந்தக் குடியுரிமைச் சட்டத்தைத் தயாரித்தவரும், பாராளுமன்ற உறுப்பினரும், மற்றும் சட்டப் பேராசிரியருமான திரு. யூரி போயாஸ் கூறுகின்றார். சோவியத்தின் குடியேற்றக் கொள்கையையிட்டு எங்களைக் குறைகூறமுடியாது. அல்லது அதற்கு நாங்கள் பொறுப்பானவர்களல்லர். அத்துடன் ஒவ்வொருவருக்கும் குடியுரிமை கொடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு எங்களுக்கு இல்லை! என அவர் மேலும் கூறுகின்றார்.

இறுதியாகச் சட்டம் ஏற்கப்படும் பொழுது 16 ஆண்டுகள் நிரந்தரமாக வசித்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை மாற்றப்படும் என இவர் உறுதியாக நம்புகின்றார்.

"இந்த விடயத்தில் கூடுதலான பிரபரப்பும், உணர்ச்சியும் காட்டப்படுகின்றது. சில ஆண்டு காலத்துள் எல்லாம் சீராக்கப் படும்," என அவர் மேலும் கூறுகின்றார்.

உயர்மட்டச் சபையிலும், றிக்கா நகரசபையிலும் உறுப் பினராக இருக்கும் திரு மிகெயில் கவ்சிலோவ் அவர்கள் கொண் டுள்ள அச்சத்தைப் போக்குவதற்குத் திரும்பத் திரும்பச் சொல் லும் இந்த உறுதி மொழிகள் ஒரளவே உதவும், லத்வியாவில் பிறந்த ருசியரான திரு. கவ்சிலோவ் சனநாயகத்தைப் பெற முயற்சிக்கும் ருசியக் குழுவை உயர்மட்டச் சபையிலும் றிக்கா வின் நகரசபையிலும் பிரதிநிதிப்படுத்துகின்றார்.

"பாகுபாடுகாட்டப்பட்டு தனிமைப்படுத்தப்படும் சம்பவங்கள் நிகழ்கின்றன. இதைப்போன்ற சம்பவங்கள் உணர்ச்சிகரமான சூழ்நிலையை உண்டாக்கும் என அவர் கூறினார்.

"ஒரே சமயத்தில் ருசிய மொழியாக்கம் செய்வது உயர் மட்டச்சபையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சடுதியாக நிறுத்தப்பட்டதால் பல உறுப்பினர்கள் சபையின் கூட்டத் தொடர் களுக்கு வருவதை நிறுத்திக்கொண்டார்கள்" என்பதை அவர் நினைவு கூருகின்றார்.

லத்விய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதால் பாரிய நிறுவனங்களிலுள்ள பல இயக்குனர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டார்கள் எனத் தான் கேள்விப்பட்டதாகவும் திரு. கவ்சிலோவ் கூறினார். புதுமொழிக் கொள்கை அவருடைய பல்கலைக் கழகத் தொழிலையும் பாதித்துள்ளது.

"எதிர் காலத்தில் எனது விரிவுரைகளை ருசியமொழியில் ஆற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டேன், என்பதால் நான் எனது வேலையிலிருந்து விலகினேன். அரசியல் பொருளாதா ரத்தை நான் போதிக்கின்றேன். ருசிய மொழியில் போதிப்பது போல் லத்விய மொழியில் என்னால் திறமையாகப் போதிக்க முடி யாது." எனவும் இவர் கூறினார்.

1940 ம் ஆண்டிலிருந்து லத்விய மக்கள் பாடசாலைகளில் ருசிய மொழியையும் கற்கவேண்டியிருந்தமையால் பலர் இரு மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

அரசாங்கத்தில் பதவி வகிப்போரெல்லாம் லத்வியமொழி யில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென மொழிச்சட்டம் கூறு கின்றது. இதையிட்டு ருசிய இனத்தவர்கள் கவலை கொள்ளத்

தொடங்கியதோடல்லாமல், தனியார் மயப்படுத்தல் முடியும் வரை இச்சட்டம் எல்லாத் தொழில்களுக்கும் பொருந்தும் எனவும் ஏங்குகின்றனர்.

''லத்வியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் போது, லத்விய அரசுக்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும். இதை அதிகமான ருசியர்கள் விரும்பாதது அடுத்த சிக்கலாகும். இந்த உறுதிமொழி போருக்குச் செல்லுமுன்னர் கொடுக்கும் உறுதிமொழியைப் போன்றது. நானும் எனது முன்னைய தாய் நாட்டை மறக்கவேண்டும்'', என்று கூறுகின்றார் திரு கவ்சிலோவ் அவர்கள்.

''ஆனால் அநேகமாக ருசியர்கள் இதை எதிர்க்கவோ அல்லது எதிரான கருத்துக்களை வெளியிடவோ விரும்பவில்லை. ஏனெனில் இச்செய்கை அவர்கள் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் போது அவர்கள் அரசுக்கு உண்மையானவர்களா என்ற கேள்வியை எழுப்ப வழிவகுக்கும்'' எனவும் அவர் கூறுகின்றார்.

1940 ம் ஆண்டுக்கு முன்னர் லத்வியாவில் வாழ்ந்து வந்தவர்களுக்கும் அவர்களது வழித்தோன்றல்களுக்கும் மாத்திரம் வாக்களிக்கும் உரிமையைக் குடியுரிமைச் சட்டம் கொடுக்கவிருப்பதால் அடுத்து நடைபெறவிருக்கும் தேர்தல்களில் வலதுசாரிகளே கூடுதலான உயர்மட்டச் சபைக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

உயர்மட்டச் சபையில் அங்கம் வகிக்கும் லத்வியா ஆதரவான இன்னொரு பிரிவின் தலைவரும், 69 வயதினருமான திரு.விஸ்வால்டிஷ் லாசிஸ் லத்வியாவிலுள்ள ருசிய மக்களுக்கு ஒரு நேரடிச் செய்தியை விடுத்துள்ளார்.

''உங்களை இங்குவரும்படி யாரும் அழைக்கவில்லை. நீங்கள் இங்கு சுதந்திரமாக வாழமுடியாது. ஏனெனில் நீங்கள் வன்கவர்வாளர்கள். ருசியர்கள் சிலவேளை தங்களை இரண்டாந்தரப் பிரசைகள் எனச்சொல்லாம். ஆனால் நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன் நீங்கள் இரண்டாம்தரப் பிரசைகள் அல்லர். நீங்கள் இந்நாட்டுப் பிரசைகளே அல்லர். நீங்கள் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஏனெனில் உங்களுக்கு எதுவும் விளங்காது. ருசிய மொழி பேசும் உறுப்பினர்கள் தங்கள் பணத்தைக் கொடுத்துத் தங்களுக்கு மொழி பெயர்ப்பாளர்களை அமர்த்தியுள்ளதை நான் கண்டுள்ளேன்'' என அந்த அறிக்கையில் அவர் கூறுகின்றார்.

# கொரியாவின் அணு ஆற்றல் கொடுத்த அதிர்ச்சி

*-நியூஸ்வீக் 18.05.92*

**வ**டக்கு ஏன் தனது இரகசியங்களை வெளியிடுகின்றது? பியொங்யாங்வில் (Pyongyang) எப்பொழுதும் ஆச்சரியங்களுக்கு குறைவில்லை. வடகொரியாவின் அணு ஆற்றல் பற்றிய விபரங்களை அது விருப்பமில்லாமல் கொடுக்க முன்வருமென்று வியன்னாவிலுள்ள அனைத்துலக அணுசக்தித்துறையினர் எதிர்பார்த்ததைவிட, சென்ற வாரம் கிடைத்த இந்த விபரங்களடங்கிய 100 பக்கங்கள் கொண்ட அறிக்கையை யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்த அறிக்கையில் யொங்பியோவிலுள்ள மறைத்து வைக்கப்பட்டிருந்த தொடர் அணு உலைகள் பற்றிய விபரங்களை மட்டுமல்லது அதன் அருகாமையில் கட்டப்படும் பாரிய இரண்டு மின் ஆற்றல் நிலையங்கள், யூரேனியம் பெறப்படும் இரண்டு சுரங்கங்கள், இரண்டு யூரேனியம் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், ஓர் எரிபொருள் தொழிற்சாலை மற்றும் மூன்று மின் ஆற்றல் நிலையங்களுக்கான திட்டங்கள் பற்றிய விபரங்களும் அடங்கியிருந்தன. தாங்கள் உண்மையை மறைக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக இதற்கு மேலாகவும் அவர்கள் சென்றுள்ளனர். அனைத்துலக அணு ஆற்றல் துறையின் இயக்குனர் சபைத்தலைவர் திரு.கான்சுபிளிச்சு அவர்கள் இந்த வாரம் வடகொரியாவுக்கு வருகை தரும்பொழுது இவற்றில் எவற்றையேனும் பார்வையிட விரும்பினால் அதற்கு அவர் அனுமதிக்கப்படுவார் எனவும் அறிவித்தனர். அத்துடன் வடகொரியாவுக்கு வருகை தந்த ஒரு அமெரிக்கத் தூதுக்குழுவுக்குத் தாங்கள் சிறிதளவு புளுட்டோனியம் தயாரித்துள்ளதாகவும் கூறியுள்ளனர், இந்தப் புளுட்டோனியம் அணுகுண்டு தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படும் பொருளாகும்.

வடகொரியர்கள் எதை மனதில் வைத்துக்கொண்டு இப்படியெல்லாம் நடந்துகொள்கின்றார்கள்? ஏதோ ஒன்றை மூடி மறைப்பதற்காகவே எல்லாவற்றையும் வெளிப்படையாகத் திறந்துகாட்டுவதுபோல் நடந்துகொள்கின்றார்கள் போல் தோன்றுகிறது. பாவித்த அணு எரிபொருட்களிலிருந்து கணிசமான அளவு புளுட்டோனியத்தைப் பிரித்தெடுக்கும் தளபாடங்கள் போன்ற பொருட்களை வடகொரியர்கள் கொங்பியோனிலுள்ள அணு உலையிலிருந்து வேறு இடத்துக்கு அகற்றியுள்ளதாக அமெரிக்கப் புலனாய்வுத்துறை வல்லுனர்கள் சந்தேகிக்கின்றனர். ஆனால் இப்படி எதையும் செய்யவில்லையென பியொங்யாங் மறுதலிக்கின்றது. அணு ஆற்றல் கழிவுகளை அகற்றுவதற்கான ஆராய்ச்சிக்காக யொங்யோனிலுள்ள அணு ஆற்றல் உலையிலிருந்து சிறிதளவு புளுட்டோனியம் பிரித்தெடுக்கப்பட்டதென வடகொரியாவினால் அனைத்துலக அணு துறைக்குச் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரித்தெடுக்கப்பட்ட புளுட்டோனியம் எவ்வளவு என்பது எமக்குத் தெரியாது. தென்கொரிய அரசாங்கத்தால் நடத்தப்பட்டுவரும் வெளிவிவகார தேசியபாதுகாப்புச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவுத் தலைவரான திரு.கிம் கூக் முறையீடு செய்கின்றார். இது ஒரு குண்டு செய்வதற்குப்போதுமானதா? அல்லது இரண்டுக்கும் போதுமானதா? எங்களுக்கு இதைப்பற்றிய விபரம் தெரிவது அவசியம் என அவர் மேலும் கூறுகின்றார்.

## அணு ஆற்றலை மறைக்க வார்த்தை ஜாலம்

உண்மையைச் சொல்வதன் மூலம் வடகொரியர்கள் நுட்பமான விளையாட்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என ஏனைய தென் கொரியர்கள் நினைக்கின்றனர். அணுகுண்டைத் தயாரிப்பதில் பியொங்யாங் அதிகளவு அக்கறை காட்டவில்லை என பகுப்பாய்வாளர்கள் பல ஆண்டுகளாக விவாதித்துவருகின்றனர். அணுத்துறைப்பரவலாக்கல் பற்றிய மேற்கு நாடுகளின் அச்சத்தை மனதிற்கொண்டு வடகொரியர்கள் வார்த்தை ஜாலம் செய்கின்றார்கள் என அவர்கள் கூறுகின்றார்கள். இப்படி அச்சத்தை தருவதன் மூலம் தென் கொரியத் தளங்களிலுள்ள அமெரிக்க அணு ஆயுதங்களை அகற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளை அமெரிக்காவுடன் நடந்த உதவும் என எண்ணினார்கள். இதற்கு அதிகளவு செலவு செய்யவேண்டி நேரிடாது. இதனால் பலன் கிடைத்ததன் மூலம் இந்த ஏமாற்றுவித்தை அதன் தேவைக்கு மேற்பட்ட பயனைச் கொடுத்துள்ளது. வடகொரியர்களுக்கு

வெளிநாட்டு முதலீடுகள் தேவைப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவும், யப்பானும் இந்த அணு ஆற்றல் விடயம் முழுமையாக தீர்த்து வைக்கப்படும்வரை பொருளாதார ரீதியிலும், இராசதந்திர ரீதியிலும் வடகொரியாவை ஒதுக்கி வைத்துள்ளன. இருநாடுகளின் அல்லது அனைத்துலகப் பார்வையிடல் மூலம் இந்த விடயம் சீர்செய்யப்படும்வரை, தென்கொரியா கூட வடகொரிய தென்கொரிய வர்த்தகத்தை நிறுத்திவைத்துள்ளது.

அணு ஆயுத விடயத்தில் தென்கொரியா எவ்வளவு அக்கறை காட்டுகின்றது என்பது இந்த வர்த்தகத் தடைமூலம் தெரியவருகின்றது. வடகொரியாவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டால் அது தன்னையும் பாதிக்கும் எனத் தென்கொரியா கலங்குகின்றது. இந்த இரு நாடுகளும் சமாதானத்துக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தப் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்கப்பார்க்கின்றன. ஆனால் இது அவ்வளவு சுலபமான விடயமல்ல. வடகொரியாவின் பிரதம மந்திரி திரு.யொன் கியொங் மூக் அவர்களும் தென்கொரியாவின் பிரதம மந்திரி திரு.சுங்வொன்சிக் அவர்களும் சென்றாரம் சியோலில் சந்தித்து கடைசியாக நடத்திய பேச்சுவார்த்தையின்போது, கொரிய போர் முடிவுற்ற காலத்திலிருந்து பிரிந்து வாழ்ந்துவரும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட அளவு முதியவர்களை இரு நாடுகளின் எல்லைகளைத் தாண்டிச் சென்று தங்கள் உறவினர்களைச் சந்திப்பதற்கு ஒப்புதல் தர உடன்பட்டனர். இருநாடுகளும் தங்களுடைய அணு உலைகளைப் பார்வையிடுவது பற்றிய விடயம் சம்பந்தமாக தங்கள் நாடுகளின் பேச்சுவார்த்தைக் குழுவிடம் விடுவது எனவும், அவை இந்தவாரம் சந்திக்கும் என்று தீர்மானித்தனர். இதனிடையே பியொங்யாங் அனைத்துலக வர்த்தகத்தையும், முதலீடுகளையும் ஊக்குவிக்க முயற்சி செய்துவருகின்றது. பியொங்யாங்கில் வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடையே பேசிய வடகொரியத் துணைப்பிரதமர் திரு.கிம் டால்கியொன் அவர்கள் ''நாம் ஒருபோதும் பிச்சை கேட்கவில்லை. நாங்கள் உங்கள் நாடுகளைத் தாராளமனப்பான்மையுடன் நடந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்'' எனக்குறிப்பிட்டார்.

# வெற்றிகொள்வதற்கு கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்றது

(Asia Week—12.6.92)
ஆசிரியர் தலையங்கம்

உலகம் முழுவதும் தனிவல்லரசாக விளங்குவது தாங்க முடியாத தொல்லைகளைத் தரும் ஒருவிடயமாகும். சோவியத் ஒன்றியத்துடன் கெடுபிடியுத்தத்திலும், ஈராக்கியத் தலைவர் திரு. சதாம் குசைன் அவர்களுடன் பேரச்சம் தரும் போரிலும் ஈடுபட்டு வெற்றிவாகை சூடிய அமெரிக்காவின் நிலை சந்தோசப்படக்கூடியவொன்றாகவில்லை. ஓர் ஆண்டுக்குமுன் சர்வதேச அரங்கில் அமெரிக்கா பெரும் மதிப்பைப் பெற்றிருந்தது. சோவியத் பேரரசின் வீழ்ச்சி, அமெரிக்காவின் முதலாளித்துவக் கொள்கைக்கு எதிராகவிருந்த கம்யூனிச சித்தாந்தத்தின் முடிவுக்கு வித்திட்டது. வேறு ஒரு நாட்டைக் கைப்பற்ற முயன்ற கொடுங்கோல் ஆட்சியாளரும், தற்பெருமை கொண்டவருமாகிய ஒருவரை அடிபணியச் செய்ய ஐ. நா உறுப்பு நாடுகள் பலவற்றின் ஆதரவுடன் அமெரிக்க இராணுவம் நடவடிக்கையை மேற்கொண்டது. புதிய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்கவேண்டுமென்ற அமெரிக்காவின் நோக்கத்திற்கு இந்த நாடுகள் தங்கள் ஆதரவைக் கொடுத்தனவா என்ற கேட்டால் அவை இதில் ஒருவித அக்கறையும் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

மற்றவர்களுக்கு தடுமாற்றத்தைக் கொடுக்கூடிய அதனுடைய நடவடிக்கைகள் காரணமாக அகில உலகினதும் தலைமைத்துவம் தன்வசமே இருக்கின்றது எனக்கோரும் உரிமையை அண்மைக்காலமாகஅமெரிக்கா இழந்துவருகினறது. மற்றைய வல்லரசுகளின் எழுச்சியைத் தடுப்பதன் மூலம் எப்படி அமெரிக்கா தன்

ஆதிக்க நிலையைப் பேணமுடியும் என தற்செயலாக வெளி வந்த அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடத்தின் (Pentagon) இரகசிய ஆவணங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. இதைக்கண்டு அவமானமடைந்த அமெரிக்க அரச மேலாளர்கள் இதை மறுத் துள்ளார்கள். திரு. சதாம் அவர்களைவிட ஈரானே அச்சம் தரக்கூடியது என கருதியதால், ஈரானுக்கு எதிராக அரணாக விளங்குவார் என்ற தவறான கணிப்பின் காரணமாக, பிராந் தியத்தில் மேலாதிக்கம்பெற திரு. சதாம் அவர்கள் மேற் கொண்ட முயற்சிக்கு அமெரிக்கா ஊக்கமளித்ததாக பின் வெளி வந்த செய்திகள் தெரிவித்தன. கடன் அடிப்படையில் ஈராக் ஆயுதக் கொள்வனவு செய்ய அமெரிக்கா உத்தரவாதம் அளித் ததாகவும் அறியமுடிகின்றது. இன்று அமெரிக்காவும் வளை குடா போருக்கு முன் ஈராக்கு ஆயுத வழங்களை மேற்கொண்ட அதன் சகாக்களான பிரித்தானியாவும், பிரான்சும் பதவியிலி ருக்கும் திரு. சதாம் அவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதைவிடுத்து ஈராக்கிய மக்களை இன்னலுக்கு உள்ளாக்கத்தக்க கடுமையான தடைகளை ஈராக்குக்கு எதிராகக் கொண்டுவரவேண்டுமென்று தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றன. அவரின் ஆட்சியின் கீழ் துன்பப்படும் மக்களை விட குறைந்தளவு பாதிப்பையே ஈராக் கிய இரும்புமனிதரான திரு. சதாம் சந்திக்கக்கூடிய ஒரு தாக் குதலை இரகசியமாக நடாத்த இப்பொழுது முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. பெருந்தொகையான போலி நாணயத்தை ஈராக்குக்குள் பரவவிடுவதன் மூலம் அதன் பொரு ளாதாரத்தைச் சீர்குலைக்க அமெரிக்கா முயல்வதாக அங்குள்ள செய்திதாள்கள் கூறுகின்றன. இப்படியான நடவடிக்கை சட்ட விரோதமானதும், ஒரு நாட்டின் இறைமையை மீறுவதாகவும் இருக்கும். இப்படியான கீழ்த்தரமான வழிமுறைகளைப் பெரிய நாடுகள் கையாளும் பொழுது இது சர்வதேச உறவுகளை இழிவுபடுத்துவதாகவிருக்கும்.

பான் ஆம் வான் சேவை (Pan Am Flight) யைச் சேர்ந்த அமெரிக்க வானூர்தி ஒன்றை 1988ம் ஆண்டில் இரண்டு லிபிய நாட்டவர்கள் குண்டுவைத்துத் தகர்த்தார்கள் எனக்குற்றம் சுமத்தி அவர்களைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்கா லிபியாவுக்கு நெருக்குதலைக் கொடுத்துவருகின்றது. இந்தவிட யம் பற்றி விசாரணைகளை மேற்கொண்ட அமெரிக்கர்களே உண்மையில் லிபியா குற்றம் புரிந்துள்ளதா என்பதில் சந்தேக முறுகின்றனர். குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு லிபியர்களையும் உலக நீதி மன்றம் விசாரிப்பதற்கு அமெரிக்கா

ஒப்புதல் வழங்க மறுகின்றது. திரு. றொட்னி கிங் போன்ற தன் சொந்த நாட்டுக் கறுப்பினக் குடிமக்களுக்கு நீதிவழங்கு வதை உறுதிப்படுத்த முடியாதிருக்கும் அமெரிக்க நீதிமன்றத் தால் எப்படி இந்த இரண்டு வியியர்களுக்கும் நீதிவழங்க முடியு மென கேட்பதன் மூலம் விபியர்கள் தங்கள் விவாதத்திற்கு வலுச்சேர்த்து வருகின்றார்கள். தங்கள் பிரதேசத்தில் ஆள் நெருக்கடியுள்ள ஏதிலிகள் முகாம்களிலிருந்து பொருளாதார நோக்குடன் அங்கு சென்ற வியட்நாமிய இடம்பெயர்ந்தோரை அவர்களுடைய நாட்டுக்கு அனுப்புவதை வெறுமனே அமெரிக்கா பார்த்துக்கொண்டிருப்பது கொங்கொகொங்கில் வாழ்வோருக் குக் கவலையைத்தருவதாகவிருக்கின்றது. இருப்பினும் தங்கள் நாட்டில் நிலவும் கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து படகில் அமெரிக்காவுக்குச் சென்ற கெயிற்றிய மக்களை அவர்களுடைய நாட்டுக்கு விரைவாக அனுப்புவதையிட்டு அமெரிக்கா ஒருவித மனிதாபிமானத்தையும், அன்பையும் காட்டவில்லை. போட்ஒவ் பிறின்சின் (Port- Au- Prince) நிலவும் இரக்கமற்ற கொடூரமான ஆட்சிக்கு எதிராக அமெரிக்கா விதிக்கும் தடைகளால் ஏற்பட்ட தாக்கம் காரணமாகவும் கெயிற்றிய மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றார்கள். எழுச்சியூட்டுகின்ற தலைமைத்துவத் துக்கு உதாரணமாக விளங்குவதே உலகத்துக்குத்தேவைப்படு கின்றது. இதை வழங்கும் நிலையில் அமெரிக்கா இருக்கின்றது. இதைச் செய்வதற்கு அண்மைக்காலத்தில் இது நடத்துவந்தது போலின்றி நன்கு சிந்தித்துச் செயலாற்றவேண்டும். ★

### ஒரே கட்டணம்

வழுக்கைத் தலையர் ஒருவர் முடிவெட் டும் நிலையத்திற்குள் நுழைந்தார். 'முடி வெட்ட எவ்வளவு கட்டணம்? என்று கேட் டார்.

'பத்து ரூபாய்' என்று பதில் வந்தது.

'சில முடிகள் வெட்டுவதற்குப் பத்து ரூபாயா?' என்று கேட்டார் வந்தவர்.

'கட்டணம் முடிவெட்டுவதற்கு அல்ல, முடியைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு' என்று உடனே பதில் வந்தது.

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மூன்று போர்த்திறன் வல்லுனர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர்

—அரசியல் விமர்சனம்- எச். எல். டி. மகிந்தபாலா—
(ஒப்சேவர் 14-6-1992)

தெற்கிலுள்ள வானூர்தி தளத்திலிருந்து புறப்பட்ட இலங்கை வான்படையைச் சேர்ந்த இரண்டு எப் 7 ரக ஜெட் வானூர்திகள், பத்து நிமிடங்களுக்குள் யாழ்ப்பாணத்தின் வான்பரப்புக்கு மேலாகப் பறந்து தங்கள் இலக்குகள் மீது குறிப்பிட்ட நேரத்தில் குண்டுகளை வீசத் தொடங்கின.

நேரம் காலை 6.00 மணி
காலம் 1992ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி.

வடக்கில் 'சண்டமாருதம்' நடவடிக்கையும், கிழக்கில் 'சத்பல' நடவடிக்கையும் முப்படைகளாலும் ஒரேநேரத்தில் மேற்கொள்ளப்பட்டு, அவை திட்டமிட்டபடி விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டன. முதலாவது தாக்குதல் வல்வெட்டித்துறையிலுள்ள விடுதலைப் புலிகளின் 'ரடார்' தளத்தின் மீது நடத்தப்பட்டது. கடற்படையைச் சேர்ந்த பீரங்கிப்படகுகள், கடற்பரப்பிலிருந்து பீரங்கிகளை வீசத் தொடங்கின. முப்படைத் தளபதிகளால் அடையாளங் காணப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளின் மீது இந்த இரண்டு ஜெட் வானூர்திகளும் நீலவானில் பறந்து சென்று குண்டுமாரி பொழியத் தொடங்கின. வடக்கிலுள்ள முக்கிய வானூர்தி தளமான பலாலிக்குக் கிழக்கேயுள்ள தொண்டமானாறு வல்வெட்டித்துறை ஆகிய நிலப்பரப்புக்களில் வான்பரப்புக்கு மேல் இவை பறந்தன. ஒவ்வொன்றாக ஒவ்வொரு இலக்குகளையும் இந்த இரு ஜெட் விமானங்களும் தகர்த்தெறிந்தன. விடுதலைப் புலிகளுடைய

கடற் கண்ணிவெடித் தொழிற்சாலை, படகுகள் கட்டும் தளம், எரிபொருள் களஞ்சியம் தொண்டமானாற்றிலுள்ள பெண் போராளிகளின் தங்ககங்கள் ஆகியவை இவற்றால் தகர்த்தெறியப்பட்டன.

இது முப்படைகளுக்கும் பொறுப்பான முப்படைத் தளபதிகளும் ஒருங்கிணைந்து நன்ற கத் திட்டமிட்ட நடவடிக்கைகளின் தொடக்கமாகும் இம்மூவரும் நன்கு பயிற்சி பெற்ற தகுதிவாய்ந்த தளபதிகளாவர் ஏயர் மார்சல் ரெறன்ச் குணவர்த்தனா கிறான்வெல் வான்படை இராணுவக் கல்லூரி (Granwell Air Military College) யின் பட்டதாரியாவர். கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பர்ணாந்து டாட்மவுத் (Dartmouth) திலுள்ள மதிப்புவாய்ந்த கடற்படைக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றவர். லெப்ரினன்ட் செனரல் சிசில் வைத்தியரத்னா சான்ட்கேசுற் (Sandhurst) றிலுள்ள அரச இராணுவக் கல்லூரியின் பட்டதாரியாவர். இந்த அடிப்படைத் தகைமைகளுடன் இந்தமூன்று மேலாளர்களும் புதுடில்லியிலுள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பட்டப் பின்படிப்பைப் படித்தவர்களாவர்.

முப்படைத் தளபதியான சனாதிபதி பிரேமதாசா அவர்களால் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒரு சிறிய அறிவித்தலைத் தொடர்ந்து இம்மூவரும் கூட்டாகச் செயல்படத் தொடங்கினர். இந்த அறிவித்தல் மூலம் கூட்டுப்படைத் தலைமையகம் அமைக்கப்பட்டதோடு, இவர்கள் மூவரும் கூட்டுச் சேர்ந்து திட்டமிடவும், அத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டிய வழிவகைகளைக் காணவும், அதைச் செயல்படுத்தித் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுவதில் இறங்கவும் செயலுரிமை தரப்பட்டது. மேலிடத்திலிருந்து திட்டமிடப்பட்ட தந்திரோபாயமான இந்த இராணுவ நடவடிக்கைகளில் புதிய வழிமுறைகளையும், தெம்பையும் கொடுக்கின்றது இந்த வழிமுறை கட்டாயமாகத் தேவைப்பட்ட நடவடிக்கையென்றும், இது தற்போது நல்ல பயனை அளித்துள்ளதென்றும் முப்படைத் தளபதிகள் கூறுகின்றனர்.

## கூட்டுப்படைகள்

நாங்கள் மற்றவர்களைக் கலந்தாலோசிக்காமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. எல்லாமட்டத்திலும் இப்படியான ஒருங்கிணைந்த செயல்முறைகள் உண்டு என்று கூறுகின்றார் லெப்ரினன்ட் செனரல் சிசில் வைத்தியரத்தினா அவர்கள். தாங்கள் மூவரும் கூட்டுச்சேர்ந்து எடுக்கும் நடவடிக்கைகள் முப்படைகளை

யும் ஒருங்கிணைத்துள்ளது எனக் கூறுகின்றனர். முன்னைய கூட்டுப் படைத் தலைமையகத்தை ஒழித்துத் தற்போதைய கூட்டுப் பாது காப்புப் படையை அமைத்து அதற்கு ஏயர் மார்சல் குணவர்த்த னாவைத் தலைவராகத் தெரிவுசெய்தது இந்த நடவடிக்கைகளுக்கு ஒரு உத்வேகம் பிறக்கச் செய்துள்ளது. முன்னைய காலங்களில் வடக்கில் எடுக்கும் நடவடிக்கைகளும் கிழக்கில் எடுக்கும் நடவடிக் கைகளும் வெவ்வேறாக இருந்தன. இப்பேதுள்ள புதிய நடை முறையில் இரண்டும் ஒருங்கிணைந்து ஒரே போர் நடவடிக்கையாக எடுக்கப்படுகின்றது.

இந்த முப்படைத் தளபதிகளுக்கிடையே நெருங்கிய நட்புறவு இருப்பதனாலும் அவர்கள் கையில் முழு செயலுரிமையும் இருப்ப தனாலும் நடைமுறைத் தளைகள் எல்லாம் தவிர்க்கப்படுகின் றன. அவர்கள் நன்கு பயிற்றப்பட்ட நடைமுறைகளை மேற் கொள்வதனால் அவர்களிடையே பொறாமையோ எதிர்ப்புக் களோ தோன்றுவதில்லை. இந்தப் போட்டி பொறாமை தான் இராணுவ நடவடிக்கைகளின் வெற்றி வாய்ப்புக்குத் தடையாக இருக்கும் காரணிகளாகும் இப்படிப்பட்ட தாக்கமான சூழ்நிலை யிலும் இருவர் சேர்ந்து மற்றவரைக் கேலி செய்வது வழக்கமாக உள்ளது. அவர்கள் தங்கள் யுக்திகளைத் தங்களுக்கிடையே விவாதித்தும், கலந்தாலோசித்தும் திட்டங்களை வகுக்கின்றனர். இவ்வளவும் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையிலேயே நடைபெறுகின் றது. அவர்களின் ஒரே குறிக்கோள் இராணுவ ரீதியிலும், அரசி யல் ரீதியிலும வெற்றிவாகை சூடுவதாகும்.

வடக்கிலும், கிழக்கிலும் எடுக்கப்படவிருக்கும் பாரிய இரா ணுவ நடவடிக்கைகளுக்கான புதிய போர்த்திறன் வாய்ந்த திட் டங்களை வகுப்பது கூட்டுப்பாதுகாப்புப் படைப் பிரிவினரின் புதிய தலைமையகத்தில் ஏப்ரல் மாதம் 10ம் திகதி ஆரம்பிக் கப்பட்டது. மரபுவழி நடைமுறைகளின்படி புதிய தலைமையகத் திறப்புவிழா நல்லநேரமான முற்பகல் 7 00 மணிக்கு நடைபெறும் எனக் கணிக்கப்பட்டது அங்கிருந்து அவர்கள் இணைப்புக் கூட்டு முன்னணித் தலைமையகத்தைத் திறப்பதற்காகத் அனுராதபுரம் சென்றனர். அங்கிருந்து முப்படைத்தளபதிகளும் அனுராதபுரத்தி லுள்ள சிறிமகாபோதி (அரசமரம்) விகாரைக்குச் சென்று நாட் டில் சமாதானமும், அமைதியும் நிலவவேண்டியும், இலங்கையின் ஐக்கியமும், ஏற்படவேண்டியும் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் ஏப்ரல் 15ந் திகதி ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பாரிய நடவடிக்கைகளுக்கு வேண்டிய முழுமையான செயல் திறன் பெறவேண்டியிருந்ததால், அதனை

அலசி ஆராய்ந்து அந்நடவடிக்கைகளை மே மாதம் 28 ம் திகதி மேற்கொள்வதற்கு வேண்டிய சகல விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டன. மே மாத நடுவில் இத்திட்டங்கள் தரைப்படைத் தளபதிகள் நால்வராலும் நன்கு பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மே மாதம் 21 ம் திகதி முப்படைத் தளபதிகள் மணலாறு, முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு வருகை தந்தனர். இது ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையாகும். ஐந்து முனைகளிலிருந்து தாக்குதலை நடத்துவதற்காகப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. முல்லைத்தீவு, தொண்டமானாறு, தெல்லிப்பளை, மன்னார், வவுனியா ஆகியன அந்த ஐந்து முனைகளாகும். இந்த நடவடிக்கைகள், ஒரே நேரத்தில் மே மாதம் 28 ம் திகதி காலை 6.00 மணித்துத் தொடங்க இருந்தன. கிழக்கிலும் ஒரு பாரிய நடவடிக்கை இந்நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது. போராளிகள் மீது எல்லா முனைகளிலும் ஏக காலத்தில் தாக்குதல்களை மேற்கொள்ளுவதன் மூலம் அவர்கள் ஒரு முனையில் ஒன்றுதிரண்டு இராணுவத்தினர் மீது பாரிய தாக்குதல் மேற்கொள்வதைத் தடுப்பதே இந்த உத்தியாகும்.

## தெல்லிப்பளை வீழ்ந்தது

வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் இராணுவம் முழுமையான எதிர்ப்பைச் சந்திக்கவேண்டியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக வவுனியாவில் நடைபெற்றுவரும் சனாதிபதியின் நடமாடும் செயலகத்துக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டியிருந்தது. இது இராணுவத்தினரின் உறுதியைத் தளரச் செய்யவில்லை. முதன்முறையாக விடுதலைப் புலிகள் முப்படைகளின் ஒருங்கிணைந்த முழுப்பலத்தையும் சந்திக்க வேண்டி நேரிட்டது. இரண்டு எப் 7 ரக குண்டு வீச்சு ஜெட் வானூர்திகள் இதற்கு முன்னர் அவர்கள் மீது குண்டுவீசியது கிடையாது. முதன் முறையாகப் பலாலியிலிருந்து தாங்கிகள் அவர்களது பலமான காவலரண்களை நோக்கி நேரடியாகச் சென்றன. நீண்ட கரையோரங்களில் நங்கூரமிட்டிருந்த கடற்படைப் பீரங்கிப் படகுகள் சரமாரியாகப் பீரங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தன.

இப்படிப்பட்ட தாக்குதலை விடுதலைப் புலிகள் ஒருபோதும் சந்திக்கவில்லை. தாங்கிகள் தெல்லிப்பளையை நோக்கி விரைந்தன. இராணுவ யுக்தி காரணமாகத் தெல்லிப்பளையைக் கைப்பற்றுவது அவசியமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் பலம்

வாய்ந்த அரண்கள் பலாலி விமானத்தளத்துக்கு மிக அண்மை யில் இருந்தன. திரு. எஸ். ஜே. வி. 'செல்வநாயகம் அவர்களின் பிறந்த இடமான தெல்லிப்பளைக்குச் செல்லுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இதற்கு முன்னர் தெல்லிப்பளையைக் கைப்பற்றுவதற்காக இராணுவம் மூன்று முறை சண்டையில் ஈடுபட்டிருந்தது. (வடமராட்சி நடவடிக்கை தொடக்கம்) தெல்லிப்பளையைக் கைப்பற்ற இம்முறையும் மூன்று நாட்கள் எடுத்தது.

'இது ஒரு கடுமையான சமரென்பதை லெப்ரினன்ட் ஜெனரல் வைத்தியரத்தினா அவர்கள் ஒப்புக்கொள்கின்றார்.'' சில இடங் களில் நேரடிக் கைமோதல் நடைபெற்றது. இரு பகுதியினருக்கும் பாரிய இழப்புகள் ஏற்பட்டது. முன்னணியில் சென்ற சி. எல். ஐ. பட்டாலியன் (CLI Battalion) காலாட்படைப் பிரிவு அந்த நாள் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. இது ஒரு மாபெரும் வெற்றியாகும். 'எனது வீரர்களையிட்டு நான் பெருமைப் படுகின்றேன். எனது வீரர்கள் கடுமையாகச் சண்டையில் ஈடு பட்டனர். அவர்களின் போர்த்திறனுக்குகந்த மாபெரும் வெற்றி யாகும் இது' என அவர் மேலும் கூறினார். 'இந்த நடவடிக் கையின் நோக்கம் தெல்லிப்பளையைக் கைப்பற்றுவதும், அவ் நிலப்பரப்பிலிருந்து விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பது மாகும்' என அவர் விளக்கினார். 'பலாலி வான் தளத்துக்கு வந்து செல்லும் வானூர்திகளுக்கு இடையூறு விளைவிக்குமுகமாக விடுதலைப் புலிகள் வானிற் செல்லும் ஏவுகணைகளைப் பாவிக் கின்றனர்' என அவர் மேலும் விளக்கமளித்தார். இந்த விட யத்தை விளங்கிக் கூறும் வகையில் ஏயர் மார்சல் குணவர்த்தனா அவர்கள், ''நாங்கள் விடுதலைப் புலிகளுக்கிருந்த இந்த வாய்ப்பை முறியடித்துவிட்டோம். எங்களுக்குத் தேவைப்பட்ட முன்னணிப் பாதுகாப்பு இலக்கை எட்டிவிட்டோம்' எனக் கூறினார்.

இந்த உக்கிரமமான சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவையான இரா ணுவத் தளபாடங்களை யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப் பளைக்கு ஏற்றி வரலாயினர். விடுதலைப் புலிகளுக்குத் தேவை யான பொருட்களை ஏற்றிவந்த அவர்களின் வாகனங்களைச் சிறிலங்காவின் வான்படை தடுத்து நிறுத்தியது. வான்படைத் தாக்குதல்கள் குறிதவறாமல் விடுதலைப் புலிகளின் வாகனங்களை நாசமாக்கின. தப்பி ஓடும் தீவிரவாதிகளையும் அவை விட்டு வைக்கவில்லை. தங்கள் பாதுகாப்பரண்களை விட்டு ஓடிச் செல்லும் தீவிரவாதிகளை, எங்கள் உலங்கு வானூர்திகளின்

பீரங்கிகள் பதம்பார்த்தன. தாங்கிகள் பாதுகாப்பரண்களை தகர்த்ததும், அதிலிருந்து தப்பி ஓடும் தீவிரவாதிகள் மீது வானிலிருந்து தாக்குதல் மேற்கொண்டோம். தெல்லிப்பளையில் 300 - 400ற்கு இடைப்பட்ட உயர் நிலை விடுதலைப் புலிகளை அழித்திருப்போம். எந்த முறையில் நடைபெறும் என்று எதிர்பார்த்தோமோ அதிஷ்டவசமாக அப்படியே நடந்தது எங்களை விடுதலைப் புலிகள் நேரடியாக எதிர்கொள்ள வேண்டும் என எதிர்பார்த்தோம், அது அப்படியே நடந்தேறியது. பெரும்பாலும் தாக்குதலை நடத்திவிட்டு ஓடுவது தான் அவர்கள் வழக்கம். இம்முறை அவர்களை வெளிக்கொணர்ந்து நேரடிப் போரில் ஈடுபடுத்தத் திட்டமிட்டோம். அதன்படியே நடைபெற்றது என மன நிறைவுடனான புன்சிரிப்புடன் கூறினார் ஏயர் மார்சல் குணவர்த்தனா அவர்கள்.

## கடற்படையின் பங்கு

இப்படியான இந்நடவடிக்கைகள் தரையிலும், வானிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கடற்படையும் தனது பங்களிப்பைச் செய்வதற்காக மக்கள் சீனக் குடியரசில் கட்டப்பட்ட தனது பீரங்கிப் படகுகளை முதன் முறையாக இந்நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியது. இந்த நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்காகக் கடற்படை தேவையான இராணுவத் தளபாடங்களையும், இராணுவ வீரர்களையும், தாங்கிகளையும் கொண்டுவந்திறக்கியது. இராணுவ வீரர்களையும், தளபாடங்களையும் கடல்வழி மார்க்கமாகவே கொண்டுவரமுடியும். கடற்புலிகளின் தற்கொலைப் படையிலிருந்து தங்களைப் பாதுகாப்பதோடல்லாமல் அந்தக் கடல்வழிகளை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து விடுவிப்பதும், விடுதலைப் புலிகள் தங்கள் படையணிகளை வடக்கிலிருந்து தெற்குக்குக் கடல்வழியாகக் கொண்டு செல்வதைத் தடுப்பதும் கடற்படையின் கடினமான கடமையாக இருந்தது. இந்நடவடிக்கைகளில் கடற்படைத் தளபதி கிளான்சி பர்ணாந்து அவர்களின் பங்களிப்பு முக்கியமானது. படையணிகளைக் கொண்டு செல்வதைக் கண்காணிப்பதோடல்லாமல், அவர் பின்னணியில் இருந்து செயல்பட்டுக் கொண்டு சென்னையிலுள்ள செல்வி ஜெயலலிதா ஜெயராமைச் சந்திப்பது வரை தனது அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.

கடற்படைத் தளபதி திரு பர்ணாந்து அவர்கள் இந்தியர்கள் கொடுக்கும் ஆதரவைப் போற்றுகின்றார். தென்னிந்தியக் கடற்பிரதேசங்களிலிருந்து விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கு இந்தியர்கள் அளப்பரிய பங்கை வழங்கு

கின்றார்கள் என்கிறார் கடற்படைத் தளபதி பர்ணாந்து அவர்கள், செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கமும், இந்தியக் கடற்படையும் விடுதலைப் புலிகளுக்கெதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடிப்ப தோடல்லாமல், பாக்கு நீரிணையைக் கண்காணிப்பதிலும், இந்திய கடற்கரைப் பிரதேசத்தைக் கண்காணிப்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றன. விடுதலைப் புலிகள் எங்கள் எதிரிகள். இந்தியக் கடற்படையின் நெருங்கிய ஒத்துழைப்போடு பாக்கு நீரிணையை விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இல்லாத கடற் பரப்பு ஆக்குவோம் என அவர் மேலும் விளக்கிக் கூறினார்.

செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தனது முழுப்பலத்தையும் உபயோகிக்கின்றார். அவருடைய நிலைப் பாடு எங்கள் நடவடிக்கைகளுக்கு உதவுகின்றது. அத்துடன் அவர் எடுக்கும் நடவடிக்கைகள் உண்மையானவையும் முன்னேற்றகர மானவையுமாகும்,'' எனக் கூறும் தளபதி பர்ணாந்து அவர்கள் ஜெயலலிதாவின் செயலில் திருப்தியடைவதோடு அல்லாமல் அவர் இந்தச் சிக்கலான விடயத்தைக் கையாளும் விதத்திலும், அவரின் அரசியல் நடவடிக்கைகளிலும் திருப்தி அடைகின்றார். இந்த அரசியல் ஆதரவு கரையோரக் காவலில் ஈடுபடும் கரையோரக் காவல்துறைக்கு உதவுகின்றது. இந்தியக் கடற் படைத் தளபதி அட்மிரல் ராமதாசு அவர்களுடன் தளபதி பர் ணாந்து அவர்கள் நெருக்கமான தொடர்புவைத்துள்ளார். இரு நாடுகளும் ஒருங்கிணைந்து கண்காணிப்பில் ஈடுபடுவதும்; ஒவ் வொரு நாடும் தனது பக்கத்தில் கடுமையான கண்காணிப்பில் ஈடுபடுவதும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தியுள்ளது. இறங்குதுறைப்படகுகள், புதிய சீனத்தயாரிப்புப் பீரங்கிப்படகுகள், இசுரேலிய அதிவிரைவுத் திவோராப்படகுகள் சகிதம் சிறிலங்காக் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுகின் றது. கடற்புலிகளின் நடவடிக்கைகள் குறிப்பாக வல்வெட்டித் துறையிலும் மாதகலிலும் உள்ள கடற்புலிகளின் தளங்களையும், கண்ணிவெடித் தொழிற்சாலைகளையும் விடுதலைப்புலிகளின் படகு கட்டும் தளத்தையும், அழிப்பதே சண்டமாருதம், மற்றும் 'சத்பல' ஆகிய நடவடிக்கைகளின் நோக்கமாகும். இந்நடவடிக் கைகள் கடற்கண்ணிவெடிகளால் கடற்படைப்படகுகளுக்கு ஏற் படும் அச்சுறுத்தல்களை வெகுவாகக் குறைத்துள்ளன.

யாழ் குடாநாட்டுக்கருகாமையிலுள்ள தீவுப்பகுதிகளில் கடற்படை முக்கிய பங்கை வகிக்கிறது. காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, மண் டைதிவு ஆகிய தீவுப்பகுதிகள் கடற்படையின் பாதுகாப்பிலேயே

இருக்கின்றன. ஏறக்குறைய 5,000 மக்கள் இத்தீவுகளில் உள்ளனர். இங்கேயுள்ள மக்களின் உள்ளங்களையும் மனதையும் கவரும் பணியில் கடற்படை ஈடுபட்டுள்ளது. உண்மையில் மக்களின் உள்ளங்களையும் மனதையும் கவருபவர்களுக்கே வெற்றிகிடைக்கும். இந்தப் பணியில் தாங்கள் வெற்றிபெறுவார்கள் எனக் கடற்படை நம்புகின்றது. சிறிலங்காப் படையினரிடமிருந்து தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற கோட்பரப்புகை மூலமே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு பெருகுகின்றது. இந்த மாயை மாறிக்கொண்டுவருகின்றது. போரினால் ஏற்பட்ட மனத்தளர்வு, பொருளாதார இன்னல்கள், மற்றும் தங்கள் வாழ்க்கையில் விடுதலைப் புலிகளின் தலையீடு ஆகிய இன்னல்களினால் தங்கள் அன்றாட சாதாரண வாழ்க்கையை நிம்மதியுடன் நடத்த ஒரு நம்பிக்கையான பொது நிருவாகத்தை எதிர்பார்க்கின்றார்கள். இன்று இந்த தீவுகள் தமிழ்மக்களுக்குச் சொந்தமாக இருக்கின்றது. இரு பகுதியினரின் சண்டை ஒய்ந்திருக்கும் வரை கடற்படையினரால் நிருவகிக்கப்பட்டுவரும் தீவுகளில் வசித்துவரும் மக்கள் தற்காலிகமாக வசதியான, பாதுகாப்பான வாழ்வை அமைதியாக நடத்தி வரமுடியும்.

ஆனால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகள் வெடிச்சத்தங்கள் கேட்கும் இடங்களிலும் கிடைத்துள்ளது. வவுனியாவில் நடைபெற்ற சனாதிபதியின் நடமாடும் செயலகத்தின் செயல்கள் வெற்றிகரமாக நடைபெற்றதிலிருந்து 'சண்டமாருத' மற்றும் 'சத்பல' நடவடிக்கைகளின் பெறுபேறுகளைத் தெரிந்துகொள்ளலாம். சமர் நடக்கும் பிரதேசங்களில் சமாதான எல்லைகளைக் கூட்டிப் பொது நிருவாகத்தை சனாதிபதி பிரேமதாசா நடத்தியதை அருகாமையிலிருந்து செயல்படும் விடுதலைப் புலிகளாலும் தடுத்து நிறுத்தமுடியவில்லை. தரையில் கிடைக்கும் வெற்றியின் பலாபலன்கள் இவையேயாகும். அரசியல் பேச்சுவார்த்தைகளிலேயே முழு வெற்றியும் தங்கியிருக்கின்றதென்பதை முப்படைத் தளபதிகளும் ஒப்புக்கொள்கின்றனர். படையினர் போரிடுவோரைப் பேச்சுவார்த்தை மேசை வரைக்கும் கொண்டு செல்ல உதவலாம். இதற்கப்பால் ஒரு நிரந்தரமான தீர்வைக் காண்பது அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோரின் பொறுப்பாகும்.

## பொது நிருவாகத்தை மீண்டும் ஏற்படுத்தல்

முன்னணிப் பாதுகாப்பு அரண் நிலப்பரப்பு விரிவாக்கப்படுவதை தமிழ் மக்கள் மறைமுகமாக வரவேற்கின்றனர். வவுனியாவைச் சுற்றியுள்ள முன்னணிப் பாதுகாப்பு அரண் மடுவுக்கும்,

மன்னாருக்கும் விரிவாக்கப்படுவதை தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். விடுதலைப் புலிகள் காடுகளிலேயே இயங்குகின்றனர். சண்டைப் பிரதேசங்களில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளையும், பொது நிருவாக முறைகளையும் உன்னிப்பாகக் கவனிக்கும் வெளிநாட்டு இராசதந்திரிகள், இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இராணுவத்தின் பக்கம் சாய்வதாகக் கூறுகின்றார்கள். முன்னர் இராணுவத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்த கத்தோலிக்கக் குருமார்கள் தங்களுடைய எண்ணத்தை மாற்றியுள்ளார்கள். இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து பொது நிருவாகத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதே அவர்களது நோக்கமாகும். முன்னணிப் பாதுகாப்பு அரணை விரிவாக்கினாலே இக்குறிக்கோளை அடையலாம். அண்மைக்கால நடவடிக்கைகளின் போது இராணுவம் பலாலியிலிருந்து தெல்லிப்பளைக்கும், முல்லைத்தீவிலிருந்து அலம்பில், செம்மலை ஆகிய இடங்களுக்கும் முன்னேறியது. இராணுவ ரீதியில் இது குறுகியகால கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும். ஆனால் இப்படியாகக் கைப்பற்றிய பிரதேசத்தை நீண்ட காலம் வைத்திருப்பதுதான் அரசியல் ரீதியான பொது நிருவாகத்தை வடக்கிலும், கிழக்கிலும் சீராக நடத்த உதவும். இப்படி நடந்தால்தான் வடக்கிலும் கிழக்கிலும் சனநாயகம் வளர இடமேற்படும்.

தெல்லிப்பளை வீழ்ச்சியுற்றதாலோ முல்லைத்தீவிலிருந்து கிழக்கு நோக்கி முன்னேறியதாலோ போர் முடியப்போவதில்லை. இன்னும் இராணுவம் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் பலவுண்டு. ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் பெறும் வெற்றிகள் சமரில் ஈடுபடும் படையினரிடையே மனோதத்துவ ரீதியில் நல்ல பலன்களை ஏற்படுத்தும். படையினரிடையேயுள்ள மனநிலையைப் பார்த்துப் பெருமிதமடைகிறார் லெப்ரினன்ட் சென்றல் சிசில் வைத்தியரத்தினா அவர்கள். சிலவேளைகளில் மருத்துவ வசதியில்லால், சாப்பாடு இல்லாமல், ஓய்வில்லாமல் பாதுகாப்பரண்களிலிருந்து சமரில் ஈடுபடுவது சுலபமான காரியமல்ல. ஆனால் எங்கள் வீரர்கள் தற்போது எவ்விதத் தடைகளையும் தாங்கும் வலிமைகொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

அடுத்த கட்ட நடவடிக்கை யாழ்ப்பாணத்தின் மீதானதா?

''எதையும் நாம் வெளிப்படுத்த விரும்பவில்லை. நாம் விரிவான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றோம். எங்கள் அடுத்த நடவடிக்கை என்ன என்பதைச் சற்றுப் பொறுத்திருந்து பாருங்கள்'' என லெப்ரினன்ட் சென்றல் வைத்தியரத்தினா கூறினார்.

# விருதலைப் புலிகளைப்பற்றி இந்தியாவின் தருமாற்றம்

—குல்திப் நாயர்—

(இலண்ட்- 7. 6 92)

விடுதலைப் புலிகளை இந்தியா தடைசெய்ததைப் பற்றி இலங்கை மக்கள் அக்கறை காட்டவில்லை. இதை ஒரு பெரிய விடயமென அவர்கள் நினைக்கவில்லை. இந்தத் தடை பிரகடனப்படுத்தப்பட்ட மூன்று நாட்களுக்குள் நான் கொழும்பில் இருந்தபொழுது, இந்த விடயத்தைப் பற்றிய தர்க்கம், சீர்தூக்கிப் பார்த்தல் எல்லாம் முடிவுற்று, இதை முற்றிலும் மறந்துவிட்ட நிலையில் அங்குள்ள மக்கள் இருந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது. முன்னாள் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களைத் தவிர வேறு எவரும் இந்தத் தடையை வரவேற்கவில்லை. புதுடில்லியைச் சேர்ந்த மேலாளர்கள் கூட, இந்தத் தடை ஒரு விளைவையும் ஏற்படுத்தப்போவதில்லை என்றே கருதுகிறார்கள். இந்தத் தடைபற்றி நடைபெற்ற ஒவ்வொருவிவாதத்தின் முடிவிலும், முதன் முதலில் நீங்கள் விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சியளித்து அவர்களை ஆயுதபாணிகளாக்கியது ஏன்? என்ற கேள்வியே எழுப்பப்பட்டது.

இந்தியாவை இலங்கை மக்கள் நம்பவில்லை என இலங்கை கையின் முன்னாள் சனாதிபதி திரு. யே. ஆர். யெயவர்த்தனா அவர்கள் கூறியுள்ளார் அழிவு வேலைகளில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள் இலங்கையில் அவசரகால நிலைமை பிறப்பிப்பதைத் தொடர்ந்து இயல்பாகவே தடைசெய்யப்பட்ட நிலைக்கு உள்ளாக்கப்பட்டதனால் இந்தியாவின் இத்தடை எதைச் சாதிப்பதற்காக என அவர் ஆச்சரிப்படுகின்றார். விடு

தலைப்புலிகளின் தீவிரவாதத்துக்குத் திருமதி இந்திரா காந்தி அவர்களே பொறுப்பாவார் என்பதைச் சுட்டிக்காட்ட அவர் தயங்கவில்லை. இவர்களுக்கு ஆயுதம் கொடுக்கவேண்டாமெனத் தான் மன்றாடியபோது அதற்கு எதிராகத் திருமதி காந்தி செயல்பட்டதை இவர் நினைவு கூருகின்றார்.

இதைப்பற்றிக் கருத்துத் தெரிவிப்பதில் அரச மேலாளர் கவனமாக இருக்கின்றார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் தங்களுக்கு ஏற்புடைய ஒரு தீர்வை தங்களால் ஏற்கமுடியும் என்பதை விடுதலைப்புலிகள் வெளிக்காட்டிவருவதால் அந்த இயக்கத்தைத் தடைசெய்ய அரசாங்கம் விரும்பவில்லை. பல தரப்பட்ட ஆலோசனைகளுள் எதை விடுதலைப் புலிகள் ஏற்கக் கூடும் என்று கண்டறிவதில் ஈடுபட்டுள்ள 50 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான திரு. மங்கள முனசிங்க அவர்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

தான் நினைத்தபடி தனது வழிக்கு விடுதலைப்புலிகளைக் கொண்டுவர முடியாததனால் சனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் தெரிவுக்குழுவிடமே தனது முழு நம்பிக்கையையும் வைத்துள்ளார். பல வாரங்களாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகளோ அல்லது விடுதலைப் புலிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராகச் செயல்படுவதற்குப் பெருந்தன்மையுடன் தான் ஆயுதம் வழங்கியதோ எவ்வித பயனையும் அவருக்குக் கொடுக்கவில்லை. அவுஸ்திரேலியாவையும்பொதுநலநாடுகளையும் இந்த விடயத்தில் ஈடுபடுத்தும் முயற்சியும் குழப்பநிலையில் உள்ளது.

விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மறுத்தபோதிலும் தாங்கள் ஒத்துக்கொண்ட தீர்வை மூன்று மாதங்களுக்குள் ஒரு தலைப்பட்சமாக அரசாங்கம் அமுல்செய்யும் எனத் திரு. பிரேமதாசா அவர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள தெரிவுக்குழுவின் தலைவர் கூறுகின்றார். தெரிவுக்குழுத் தலைவர் கொண்டுள்ள நம்பிக்கைக்குக்காரணம் எதுவாக இருந்தபோதிலும் நாட்டில் நடப்பவை கவலைக்குரியனவாக இருக்கின்றன. இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை அரசாங்கம் ஆதிக்கம் கொண்டிருக்கவில்லை. இந்தப் பகுதி ஈழம் என்ற ஒரு சுதந்திரமான அரசு போன்றிருக்கின்றது. விடுதலைப் புலிகள் வரிகளை அறவிட்டும், நிருவாகத்தை நடத்தியும் கடவுச்சீட்டுக்களை விநியோகித்தும் வருகின்றார்கள். விடுதலைப்

புலிகளின் ஆதரவின்றி எந்தவொரு திட்டத்தையும் இங்கு எப்படி அமுல்செய்ய முடியும் என்று நினைத்துப் பார்க்கவே முடியாதிருக்கின்றது.

மறுபுறத்தில் தெரிவுக்குழுவும் பிளவுபட்ட நிலையிலுள்ளது. கிழக்கு மாகாணம் தனியாக இருக்கவேண்டுமென்ற முஸ்லிம்களின் நிலைப்பாட்டுக்கும் இது வடக்கு மாகாணத்துடன் இணைந்திருக்கவேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கைக்கும் ஏற்புடையதான தீர்வை எப்படித் காணமுடியும் என்பதைத் தெரிவுக்குழு தீர்மானிக்க வேண்டியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் 60 விகிதம் சிங்களவரும் முஸ்லிம்களும், 40 வீதம் தமிழர்களும் வாழ்கின்றனர்.

திரு. ராஜீவ் காந்தியுடன் திரு. ஜெயவர்த்தனா செய்து கொண்ட உடன்படிக்கையின் ஒரு பகுதியே இத்தற்காலிக இணைப்பாகும். இது கருத்துக்கணிப்பின் மூலம் உறுதிசெய்யப் படவேண்டும். இதை விடுதலைப் புலிகள் எதிர்த்துவருகிறார்கள். நிலையான இணைப்பு ஏற்படுத்தப்பட்டாலும் கூட ஈழம் என்ற தங்கள் இலட்சியத்திலிருந்து விடுதலைப் புலிகள் பின் வாங்குவார்களா என உறுதியாக நம்பமுடியாது.

எப்படியிருப்பினும் வடக்குக்குச் சுயாட்சி கொடுப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டுவர முடியும் எனச் சில தலைவர்கள் நம்புகின்றனர். இந்திய அரசியல் யாப்பின் 370வது பிரிவின்படி யம்முவுக்கும் காச்மீரத்துக்கும் கொடுக்கப்பட்ட சிறப்பு தகுதியைப் போன்ற ஒன்றைக் கொடுத்து ஒரு தீர்வைக் கொண்டுவரலாம் எனத் தன்னை இனம் காட்டவிரும்பாத ஒரு சிங்களத் தலைவர் கூறியுள்ளார். இலங்கை பிளவுபடாது ஒன்று பட்டு இருக்வேண்டுமாயின் மாகாணத்தை இணைப்பது பெரும் விலையைக் கொடுப்பதாகாது.

வரையறுக்கப்பட்ட முறையான தீர்வொன்றை முன் வைத்தால் விடுதலைப் புலிகள் அதை தங்கள் ஆலோசனைக்கு எடுப்பார்கள் எனத் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களின் தலைவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், சுற்றுலா அமைச்சருமான திரு. சௌ. தொண்டமான் அவர்கள் நம்புகிறார். மாகாணங்கள் சுயாட்சி கொண்டதாகவும் செயலுரிமைப்பரவலாக்கல் செய்யப்பட்டவையாகவும்இருத்தல் வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்வரும் மாகாணங்களுக்குக் கூடிய செயலுரிமை கொடுப்பது

என்பது வெறும் ஏட்டளவிலே இருந்ததென்பதைப் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். இச்சிக்கலுக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாணமுடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். இராணுவத்தால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியும். ஆனால் இதற்காக நூற்றுக்கணக்கான மக்களைக் கொல்ல வேண்டும். அத்துடன் நாங்கள் மீண்டும் முன்பிருந்த நிலைக்கே திரும்பிவருவோம் என வெளிநாட்டுச் செயலாளர் திரு. பேர்னாட்திலகரத்தினா கூறுகின்றார். மக்கள் தங்கள் பக்கம் இல்லாததினால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் எங்களால் என்ன செய்யமுடியும் எனச் சில இராணுவ நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

இலங்கையின் இராணுவ நடவடிக்கையை ஒரு இனப்படுகொலை என இந்தியா எப்போது கூறத்தொடங்கும் எனப் புதுடில்லியின் நிலைப்பாட்டில் கொழும்பு ஐயப்பாடு கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தளமாக விளங்கிய யாழ்பாணக் கோட்டையைத் தனது படையினர் சுற்றிவளைக்கத் தொடங்கியவுடன் இதையிட்டு புதுடில்லி வாளாது இருக்காது என எச்சரிப்பதற்காக இந்தியத்தூதுவர் திரு.டிக்சிற் தன்னைச் சந்தித்ததாக திரு.யெயவர்த்தனா கூறியுள்ளார். இந்திய அமைதிகாக்கும் படையை இலங்கைக்கு அனுப்பவேண்டுமெனத் திரு.ராஜீவ்காந்தி அவர்கள் மேற் கொண்ட முடிவு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது என அவர் நினைவு கூருகின்றார். மேலும் இரண்டு மாதங்களுக்குஅவர்கள் இங்கிருப்பதற்கு எங்கள் அரசாங்கம் விட்டிருந்தால்விடுதலைப் புலிகளின் சிக்கல் முடிவுற்றிருக்கும் என அவர் மேலும் கூறுகின்றார்.

இராணுவ நடவடிக்கை எனவும், அரசியல் தீர்வுமட்டுமே விடுதலைப் புலிகளுடனான சிக்கலை தீர்க்க உதவும் எனவும் இலங்கைத் தலைவர்கள் கருதுகிறார்கள். இந்தியாவிலுள்ள சிலர் இதற்கு உதவலாம் என அரசியல்வாதிகள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்திரு.மு.கருணாநிதி அவர்கள்இதற்கு உதவக்கூடும் என நான் கூறினேன். சென்னையில் இதைப்பற்றி அவருடைய கருத்தைக் கேட்டபோது, தான் இதில் கடும் படிப்பினையைப் பெற்றுள்ளதாகவும், சென்றகாலங்களில் தனதுபணி பற்றித் தவறாகக் கருதப்பட்டதாகவும் அவர் கூறினார். அவர் இவ்விடயத்தில் சம்மந்தப்பட விரும்பவில்லை. ''தடை விதிக்கப்பட்டபின் விடுதலைப் புலிகளுடன் பேசுவது சட்டவிரோதமான செயலாகும். ராஜீவ்காந்தியின் கொலையில் என்னையும்

சம்மந்தப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்தது'' என திரு.கருணாநிதி கூறினார்.

புதுடில்லி விடுதலைப் புலிகளுக்கு உதவவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தமையால் இந்தியாவிலுள்ள அனைத்துக்கட்சிகளும் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக இருந்துவந்தன. பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசம் விடுதலைபெற புதுடில்லி உதவமுடியுமென்றால் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகளுக்கும் தாங்கள் ஏன் உதவக்கூடாது என்ற பொதுவான கருத்து தமிழ் நாட்டில் நிலவியதால் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த தமிழ்நாட்டு அரசாங்கங்கள் இதில் மிக்க அக்கறைகொண்டு பெருமளவு உதவியை விடுதலைப்புலிகளுக்குச் செய்து வந்தன.

இவையாவும் உண்மையெனிலும் அந்த அனுதாபம் இப்பொழுது குறைந்துவிட்டது. ஆனால் தற்போது முன்பு நடந்தவைகளை நினைவூட்டி ஒரு குறிக்கப்பட்ட தீவிரவாதக் குழுவுக்கு உதவினார் என எவரையும் குற்றம்சாட்டுவது ஒரு ஏமாற்றுவேலையல்லாது வேறொன்றுமல்ல. ராஜீவ்காந்தி கொலை செய்யப்படுவதற்கு ஆறு மாதத்துக்கு முன்னர் தமிழ்நாட்டு முதலமைச்சரான ஜெயலலிதா ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் ''இலங்கை அரசாங்கத்துடனான போராட்டத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால், அந்தத் தீவகத்திலுள்ள அனைத்துத் தமிழர்களும் அழிக்கப்படுவார்கள்'' எனக் கூறியிருந்தார்.

குற்றம் உண்மையாகப் புதுடில்லியைச் சார்ந்ததாகும். திருமதி காந்தி அவர்களின் டணிப்புக்கு ஏற்ப எங்கள் நாட்டின் புலனாய்வுத்துறையான 'றோ' விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சியளித்தது, நிதியுதவி புரிந்தது. அவர்களை ஆயுதபாணிகளாக்கியது. இலங்கையின் முன்னாள் தலைவரான திரு.ஜெயவர்த்தனா அவர்கள் மீது கொண்டிருந்த வெறுப்புணர்ச்சி காரணமாகவே திருமதி இந்திரா காந்தி இப்படியானதொரு நடவடிக்கையை மேற்கொண்டதாக திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் நம்புகிறார்.

இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடுமென்றாலும் தனது எதிரிகளை ஒழிப்பதற்காக அ.இ.அ.தி.மு.க ஆதரவாளர்களுக்குப்பயிற்சியளிக்கும்விடுதலைப்புலிகளின்தலைவரானதிரு வே. பிரபாகரன் அவர்களின் நடவடிக்கைகளுக்குச் சார்பாக இருந்த

தமிழ்நாட்டு முன்னாள்முதலமைச்சரான திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களின் நல்லுறவைப் பேணுவதற்காகவே இம்மாதிரியான செயல்களில் திருமதி காந்தி இறங்கியிருப்பார் எனத்தான் ஐயுறுவதாகத் திரு.ஜெயவர்த்தனா கூறுகின்றார். திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய எதேச்சாதிகாரமான ஆட்சி முறையே விடுதலைப் புலிகளை ஆயுதபாணிகளாக்கக் காரணமாக இருந்தது எனப் புதுடில்லியிலுள்ள பலர் கருதுகின்றார்கள்.

என்ன காரணங்கள் இருந்தபோதிலும், இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளும் சிக்கலை அகற்ற முடியாத நிலையை எதிர்நோக்குகின்றன. ஏதோ ஒரு தீர்வு ஏற்படும் வரையில் தொடர்ந்து இருக்கக் கொழும்பு தீர்மானித்துள்ளது போல் தோன்றுகின்றது விடுதலைப்புலிகளுக்கெதிராகதொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ, அவர்களைத் தண்டிப்பதற்கோ அல்லது அவர்களைத் துரத்தியடிக்கவோ அரசு ஈடுபடாது என்றும் அதேவேளை விடுதலைப் புலிகளும் நாட்டைச் சீர்குலைப்பதில்லை என்றும் அவர்களிடையே ஒரு இணக்கம் இருப்பதுபோல் தெரிகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் கொழும்பு சென்றபொழுது அந்நேரம் ஒரு படையினரின் நகரம் போல் காட்சியளித்தது. ஆனால் இம்முறை நான் அங்கு சென்றபோது ஒரு காவல்துறையினரையாகுதல் காணவில்லை. நகரம் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பிவழிந்தது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் திரு.பிரபாகரன் அவர்களைத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டும் எனக் கோரிக்கொண்டு விடுதலைப் புலிகளுக்கும், இலங்கைக்கும் அது நெருக்குதலைக் கொடுக்கும். யாழ்பாண நகர முதல்வர் கொலைக்குப் பின்னர் இலங்கையின் நீதிமுறையிலிருந்து தன்னைப்பாதுகாத்துக் கொள்வதற்காக அவர் 1976ஆம் ஆண்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அந்தக்காலகட்டத்தில் இவரைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி இலங்கை கேட்டிருந்தும் இந்தியா அதைச் செய்யவில்லை. தற்பொழுது அவரைக் கைதுசெய்யும்படி இந்தியா கோருகின்றது. ஆனால் இதில் ஒரு வேறுபாடு உள்ளது. புதுடில்லி அவரை இலங்கையிடம் ஒப்படைக்கக்கூடிய நிலையில் இருந்தும் ஒப்படைக்கவில்லை. ஆனால் கொழும்போ அவர் எங்கிருக்கின்றார் என்று அறியக்கூடிய நிலையில் கூட இல்லை. 'கடத்தல்கார வீரப்பனை உங்களால் பிடிக்கமுடியவில்லை, திரு.பிரபாகரன் அவர்களை எங்களால் எப்படிப் பிடிக்க முடியும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்? எனத் திரு.தொண்டமான் அவர்கள் வினவுகின்றார்.

ஆனால் தங்கள் அரசாங்கத்துக்கு இது ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாதது போலவும் தாங்கள் பதில் கூறுவதற்கு ஒரு கேள்வியும் எழவில்லை என்பது போலவும் புதுடில்லி அரசாங்கம் நடந்துகொள்கின்றது. ஆட்சிபுரியும் கட்சியிலுள்ள எவராலும் திருமதி இந்திரா காந்திமீது குற்றம் சுமத்த முடியாது. தான் பதில் கூறவேண்டியதில்லையென புலனாய்வுத்துறை 'றோ' கருதுகின்றது. அதிகார வர்க்கத்தைப் பொறுத்தவரையில் குற்றம் புரிந்தவர்கள் இன்னும் ஆட்சியிலேயே இருக்கின்றனர். ஏதோ ஒரு நாள் இந்த விடயம் வெளிவரத்தான் போகின்றது. அந்த நாள் வரும் போது இந்தியர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியவேண்டிவரும்.

## கோளாறான பாடத் திட்டம்

'அப்பா ! பாடத் திட்டமே சரியில்லேப்பா'
'ஏன்டா ?'
'இப்பவும் நான் பெயிலாயிட்டேம்பா'

22450

# செக்கோசிலவாக்கியா-மியூனிச் நகரத்தின் ஆவிகள் ஒன்றுகூடுகின்றன

- மெர்வின் த சில்வா -

(சண்டே ரைம்சு - 14.6.92)

இப்பொழுது செக்கோசிலவாக்கியாவின் முறையாகும். இம் மாத இறுதிக்குள், சிலவேளைகளில் இந்த வாரமே செக்கோசில வாக்கிய ஒரு தனிநாடாக இருக்கப்போகின்றதா அல்லது சில வாக்கியா, செக்கோசிலவாக்கியாவிலிருந்து பிரிந்து சென்று 'ஒரு தனிச் சுதந்திரநாடாகப் போகின்றதா என்பது எங்களுக்குத் தெரியவரும். ஆனால் இந்தப் பிரிவினையில் பெரும் வித்தியாச மிருக்கின்றது. கோபத்தினாற் கூட ஒரு துப்பாக்கி வேட்டுக்கூடத் தீர்க்கப்படவில்லை என்பதே அந்த வித்தியாசமாகும். பொசுனியா (Bosnia), கெர்சோகோவின்னா (Herzogouina) வில் நடந்த அமளிதுமளிகள், வன்செயல்கள், கோபதாபங்கள் போன்று எதுவு மில்லாமல் சிலவாக்கிய நாடு சுதந்திரம் பெறப்போகின்றது.

சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களில் அங்கி கரிக்கப்பட்ட கட்சிகள் பங்குபற்றி முக்கிய விடயங்களைத் தீர்மானித்துள்ளன. செக்கோசிலவாக்கியாவுக்குள் இருப்பவர் களோ அல்லது அந்நாட்டுக்கு வெளியே இருப்பவர்களோ இவற்றில் முறைகேடுகள் நடந்ததெனக் கூக்குரலிடவில்லை. மேற்குலக நாட்டுப் பத்திரிகைகள் உண்மை நிலையை நன்கு உணர்ந்துள்ளன. வெளிநாட்டிலிருந்து வருகைதந்த முக்கியமான வர்கள், குறிப்பாகப் பிரித்தானியப் பிரதமர் திரு. ஜோன்மேயர் போன்றோரர், அங்கும் இங்குமாக ஓரிரு அசம்பாவித சம்பவங் கள் நடைபெற்றாலும், செக் இனத்தலைவர்களினதும், சிலவாக் கிய இனத் தலைவர்களினதும் பொறுமை மெச்சத்தக்கதாக

இருந்ததைக் கண்டு மன நிறைவுடன் தங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். சிலவாக்கிய தேசியக் கட்சி (Slovak National Party) யின் தலைவரான திரு. ஜோசேப் புறோக்சு (Josef Prokes) அவர்கள் இப்படியான தலைவர்களில் ஒருவர் ஆவர்.

வரலாற்றுவாயிலாக ஏற்பட்ட இன்னல்கள் யூகோசிலாவியைப்போன்று செக்கோசிலவாக்கியாவில் நடந்திருப்பினும் பால்கன் நாடுகளில் கடைசியாகக் குலைந்துபோன யூகோசிலாவியாவைப் போன்று செக்கோசிலவாக்கியா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இருக்கவில்லை.

மியூனிச் நகரத்தை நினைவு கூருங்கள். கிட்லரின் ஆணவப் போக்கு பிரிட்டனுக்குப் பேரழிவுகளைக் கொண்டுவரும் என்பதை அறிந்துகொண்ட பிரித்தானியப் பிரதம மந்திரி சம்பர்லின் பிரபு அவர்கள் கிட்லரிடம் பணிந்து சென்று சரணாகதி உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டதின் அடையாளச் சின்னமாக அது உள்ளது. இந்த ஒப்பந்தப்படி செர்மன் மொழிபேசும் சுடெற்றன்லாந்தை (Sudetenland) செர்மனிக்குக் கொடுக்கப்பட்டது. செக்கோசிலவாக்கியாவிலிருந்து பிரிந்து செல்லும் மனப்பான்மையைச் சுடெற்றன்லாந்திலுள்ள செர்மன் மொழி பேசும் மக்களிடையே வளர்க்க அங்குள்ள அதிதீவிரவாதிகளுக்குக் கிட்லர் ஊக்கமளித்தார்.

இந்த மதிப்பிழந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சில நாட்களில் செர்மனி சுடெற்றன்லாந்தைக் கைப்பற்றியது. ஆனால் இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுமெனக் கிட்லர் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. தேசியவாத அதிகாரம் குறிப்பாக மொழிவழித் தேசியவாதம் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுவதில்லை என்பதை அது நினைவுறுத்துகின்றது. சுடெற்றன்லாந்துக்குள் செர்மனியப் படைகள் புகுந்தன. ஆனால் அந்நாட்டில் சமாதானம் ஏற்படவில்லை. செர்மனியப் படையெடுப்பினால் செக்கோசிலவாக்கியா என்ற நாடு இல்லாமற் போனது. சிலவாக்கியா தன்னை தனிநாடாக ஆக்கிக்கொண்டது.

## நாட்டின் மீட்பு

செக்கோசிலவாக்கியாவை நாசிகளின் பிடியிலிருந்து 1944ம் ஆண்டில் செம்படைவிடுவித்தது அடுத்த பாரிய மாற்றமாகும். பொதுவுடமைவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவது தவிர்க்க முடியாததாயிருந்தது. இந்த நாட்டின் மதிப்புக்குரிய தேச தந்தையாகிய திரு. எட்வேட் பெனெஸ் 1948ம் ஆண்டு பொது

வுடமைவாதிகளினால் வரையப்பட்ட அரசியல் யாப்பை அங்கீக ரிக்க மறுத்தார். (மற்ற தேசத் தந்தை புகழ்மிக்க மசாரிக்காகும்)

திரு. ஸ்டாலினுடைய சோவியத் பேரரசுடன் இணைக்கப் பட்ட சிறிய செக்கோசிலவாக்கிய நாட்டுக்குக் கடும் கோட்பாள ரான திரு. கொட்வால்ட் தலைவரானார். 1968ம் ஆண்டுவரை நடைபெற்ற ஏனைய நிகழ்ச்சிகள் வரலாற்றில் இடம்பெற்றுள் ளன. 1968ம் ஆண்டு இளவேனிற் காலத்தில் சிலவாக்கியரான அலெக்சாண்டர் டியூபெக் (Alexander Dubeck) திரு. நொவொட் னியை (Novotny) வெளியேற்றி ஆட்சியைக் கைப்பற்றினார். சனநாயக ரீதியான வழிமுறைகளை உள்ளடக்கிய தாராள மனப் பான்மைக் கொள்கையைக் கடைப்பிடிக்கப்போவதாக அவர் அறி வித்தார்.

இதே ஆண்டு இந்த ஆசிரியர் செக்கோசிலவாக்கியாவுக்குச் சென்றார். அத்தோடு சிலவாக்கியாவுக்கும் சென்றுள்ளார். 14 தினங்கள் சோவியத்தில் கழித்த பின் செக்கோசிலவாக்கியாவுக்கு வந்த இவர் அங்கு சோவியத் ஒன்றியத்திலும் பார்க்கப் பொருளா தாரம் முன்னேற்றமடைந்திருந்ததைக் கண்டார்.

செக்கோசிலவாக்கியாவில் போருக்கு முந்திய காலத் தொழிற் சாலைகள் கூட்டமைப்பு இருந்தது. அத்தோடு அந்நாட்டுப் பொரு ளாதாரம் ஏற்றுமதியை மையமாகக் கொண்டிருந்தது இரண்டா வதாக பிறாக் (prague) கிலும் சிலவாக்கியாவின் தலைநகரான பிராற்றிசிலாவா (Bratislava) விலும் ஒருவர் சுதந்திரமாக வாழ் வதற்கும், சுதந்திரமாகத் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவற் கும், இடமளிக்கப்பட்டிருந்ததை நான் பேசும்பொழுது காண முடிந்தது. ஆனால் பிறாக் இல் இந்த சுதந்திரம் வெகுகாலம் நீடிக்கவில்லை.

சித்தாந்தம், தேசிய தனித்தன்மை, அரசியல், மொஸ்கோவு டனான தொடர்புகள், மேற்குலக நாடுகளுடனான உறவு அத் தோடு சனநாயகம் போன்ற பல சிக்கல்கள் இப்போது எழுந் துள்ளது. செக் இனத்தவர்களுக்கும் சிலவாக்கிய இனத்தவர்களுக் கும் இடையே வளர்ந்து வரும் நல்லுறவிலேயே வெளிநாட்டு உறவு தங்கியுள்ளது என்பதை அறிந்து வெளிநாட்டு உறவுக்கே உள்நாட்டு விவகாரங்களிலும் பார்க்க கூடிய அக்கறை காட்டப் படுகின்றது. பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயர் இங்கே வருகைதந்ததை முதலாவதாக எடுத்துப்பார்ப்போம். யூகோசில வியாவைப் பற்றிச் சென்ற வாரம் கூறியுள்ளதுபோல் செக்கோ

சிலவாக்கியாவினதும், அந்நாட்டின் உள்நாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் ஐரோப்பிய சமூகத்தினதும் ஐரோப்பியாவினதும் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற எண்ணம் இருந்து வருகின்றது இந்த விடயத்தில் ஐரோப்பிய சமூகத்திலுள்ள பெரியநாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

அமெரிக்காவுடன் சிறப்பான உறவுகளைக் கொண்டிருக்கும் பிரித்தானியாவும், பொருளாதாரத்தில் மேம்பட்டுள்ள செர்மனியும், பிரான்சும் இங்கு இருக்கின்றன. ஐரோப்பாவின் பாதுகாப்புப் பற்றிய கருத்துக்கள், எதிர்கால ஐரோப்பாவின் அமைப்பு, அது அனைத்துலகத்தில் வகிக்கவேண்டிய பங்கு, ஆகியவற்றில் அவற்றிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றது. இவ்வேறுபாடுகள் அவர்களது போட்டி நலன்களையும் அவைகளுக்கிடையேயுள்ள பகைமையுணர்ச்சியையும் வெளிக்காட்டுகின்றது.

முதலாவதாகத் தோல்விகள், உள்நாட்டுக் குழப்பங்கள். வேற்றுமைகள், மாற்றங்கள் ஆகியவற்றைப் பார்ப்போம். சிலவாக்கிய நாட்டின் தலைநகரான பிராற்றிசிலாவாவிலிருந்து நியூயோர்க் ரைம்சு பத்திரிகை நிருபர் திரு. வில்லியம் சிமிட் அவர்கள் யூன் மாதம் 4ம் திகதி அனுப்பிய செய்தியைப் பார்ப்போம்.

இந்த இளவேனிற் காலத்தில் செக்கோசிலவாக்கியாவில் நடைபெற்ற தேர்தல் கோட்பரப்புகையை உற்றுநோக்கும்பொழுது இங்கு இரு நாடுகள் இருப்பது தெரியவருகின்றது. நாட்டின் மேற்குப்பக்கத்தில் அரைவாசி செக் நாடு இருக்கின்றது. இங்கே குறைந்தளவு வேலையில்லாத் திண்டாட்டம், கைத்தொழில் திறமை, அத்தோடு மேற்குநாடுகளின் முதலீடுகள் என்பன காணப்படுகின்றன. கிழக்கேயுள்ள கிராமப் புறப்பிரதேசத்தில் மூடிய சுரங்கங்களும், தொழிற்சாலைகளும் அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், பொருளாதார வீழ்ச்சியும் காணப்படுகின்றது.

புதிய மாகாண மற்றும் சமஷ்டிப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வாக்காளர்கள் வாக்களிக்கும் தருணம் தற்போது வந்துள்ளமையால் சில சிலவாக் தேசியவாதிகள் சிலவாக்கிலுள்ள வாக்காளர்களை, நாம் செக்கோசிலவாக்கியாவிலிருந்து பிரிந்து செல்ல இப்போது நேரம் வரவில்லையா? என அறைகூவல் விடும்படி கோருகின்றார்கள்.

தேசியவாதம் மாத்திரம் தான் இக்கேள்வியை எழுப்பவில்லை. இது அவர்களுக்குள்ளே ஆழமாகப் பதிந்துள்ள மனக்குறையும், தாங்கள் பாகுபடுத்தப்படுகின்றோம் என்ற எண்ணமும் ஆகும். இது சரியோ தவறோ தெரியவில்லை. தேசிய வாதம் அல்லது இன அடிப்படைவாதத் தத்துவம் தான் அவர்களை ஒன்றுபடுத்து கின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை உற்று நோக்குவோம்.

அ) ஒவ்வொருவரும் அல்லது பெரும்பான்மையானோர் சந்தைப் பொருளாதாரத்தில் ஒருமித்து நிற்கின்றனர். சமூகநலன், மத்தியதிட்டமிடல், அரச நிறுவனங்களில் முகாமையாளர் களாக அரசால் நியமிக்கப்படுபவர்கள் ஆகியவை பழைய நடைமுறைகளாக கருதப்படுகின்றது. தாராள மனப்பான் மையினால் இவைகளில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல் கள், வாழ்க்கைத் தரத்தில் உடனடியாக ஏற்பட்டுள்ள தாக்கம், விலைவாசி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஏற் பட்டுள்ள தாக்கம் ஆகியவைகளினால் மக்களுக்குப் புதிய இன்னல்கள் தோன்றியுள்ளன. இச்சுமைகளைச் சமமாகப் பகிர்ந்தளிக்க முடியாமலுள்ளது. இவற்றால் நன்மை அடைந் தவர்களினதும் இன்னல்படுபவர்களினதும் சுமைகளைச் சீர் தூக்கிப் பார்க்கும்பொழுது இனரீதியான, புவியியல் அமைப் பிலான வேற்றுமைகள் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இது பிறாக்கிலுள்ள கொள்கை வகுப்பாளர்களின் தவறுகள் அல்ல. இவை நேரடியாகப் புவியியல், வரலாறு ஆகியவற்றால் எழுந்த வேறுபாடுகளாகும்.

இவற்றுக்குரிய பதில் ஒன்றாகவே இருக்கின்றது. தலைநக ரத்திலுள்ளவர்களின் கொள்கை வகுப்பினால் இக்குறை ஏற்பட்ட தெனச் சிலவாக்கியர்கள் நினைக்கின்றனர். செக் பிரதேசங்க ளான பொகிமியா (Bohemia) விலும், மொறாவியா (Moravia) விலும் இருக்கும் மக்கள் சிலவாக்கியாவில் உள்ளவர்களிலும் பார்க்க நல்ல வாழ்க்கைத் தரத்தில் உள்ளனர். அங்கு வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகம் இல்லை. பாவனைப் பொருட் களுக்குக் குறைவில்லை. விலைவாசிகளும் குறைவாகவுள்ளதுடன் வசதிகளும் அதிகமாக உள்ளது.

இவைகளுக்குக் காரணம் திட்டமிடலில் காட்டப்பட்ட வேறு பாடுகள் அல்ல. இவற்றுக்கான காரணங்கள் பின்வருமாறு:-

1) இராணுவத் தளபாடத் தொழிற்சாலைகள் சிலவற்றை மொசுகோ சிலவாக்கியாவில் அமைத்தது. இந்த இராணுவத்

தளபாடங்களை சோவியத் ஒன்றியமும், வார்சோ ஒப்பந்தஉறுப்பு நாடுகளும் வாங்கின. இந்த நாடுகள் தற்போது இராணுவத் தளபாடங்களை வாங்காமையால் சிலவாக்கியாவிலுள்ள தொழிற் சாலைகள் அநேகமாக மூடப்பட்டுள்ளன.

2) மேற்குலக நாடுகளின் முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடு களில் 90%சத வீதத்தை ஏறக்குறைய 800 மில்லியன் டாலர் களை பொகிமியாவிலும் மொறாவியாவிலும் முதலீடு செய்துள் ளனர்.

### தாக்கம்

சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார வீழ்ச்சி அந்நாட்டின் நட்புறவு நாடுகளான கிழக்கைரோப்பிய கட்டமைப்பில்(Comecon) இருக்கும் நாடுகளின் பொருளாதாரத்தை நேரடியாகவும் உடனடி யாகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. சோவியத் ஒன்றியத்தினால் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்துக்கு (E.E.C) எதிராகத் தொடக்கப்பட்டது தான் இந்தக் கிழக்கைரோப்பியப் பொரு ளாதாரக் கூட்டணி. இது ஒரு பலவீனமான பொருளாதாரக் கூட்டணியாகும். கார்வார்ட் பல்கலைக் கழக ருசிய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. மார்க்கிறாமர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில், 1940ம் ஆண்டு தொடக்கம் 1989ம் ஆண்டு வரை சோவியத் ஒன்றியம் தான் ஏனைய நாடுகளிலும் பார்க்கக் கூடுதலான வர்த்தகத் துறைப் பங்காளியாக இருந்து வந்துள்ளது. ஆற்றலுக்கும், மூலப்பொருட்களுக்கும் கிழக்கை ரோப்பிய நாடுகள் கூடுதலாகச் சோவியத் ஒன்றியத்திலேயே தங்கி யிருந்தன. அத்துடன் கிழக்கைரோப்பிய நாடுகளிலுள்ள நிறுவ னங்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனைக்கும் சோவியத் ஒன்றியத்திலேயே தங்கியிருந்தன.

ஒரு முழுமையான தன்னாதிக்க நாடான சோவியத் ஒன்றி யம் கிழக்கைரோப்பிய நாடுகளிலிருந்து சிறிதளவு இறக்குமதி யையே செய்து வந்தது. அத்தோடு தனது ஏற்றுமதிப் பொருட் களான சக்தி, மற்றும் மூலப்பொருட்களை மேற்கு நாடுகளுக்கு சுலபமாக ஏற்றுமதி செய்து வந்தது. 1989 ம் ஆண்டு நடை பெற்ற குழப்பங்களின் பயனாக சோவியத் ஒன்றியத்தினதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் வர்த்தகம் சீர்குலையத் தொடங்கியது. 1991ம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் நாணயப் பரிவர்த்தனையிலிருந்து வந்த மாற்றத்தக்க ரூபிளுக்குப் பதிலாக அமெரிக்க டாலரைச் சோவியத் ஒன்றியமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் எல்லாக் கொடுப்பனவுகளுக்கும் பாவிக்கத் தொடங்கின.

சுருங்கக் கூறுவதாயின் ஒவ்வொரு கிழக்கைரோப்பிய நட்பு நாடும் (முன்னைய நட்புநாடுகள்) சுதந்திர நாடுகளாக மாறின. ஒவ்வொரு நாடும் தன்னைப் பற்றியே அக்கறை செலுத்தி வந்தது. இந்த நடைமுறையே கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் உள்ள ஒவ்வொரு பிரிவும் மேலும் தமக்கென ஒரு நாடு தேவை எனக்கருத இடமளித்ததுபோல் எனக்குத் தோன்றியது. இதற்கு உதாரணம் தான் செக் நாடும் சிலவாக்கிய நாடுமாகும். இது தான் செக்கோசிலவாக்கியா இப்போது எதிர்நோக்கும் பிரச்சினையாகும். யூகோசிலாவியாவில் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகள், ஐரோப்பிய சமுதாயத்துக்கு ஒரு பயங்கரக் கனவு போல் காட்சி அளிப்பதன் காரணமாகச் செக்கோசிலவாக்கியாவின் அயல்நாடுகளும், ஐரோப்பிய சமூக நாடுகளும் குறிப்பாக செர்மனி, பிரான்சு, பிரித்தானியா ஆகிய பெரிய நாடுகளும் அங்கு நடைபெறும் உள்நாட்டு விடயங்களில் அதிகம் அக்கறை காட்டுகின்றன.

முதலாவதாக செர்மனியும் அதன் பின்னர் ஐரோப்பிய சமூகமும் ஒன்றுசேர்ந்து சிலோவேனியாவையும், குறோசியாவையும் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமை பெறுவதற்கு உதவின. புதிய உலக ஒழுங்கை உருவாக்குபவர்கள் பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்புக்கு முதலிடம் கொடுக்கவிருக்கும் வேளையில், சென்றவாரம் நான் கூறியிருந்ததுபோல் யூகோசிலாவியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரினால் ஏதிலிகள் அயல்நாடுகளில் தஞ்சமடையவருவது ஐரோப்பிய சமூகத்துக்கு ஒரு பாதுகாப்புச் சிக்கலாகத் தோன்றியுள்ளது.

### அடையாளம்

புதிய ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் மாற்றங்களினால் செக்கோசிலவாக்கியாவிலுள்ள இரு நாடுகளான செக்-சிலவாக்கிய நாடுகள் தங்களுடைய தேசிய அடையாளத்தைப் பேணுவதோடல்லாமல் இரு நாடுகளும் ஒன்றுகூடித் தங்கள் நாட்டு நலன்களுக்கு உகந்ததைச் செய்ய எத்தனித்து வருகின்றன. மீண்டும் எழுச்சிபெறும் தேசியவாதம் பிரிவினைவாதம், பங்கு கொள்ளும் சனநாயகம், புதிய பாசிசம் ஆகிய கொள்கைகள் தங்களுக்குள் முட்டிமோதிக்கொள்கின்றன.

பிரிவினை வாதத்தை முன்னெடுத்துச் செல்லும் திரு.யோசேப் புறொக்சுவின் சிலவாக்கிய தேசியக்கட்சி அரசியலில் முன்னுக்கு வந்தது தான் இங்கே வியப்பான செய்தியாகும். ஒரு சுதந்திர

மான சிலவாக்கிய குடியரசுதான் நிரந்தரமாக எங்கள் நாட்டை முன்னேற்ற உதவும் எனக் கூறும் திரு. யோசேப் புறோக்சுவின் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்தே திரு. விளாடிமீர் மேசியர் பிராற்றிசிலாவாவிலுள்ள சிலவாக்கிய பாராளுமன்றத்தில் தனது அரசை அமைக்க முடியும்.

திரு. மேசியர் அவர்களின் சிலவாக்கிய சனநாயக இயக்கம் ( Slovak National Party ) சென்றவாரம் நடைபெற்ற தேர்தலில் சிலவாக்கியப் பாராளுமன்றத்துக்கு வேண்டிய பெரும்பான்மைப் பலத்தைப் பெறத்தவறியுள்ளது. ஆனால் தேசியரீதியில் இவ்வியக்கம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள கட்சியாக விளங்குகின்றது. திரு. புறோக்சு அவர்களின் கட்சி சிலவாக்கியாவுக்குத் தனிநாடு கோருவதுபோல் அல்லாது திரு. மேசியர் அவர்களின் கட்சி பரந்தளவு தன்னாட்சியுரிமை கோருகின்றது.

மேற்கத்தைய செக் குடியரசில் அதிக பாராளுமன்ற ஆசனங்களைப்பெற்ற மக்கள் சனநாயகக் கட்சியின் தலைவரான திரு. வக்கிளாவ் குளோசு அவர்களை, செக்கோசிலவாக்கிய சனாதிபதி திரு. வக்கிளாவ் கவெல் அவர்கள், பிரதம மந்திரியாக நியமித்துள்ளார். சிலவாக்கிய தேசியசபையில் திருமேசியர் அறுதிப் பெரும்பான்மை பெறத்தவறியது, அவர் பிரதம மந்திரியுடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் எதிர்பார்த்த பயனைப் பெறமுடியாமலிருக்கச் செய்யும்;

ஒரு நிலையான அரசாங்கத்தை அமைப்பதற்குத் திரு வக்கிளாவ் குளோசு அவர்களுக்கு திரு. மேசியரினதும் அவரது சிலவாக்கிய சனநாயக இயக்கத்தினதும் ஆதரவு தேவையாயுள்ளது. ஆனால் திரு. மேசியர் அவர்களுக்குப் பிரிவினைத் தலைவரான திரு. குறோக்க அவர்களினதும் சிலாவாக்கிய தேசியக் கட்சியினதும் ஆதரவு தேவையாயுள்ளது. மத்தியில் இரண்டு அடுக்குப் பாராளுமன்ற முறைப்படி அரசு அமைப்பது சனாதிபதி வக்கிளாவ் கவெல் அவர்களைப் பொறியில் மாட்டியுள்ளது எனச் சனாதிபதியின் பேச்சாளரான திரு. மைக்கேல் சந்தோவ்சுகி திங்கட்கிழமையன்று கூறினார்.

சனாதிபதியாக வருவதற்குத் தனது பெயரைப் பதிவு செய்யும் பொழுது சில தார்மீக விடயங்களைச் செயல்படுத்தவேண்டுமெனத் திரு. கவெல் அவர்கள் நினைத்தார். தான் சனாதிபதியாகத் தொடர்ந்து இருந்து பயனளிக்கும் வகையில் செயல்படுவதானால் ஒரு பொதுவான நாடு தொடர்ந்திருக்கவேண்டும்;

அத்துடன் 1989ம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் கடைப் பிடிக்கப்பட்ட நடைமுறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

நீண்ட காலமாக நடைபெற்று வந்த வேலை நிறுத்தங்களும், ஆளும் பொதுவுடமை வாதிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் முடிவில் போருக்குப் பின்னிருந்து வந்த பொதுவுடமைவாதிகளின் செயலுரிமையை இழக்கச் செய்தது. சுதந்திர செக்கோசிலவாக்கியாவின் புதிய அரசியல் கட்சிகள் அந்நாட்டின் தலைவிதியை யாப்பிற்கேற்ப தீர்மானிக்கும்வரை நாடக எழுத்தாளரும், மனித உரிமைகளைப் பேணுவதில் தீவிர பங்கெடுப்பவருமான திரு. கவெல் அவர்கள் சனாதிபதியாக 1989ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ம் திகதி நியமிக்கப்பட்டார்.

மதிப்புள்ள சிலவாக்கியத் தலைவரான திரு. மேசியர் அவர்கள் சர்வாதிகாரப் போக்குடையவரென்றும், நேரத்துக்கு நேரம் மன மாற்றம் அடைபவரென்றும் சனாதிபதியின் பேச்சாளரான திரு. சந்தோவ்சுகி அவர்கள் கூறுகின்றார். அத்துடன் நாட்டின் தலைவிதியிலும் பார்க்க செயலுரிமை முக்கியமானது எனக் கூறுபவர்களைப் பின்பற்ற வேண்டாமெனவும் அவர் இருநாட்டு மக்களுக்கும் கூறியிருக்கின்றார். ஆனால் சென்ற வாரத் தேர்தல்களில் திரு. மேசியர் அவர்களின் சிலவாக்கிய சனநாயக இயக்கத்துக்குக் கிடைத்த வாக்குகள் செக்கோசிலவாக்கியச் சிக்கலானது ஆபத்தான கட்டத்தை எட்டிவிட்டதை எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

## தடைகள்

சென்ற மாத இறுதியில் பிரதம மந்திரி திரு. ஜோன் மேயர் அவர்கள் போலாந்து, கங்கேரி, செக்கோசிலவாக்கியா ஆகிய நாடுகளுக்குப் பயணஞ் செய்தார். ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் தலைமைப் பதவி பிரித்தானியாவுக்குக் கிடைக்கவுள்ளது. பிரித்தானியா இந்த முன்னைய கிழக்கைரோப்பிய நாடுகளை ஐரோப்பிய பொருளாதார அமைப்பில் உறுப்புரிமை பெறுமாறு ஊக்குவிக்கப் போகின்றது. இந்த அமைப்பின் திறந்த சந்தைக் கொள்கை, சனநாயகக் கொள்கை என்பன வெளிப்படுத்தப்பட்ட பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய பொருளாதார அமைப்பில் சேருவதற்கு அநேக தடைகள் இருக்கின்றன என்பது தெளிவாகும். இந்த முன்னைய பொதுவுடமை நாடுகளுக்குள் பிளவு இருப்பதுபோல் ஐரோப்பிய பொருளாதார அமைப்பு நாடுகளுக்குள்ளும் பிளவுகள் இருக்கின்றன. நிச்சயமாக மூன்று பெரிய நாடுகளான சேர்மனி, பிரித்தானியா, பிரான்சு ஆகிய நாடுகளுக்கிடையே பிளவுகள் இருக்கின்றன.

ஆங்கிலேய மொழித் தொடர்பில் ஏற்பட்ட பண்பாட்டு தொடர்புடன் ஆங்கிலோ - அமெரிக்க நட்புறவு சிறப்பு நட்புற வாக இருக்கின்றது எழுச்சி பெற்றுவரும் செர்மனியின் ஆற்றலைப் பார்த்து பிரித்தானியாவும், அமெரிக்காவும் சந்தேகம் கொண் டுள்ளன சிலவாககியர்கள் அதை அறிவார்கள். ''ஐரோப்பாவில் செர்மனியின் செல்வாக்கைச் சமப்படுத்த முயலும் நாடுகளுக்கு சிலவாக்கியா முக்கியமானது'' எனத் தீவிரவாத சிலவாக்கிய கட்சி யின் தலைவரான திரு. விளாடிமீர் மிசுக் கோவ்சுகி கூறியதாக பிராற்றி சிலவாவிலிருந்து திரு. அன்ட்ரூ நாகோர்சுகி அனுப்பிய செய்தி கூறுகின்றது.

சுதந்திர செக் குடியரசு இலகுவாக ஜேர்மனியர்களின் கட் டுப்பாட்டுக்குள் வந்துவிடுமாதலால் சுதந்திரமான சிலவாக்கி யாவை அநேகமான வெளிநாடுகள் ஆதரிக்கும் எனச் சில தேசிய வாதக் கட்சியாளர்கள் கூறுகின்றார்கள். இந்தச் சடுதியான மாற்றங்கள் ஏற்படும் சூழ்நிலையில் திரு. மேயர் அவர்களது பயணம் மிகவும் சுவாரசியமாக இருக்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் செக்கோசிலவாக்கியாவுக் குச் சொந்தமான சுடெற்றன்லாந்தை செர்மனிக்கு ஒப்படைத்த கவலைக்கிடமான செயலினால் ஏற்பட்ட ஆவிகளை புதைத்து வைக்க உறுதிபூண்டுள்ளன எனப் பிரித்தானியாவும் செக்கோசில வாக்கியவும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன. செக் கோசிலவாக்கியாவைக் கட்டாயப்படுத்தி கிட்லருடன் கைச்சாத் திடப்பட்ட மியூனிச் உடன்படிக்கை செல்லுபடியற்றது என்பதை அந்தக் கூட்டறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. திரு. மேயர் அவர்கள் செக் தலைவர்களுடனும், சிலவாக்கியத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

சிறுபான்மைக் கங்கேரியர்களின் எதிர்காலம் பற்றி இந்த அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை. இந்தப் பிரச்சினை செக் கோசிலவாக்கிய - கங்கேரிய எதிர்கால உறவுகளில் விரைவில் பாதிப்பை ஏற்படுத்துமென நான் நம்புகின்றேன்.

# பராக்கிரமபாகுவின் மகளை மணமுடித்தான், சிங்கள நிகண்டு தந்தான் ஒரு பாண்டியத் தமிழ் வீரன்!

19. 7. 92 தினகரன்

**12**ஆம் நூற்றாண்டின் பின்னே (800-ம் ஆண்டுகளுக்கு முன்னர்) இலங்கைச் சரித்திரத்தில் தமிழ் மணம் வீசியது.

தமிழிலே தோன்றிய தூது காவியங்கள், அகநானூறு புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போன்றவைகளைப் பின்பற்றி எழுதப்பட்ட சிங்கள சந்தேஸ காவியங்கள் சிங்கள இலக்கிய முன்வரிசையிலே வைக்கப்பட வேண்டிய இலக்கியங்களாகின.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் (வீர அழகக்கோனார் என்ற வீர அழகேசுவரனின் மகன்) 15ம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியத்தை ஆண்ட பொழுது ஸ்ரீராககுல என்ற புலவர் வாழ்ந்தார். தமிழ், பாளி, சமஸ்கிருதம், சிங்களம் முதலிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார். இவர் காலத்தில் தமிழ் முக்கிய பாடமாக எல்லாப் பிரிவேனாக்களிலும் கற்பிக்கப்பட்டது எனத் தக்க ஆதாரங்களுடன் காட்டுகிறார் டாக்டர் கொடகும்புற.

மேற்படி பராக்கிரமபாகு மன்னன் அரசாண்ட காலத்தில் பாண்டி நாட்டிலிருந்து நல்லூர்த் துணையார் என்ற தமிழ் வீரன் இலங்கை வந்தான். தமிழில் அளவில்லா ஆர்வமும் கொண்டிருந்தான். இவன் மன்னனின் படையில் சேர்ந்ததும் சிங்களத்தை நன்றாகக் கற்று, சிங்களத்தில் "நிகண்டு" இல்லாக்குறையை நிவர்த்திக்க தமிழ் நிகண்டு முறையைப் பின்

பற்றி ''சிங்கள நாமா வலிய'' என்ற நூலை எழுதினான். சிங்களத்தில் எழுதப்பட்ட முதல் நிகண்டு இதுவேயாகும்.

பராக்கிரமபாகு மன்னன் தனது குமாரி லோகநாத தேவியையும்இத்தமிழ் வீரனுக்கு மணமுடித்து வைத்தான். தனது தமிழார்வத்தை மறக்க முடியாதவனாக தன் துணைவியின் பெயரை ''உலகுடைய தேவி'' என மாற்றினான்.

இவ் வீரனின் பெயர் சிங்கள நூல்களில் ''நன்னூர்த் துணையார்'' எனவும் ''நன்னுறு துணையார்'' எனவும் ''நல்லூர்த் துணையார்'' எனவும் பல விதமாகக் காணப்படுகின்றன. இவனைப் பற்றி அறிஞர்கள் ஆராய்வது நல்லது.

—39 ஆண்டுகளுக்கு முன் 22. 11. 1953 'வீரகேசரி' யில் கோரிக்கையும் தகவல்களும் விடுத்தவர் பழம்பெரும் எழுத்தாளர் என். சுப்பிரமணியம் அவர்கள்.

---

## நல்ல கேள்வி

கிணற்றுக்குள் தவறி விழுந்த ஒருவன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தான். வெளியே நின்ற பலர் அவன் தத்தளிப்பதைப் பதை பதைப்புடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்,

திடீரென்று ஒருவன் கிணற்றுக்குள் குதித்தான். நீச்சல் அடித்த அவன் தத்தளித்துக் கொண்டிருந்தவனை எப்படியோ காப்பாற்றி வெளியே கொண்டுவந்தான்.

அவன் செய்த துணிச்சலான செயலை அங்கிருந்த எல்லோரும் பாராட்டினார்கள்.

ஆனால் அவனோ, 'யார் என்னைக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டது. அதை முதலில் சொல்லுங்கள்' என்று கத்தினான்.

# யாதும் ஊரே;
# யாவரும் கேளிர்!

**கலைஞர் மு. கருணாநிதி (சங்கத் தமிழ்)**

மூன்று கூறாக ஆவதற்கு முன்பிருந்த
முகவைப் பெரு மாவட்டத்தில் முதறிஞர் பண்டிதமணி
கதிரேசன் செட்டியார் பிறந்தார் எனக் கேள்வியுற்றுக்
களிப்புடனே மகிபாலன்பட்டிக்குச் சென்றிருந்தபோது
பூங்குன்றமெனப் பழையநாள் இலக்கியமாம்
புறநானூற்றுக் குறிப்பில் இருந்த ஊரின் பெயர்தான்
மகிபாலன்பட்டியாக
மாறிற்றென்று, பெரும்புலவர்
மாணிக்கனார் உரைக்கக் கேட்டு
மகிழ்ச்சியிலே திளைத்துப் போனேன்.

கணியன் பூங்குன்றனார் எனும் அவ்வூர்க் கவிஞன்
கற்குகையொன்றில் செதுக்கியுள்ள கவிதையினைக்
காண வாரீர் என அழைத்திடவே; சென்று கண்டேன்! - அந்தப்
பழம்புலவன் கரங்கொண்டு செதுக்கியதோ - அன்றி
பார்புகழும் அப்பாட்டைப் பின்வந்தோர் செதுக்கியதோ?
யார் செயலாய் இருந்திடினும் அப்பாட்டில்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும்
அறைகூவல்தனை அற்றைநாளில் ஒரு தமிழன்
நிறைகுடமாய்த் திகழும் தன் நெஞ்சத்தைத் திறந்துகாட்டி
விரிகடல்சூழ் உலக முழுதும் நம் ஊரே என்றும்
விழியும் ஒளியும் போல் மக்கள் எலாம் நம் உறவே என்றும் - புதிய
வெளிச்சத்தால் பொல்லாத இருள் கிழித்து
வேற்றுமையின் வேரறுத்துப் புரட்சி செய்தான்!

பூத்தமிழில் வண்டாகப் புணர்ந்து கலந்து - இந்தப்
பூமிக்கே பொதுக்கவிதைக் கனியொன்றைத் தந்த கவிஞன்
பூங்குன்றந்தனில் பிறந்த புலவன் கணியன்தான் என்கின்றபோது

புல்லரித்துப் பூரித்துப் போகுதம்மா; நம் எண்சாண் உடம்பு!
அந்நாளில் புலவரெல்லாம் அகிலத்தை ஆளுகின்ற
அரசர்களின் அவைக்களத்தில் அரிய தமிழ்க் கவிகள்பாடி
ஆனையென்றும் சேனையென்றும் ஆயிரம் பொற்கிழிகள் என்றும்
மானியங்கள் மற்றும் பல பரிசில் என்றும் மலைமலையாய்ப்
பெற்றிடுவர்!
இந்நாளில் சில புலவர்போல் வாழ்வார்க்கு வாழ்த்துரைத்து
இன்னலுற்று அவர் தாழ்வாராயின் அக்கணமே சிறகடித்து
அற்றகுளத்துப் பறவைபோல அடுத்தகுளம் பார்க்கின்ற
இயல்புடையார் அப்போதும் சிலர் இருந்திடத்தான் செய்தார்கள்!
கணியூர்ப் பூங்குன்றனோ; அவர்கண்டு கவலைமிகக் கொண்டதனால்
அணிமணிகள் தமிழில் செய்து அரசர்க்கும் வள்ளல்கட்கும்
பூட்டி மகிழ்வதிலே ஆர்வமொரு கடுகளவும் காட்டாமல் இருந்திடவே;
நீட்டி முழக்கிச் சிலபேர்; "அரசை அணுகிப் பரிசு பெறப்
பாடல்களை இயற்றிடுக!" எனக் கேட்டபோது—கணியன்;
பக்குவமாய் விடையளித்து அவர் விருப்பமதைத் தட்டிக் கழித்தான்!
"நாடு பற்றிப் பாடுகின்றீர்—நன்று! நன்று!
நாடாளும் மன்னர் பற்றிப் பாடுகின்றீர்—அதுவும் நன்று!
நாடுதனை மீட்பதற்கும் புதிதாகப் பறிப்பதற்கும்
கேடுகளைச் சுமந்து விழுப்புண்கள் ஏந்துகின்ற
பீடுநடை வீரர் பற்றிப் பாடுகின்றீர் - மிகவும் நன்று!
ஏடுகொள்ளா இலக்கியங்கள் காதலையும் களம்புகுவோர்
காதையையும்
எடுத்தியம்பும் காரணத்தால் என்வழியைத் தனிவழியாய்
ஆக்கிக்கொண்டு
எல்லா ஊரும் எமது ஊரே
எல்லா மனிதரும் எமது உறவே - என
எழுதத் தொடங்குகின்றேன்" என்றான்!

நற்றிணையில் வருகின்ற காதல் பாட்டொன்றைக் கூடக்
கற்றறிவாளன் கணியன் பூங்குன்றன் எழுதுங்கால்
"மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை மட்டுமன்றி அந்த
மரத்தையே வேரோடு பிடுங்குவதோ?" எனக்கேட்டு,
பயன்படுவன எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப்
பாங்காக அறிவுரையைப் பகருகின்றான் உலகிற்கு!
"ஒரே உலகம்" எனும் கொள்கைதனை - மனிதரெலாம்
"ஒரே குலம்" எனும் தத்துவத்தைப் புவியில்;
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு

*முன் தோன்றிய மூத்த குடிப் பிறந்த தமிழ்க்*
*கணியன் பூங்குன்றன், கவிதை நடைச்*
*சொல்லூன்றி நிலைநாட்டுகின்றான்!*

*விதிப்பயனே எல்லாம் என்றுரைத்துச் சோர்ந்து*
*கதியற்றுக் கன்னத்தில் கைவைப்போர்தனைப் பார்த்து;*
*'' நன்மைக்கும் தீமைக்கும் காரணங்கள்*
*நமது செயல்களேயன்றி பிறரல்ல '' என்று*
*நயம்பட உரைக்கின்றான் அந்த நற்றமிழ்ப் புலவன்!*

*அம்மட்டோ?*

*வேதனைகள் விரைந்து தொடர்வதும் - அவை*
*விலகித் தொலைந்து போவதும் கூட*
*நாம் ஏற்றிடும் செயல்களால் என்றே*
*நன்கு கணித்து நவில்கின்றான் கணியன்!*
*'' பிறந்த உயிர்கள் இந்த மண்ணில்*
*இறந்து மறைதல் புதிதுமல்ல;*
*இன்பமொன்றுக்காகவே வாழ்க்கை என்பதும்*
*துன்பம் வந்திடின் வாழ்வை வெறுப்பதும்*
*உறுதி கொண்ட மாந்தர்தம்*
*உளத்திற்கேற்ற உயரிய செயலுமல்ல!*
*ஆற்றோடு போகும் தெப்பம் போல்*
*ஆடியும் அசைந்தும் அமைதி கண்டும்*
*ஆருயிர்ப் பயணம் அவனியில் நடக்கும்! எனவே*
*ஆன்றோர் காட்டிய அரிய வினைகளைத் தொடர்க!*
*செழிப்பில் திளைத்தோர்க்கு சிரம் தாழ்த்தலுமில்லை;*
*சிறியோர் எனப்படுவோரை இகழ்ந்துரைத்தலுமில்லை!''*

*இவ்வாறு;*

*உலக ஒற்றுமை, ஒரு குலக் கொள்கை,*
*உயிரின் தன்மை, உயரிய வினைகள் - வாழ்வில்*
*உற்ற துன்பமும் உவகையின்பமும் ஒன்றெனக் கருதுதல்,*
*உயர்ந்துள்ள செல்வாக்குப் பணியாமை - வீணில்*
*உழன்றிடும் சிறியோரை இகழாமை; எனப் பல*
*வண்ணமிகு மலர்கள் கொண்டு - உயர்*
*எண்ணங்களைத் தொடுத்தளிக்கும் பெரும்*
*உள்ளம் காணுகின்றோம் இந்தக் கவிதையினில்; புது*
*வெள்ளம் போல் இக்கருத்து பரவட்டும் காசினியில்!*
*ஆனால் ஒன்று;*
*ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்*
*உறவுகொண்டே மனித குலம் ஒன்றே எனத் திகழ்வதும்*

உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன் கூட
தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென இணைத்தே
கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனாய் உலவியதைக் கவனமுடன்
எண்ணிப் பார்த்தால் - அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான் உண்மையன்றோ?

★

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; மின்னோடு
வானம் தண்துளி தலைஇ, ஆறாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."

★

(புறநானூறு - பாடல் : 192
பாடியவர் : கணியன் பூங்குன்றன்)

பொருள் விளக்கம்:

கேளிர் = உறவினர். புதுவதன்று = புதியதல்ல.
முனிவின் = வெறுப்பின் காரணமாக.
புணை = தெப்பம். திறவோர் = ஆன்றோர்.
இலம் = இல்லாமை. (இல்லையென்ற பொருளில் இங்கு வரும்).

# சீர்குலைந்து போகும் ஒரு நாடு


–பத்தூக் கதானி–
(Frontline 03-07-92)

**ஐரோப்பிய நாடுகளின் இராசதந்திர முயற்சிகள் தோல்வியுற்றதன் பயனாக யூகோசிலாவியாவில் குருதி பாய்கிறது**

கெடுபிடிப் போரின்போது அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நாடாகத் திகழ்ந்த யூகோசிலாவியாவில் தற்போது நடப்பவற்றை உற்றுநோக்கின், அங்கே ஒரு மூன்றாம் உலகப்போர் நடைபெற்று வருவது போல் காட்சியளிக்கின்றது. இந்த நாட்டிலிருந்து பிரிந்து சென்றுள்ள பொஸ்னியா- கெர்சோகோவின்னாக் (Bosnia- Herzegovina) குடியரசின் தலைநகரான சரயேவோ (Sarajevo) விலேயே முதலாம் உலகப்போர் தொடங்கியது.

தற்போது பொஸ்னியாவில் நடைபெற்றுவரும் இனக்கலவரங்கள் ஐரோப்பிய சமூக நாடுகளின் இராசதந்திர உபாயங்களின் இயலாமையைச் சித்தரித்துக் காட்டுகின்றன என பார்வையாளர்களின் அறிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இங்கு நடைபெற்றுவரும் சிக்கலைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவோ, ஐரோப்பிய சமூக நாடுகளோ எடுத்த இராசதந்திர ரீதியான முயற்சிகள் முன்னேற்றகரமான மனநிறைவை ஏற்படுத்துவதிலும் பார்க்க மனச்சோர்வையே அளிக்கின்றன என அவர்கள் கூறுகின்றனர்.

சோவியத் ஒன்றியம் என்ற பேரரசு குலைந்து சீரழிந்து போனதினால் ஐரோப்பிய நாடுகளின் அரசியலமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. அத்தோடு கிழக்கைரோப்பாவிலும், தெற்கைரோப்பாவிலும் அந்த வல்லரசு விட்டுச்சென்ற அடையாளங்கள் விரைவாக மறைந்துவருகின்றன.




ஐரோப்பாவில் வளர்ந்துவரும் ஜெர்மனியின் மேலாண்மையும் செல்வாக்கும் அங்கே உள்ளவர்களுக்கு உள்ளூர அச்சத்தை தரும் வேளையில் யூகோசிலாவியாவில் கூட்டரசு குலைந்துபோனது ஐரோப்பிய அரசியலில் பாரியதாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்கள் ஒன்று கூடும்போதெல்லாம் ஜெர்மனியின் மேலாண்மையையும், செல்வாக்கையும் பற்றிய பேச்சே அவர்களின் பேச்சுக்களில் கலந்துவருகின்றன. ஆனால் இந்த மேலாண்மை இப்பொழுதும் ஒரு கருத்தாகவே இருக்கின்றது.

பின் விளைவுகளைத் தடுக்கும் வகையில் தெற்கைரோப்பிய சமநிலைவலுவை நிலைநிறுத்துவதற்காக மேற்கு நாடுகள் யூகோசிலாவியக் கூட்டணிநாடு சீர்குலைந்து போகா

மல் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, சில காலங்களுக்கு முன்னர், அமெரிக்க இராசாங்க அமைச்சர் திரு. ஜேம்ஸ் பேக்கர் மன்றாடிக்கொண்டிருந்தார். குறோசியாவிலும் (Crotia) சிலோவேனியா (Slovenia) விலும் வளர்ந்துவரும் இனக்கலவரங்களினால் யூகோசிலாவியாவின் சிரான நிலைமை சீர்குலையத் தொடங்கியது. ஐரோப்பிய சமூக நாடுகளின் மன்றங்களில் ஜெர்மனியின் செல்வாக்குப் பெருகத் தொடங்கியமையால், ஐரோப்பிய சமூக நாடுகளுக்குப் பிரிந்து சென்ற குடியரசுகளான குரோசியாவையும், சிலோவேனியாவையும் அங்கீகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சேர்பியர்களின் மேலாண்மையிலுள்ள யூகோசிலாவியாவில் இருந்து குறோசியாவும், சிலோவேனியாவும் பிரிந்து செல்வது ஜெர்மனிக்கு, அதன் சொந்த அரசியல் நலன்களுக்காகவும் இன நலன்களுக்காகவும் தேவைப்பட்டது. இந்த இரு குடியரசுகளும் ஒரு காலத்தில்ஒசுறோ-ஜெர்மன்(Austro- Gern an)பேரரசில் இருந்ததோடல்லாமல்இரண்டாம்உலகப்போரின் போது இவ் இரு குடியரசுகளிலிருந்த மக்களும் நாசிகளுக்கு சார்பாக இருந்தனர். இந்த இரு குடியரசுகளையும் அங்கீகரித்ததனால் சேர்பியர்களின் ஆட்சிக்குட்படாத நிலப்பரப்புக்களில் உள்ள சேர்பியர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கில் சேர்பியத் தீவிரவாதக்குழுக்கள் வளரத் தொடங்கின. யூகோசிலாவியக் கூட்டணி அரசாங்கத்தின் இராணுவத்தில் உயர்பதவிகளில் சேர்பியர்களே பெரும்பான்மையாக இருப்பதனால், இந்தச் செர்பியத் தீவிரவாதக் குழுக்களுக்கு வெளிப்படையாக யூகோசிலாவிய இராணுவம் ஆதரவு அளித்துவருகின்றது. நீண்டகாலமாகப் பொஸ்னியாவில் சகிப்புத்தன்மையுடன் இணைந்த வாழ்க்கை நடத்திவந்த முஸ்லிம்களினதும், கிறிஸ்தவர்களினதும் வாழ்க்கை முறை முடிவுக்கு வந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப்படை பாதுகாப்பின்மை காரணமாக தனது முயற்சியைக் கைவிட்டது.

யூக்கோசிலாவியாவிலுள்ள ஆறு குடியரசுகளிலும் சேர்பியா மிகப்பெரியதும் செல்வாக்கும் மிக்கதுமாகும். யூகோசிலாவியக் கூட்டணி அரசு தற்போதிருக்கும் நிலையிலிருந்து குலைந்து போகாமல் இருப்பதற்கு அந்நாட்டு சனாதிபதி திரு. சிலொபொடன் மிலோசேவிக் (Slotodon Melos:vic) அரும்பாடுபடுகின்றார். குறோசிய நிலப்பரப்பில் 30 சதவீதமும், பொஸ்னிய நிலப்பரப்பில்70 சதவீதமும் சேர்பியர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இங்கு சேர்பிய இனத்தவர்கள் கணிசமான அள

வில் வாழ்கின்றனர் என சேர்பியர்கள் கூறுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பீட்டின்படி 12 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் (அநேகமாக குறோசியர்களும், பொஸ்னியர்களும்) முன்னைய யூகோசிலாவியாவின் எல்லைக்குள் வசிக்கின்றனர். 250,000 மக்கள் நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்காவுக்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் அரசியல் புகலிடம் கோரிச்சென்றுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இரகசியமாக எல்லைகளைக் கடந்து தங்கள் உறவினருடன் வாழ்ந்துவருகின்றனர்.

இதுதான் இரண்டாம் உலகப்போரின் பின்னர் நிகழ்ந்த பாரிய கட்டாயக்குடிபெயர்வு ஆகும் எனவும், இது ஒரு தொடக்க நடவடிக்கை எனவும் பார்வையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப்படை ஏறக்குறைய முழுமையாக வெளியேறிய நிலையில் இந்தப் பேரழிவு தொடர்ந்தும் நடைபெறுகின்றது. உணவு மற்றும் மருந்து வகைகளின் பற்றாக்குறை காரணமாக மக்கள் ஆயிரக்கணக்கில் இன்னல் படுகின்றனர்.

தேசிய ரீதியில் மக்களின் ஏகோபித்த வாக்களிப்பு மூலம் பொஸ்னியா-கெர்சோகோவின் மக்கள் சுதந்திர நாடாக இருப்பதற்கு வாக்களித்துள்ளனர். யூகோசிலாவியாவிலுள்ள குறோசியாவில், போர் சென்ற ஆண்டுதான் மூண்டது. ஆனால் அப் போர் தெற்குப்பக்கமும், கிழக்குப்பக்கமும் பரவி 12,000மக்களைப் பலிகொண்டுள்ளது. ஆயிரக்கணக்கில் மக்கள் காணாமற்போயுள்ளனர். இதை ஒரு மனித அவலம் என திரு. பேக்கர் கூறுகின்றார். இந்தக் கொடூர வன்முறைகள் ஐரோப்பியா முழுவதிலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சேர்பியப் படைகள் குறோசியாவுக்குள் படையெடுத்தபோது சனாதிபதி மிலோசேவிக் யூகோசிலாவியாவை ஒரே நாடாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்ததாகத் தொடக்கத்தில் மேற்கத்தைய இராசதந்திரிகள் வாதித்தனர். ஆனால் பொஸ்னியாவின் எல்லையின் இருமருங்கிலும் நடந்த இனரீதியான இராணுவ அட்டூழியங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பரந்த சேர்பியா என்ற சேர்பியர்களின் கொள்கை தான் பாரிய அழிவுகளைக் கொண்டு வந்துள்ளது.

சேர்பியர்கள் ஒரு புனிதப்போரில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாக நினைக்கின்றனர். 19ம் நூற்றாண்டின் இறுதிவரையும் சேர்பியா ஓட்டோமான் பேரரசின் கீழ் இருந்தது. துருக்கியர்

களை ஐரோப்பிய மண்ணில் இருந்து கொன்ஸ்தாந்திநோபிள் (Constantinople) நுழைவாயில் வரை வெளியேற்றுவதற்காக நடைபெற்ற முதலாவது பால்கன்போரில் (Balkan War) சேர்பியாவும், கிரேக்கமும் கூட்டுச்சேர்ந்து போரில் ஈடுபட்டன. இந்தப்போர் முடிவுற்றதும் தாங்கள் கூட்டாகச் சேர்ந்து கைப்பற்றிய நிலப்பரப்புக்களை பங்கீடுசெய்வதில் ஏற்பட்ட பிணக்கினால் அவை தங்களுக்கிடையே சண்டையில் ஈடுபட்டன. இந்த நேரத்தில்தான் வல்லரசுகள் நடவடிக்கையில் இறங்கி யூகோசிலாவிய நாட்டின் புதிய எல்லைகளை தீர்மானித்தன. அப்போது அவ்வெல்லையின் தென்பகுதிக்குள் பெருமளவில் சேர்பிய மக்களைக் கொண்ட பகுதி உள்ளடக்கப்பட்டது. இச் சேர்பிய மக்களின் தேசிய உணர்வே யூகோசிலாவியாவின் பெரும்பாலான சேர்பியர்களைக் கொண்ட இராணுவத்திற்கு உந்து ஆற்றலாக இருக்கின்றது.

சனாதிபதி யோசிப் பிறோஸ் டிட்டோ (Josep Bros Tito) அவர்களின் ஆட்சிக்காலமான 1948ம் ஆண்டிலிருந்து 1980ம் ஆண்டு மே மாதம் 4ந் திகதி (இவர் இறக்கும்வரை) வரை யூகோசிலாவியாவின் ஐக்கியம் பேணப்பட்டது. சிலோவேனியா, குறோசியா, மசிடோனியா, பொஸ்னியா, மொன்ரேநீக்ரோ ஆகிய குடியரசுகள் சேர்பியாவுடன் ஒரு இறுக்கமற்ற பிணைப்பின் அடிப்படையில் கூட்டாட்சியில் இருப்பதற்கு இணங்கியிருந்தன. யூகோசிலாவியாக் கூட்டரசு என்ற நாட்டுக்கு ஒரு புதிய தேசிய அடையாளத்தையும் ஒரு கொள்கையையும் சனாதிபதி மார்சல்டிட்டோ பெற்றுக்கொடுத்தார். இரண்டாவது உலகப்போரின் பின்னர் முன்னாள் சோவியத் ஒன்றியத்தினதும் அதன் தலைவர் ஸ்டாலின் அவர்களினதும் மேலாண்மையை எதிர்த்த முதலாவது பொதுவுடமை நாடு யூகோசிலாவியாவாகும். இதன் பின்னர் அணிசேரா நாடுகளின் இயக்கத்தில் உறுப்புரிமை வகித்த முதலாவது ஐரோப்பிய நாடாக இந்நாடு திகழ்ந்தது. தற்போது அங்கு நடைபெற்றுவரும் இனப்பூசல்களும், தகுதியான தலைமைப்பீடமின்மையும், பூகோள அரசியல் ரீதியான நெருக்கடிகளும் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்துள்ளன.

சனாதிபதி மிலோசேவிக் அவர்களை ஒரு வன்கவர்வாளர் என மேற்குநாடுகள் கண்டிருக்கின்றன. இந்நாட்டில் நடைபெற்றுவரும் அட்டூழியமும் அநாகரிகமுமான இரத்தக்களரியை தொலைக்காட்சி மூலம் பார்க்கும் உலகமக்களின் கருத்தை சேர்பியாவுக்கு எதிராக மாற்றி உள்ளது. இந்த இரத்தக்களரியைப் பல மாதங்களாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது

நிலைதடுமாறிய நிலையிலிருந்த அமெரிக்கா, இறுதியாக அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் சேர்பியாவைத் தனிமைப்படுத்தும் வகையில் இராசதந்திர ரீதியான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. உணவில் தன்னிறைவும் போதுமான நிலநெய்யும் கையிருப்பில் உள்ளதால் சேர்பியாவுக்கு எதிராக விதிக்கப்படும் தடை அந்நாட்டைப்பாதிக்கமாட்டாது.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அடிக்கடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட கறிங்குன் பிரபு (Lord Carrington) வின் செயற்பாடுகள் பயனளிக்கவில்லை. பிரித்தானியாவும் ஜெர்மணியும் பொருளாதாரத் தடையுடன் ஓரளவு இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவேண்டும் என நினைக்கின்றன. ஜெர்மனி தனது நலன்களைக் கருத்திற்கொண்டு ஐரோப்பியநாடுகளில் தனது கருத்துக்களைத் திணிப்பதையிட்டு பிரான்ஸ் மனநிறைவு எய்தவில்லை.

தன்னிச்சையாக அமெரிக்கா எதுவித நடவடிக்கையில் இறங்காதென்றும் 'பலாத்காரத்தைப் பிரயோகித்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயலாதென்றும் திரு. ஜேம்ஸ் பேக்கர் கூறியுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வை எட்டமுடியாதிருந்தால், தீர்வை எட்டுவதற்கு மேற்குலக நாடுகள் வேறு பல திட்டங்களை வைத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று வட அத்திலாந்திக் நாடுகளின் படைகளை ஈடுபடுத்தல் அல்லது ஐக்கிய நாடுகள்சபையின் அனுசரணையுடன் பல்தேசியப்படைகளை ஈடுபடுத்தல் ஆகும். ஐரோப்பிய தலைநகரங்களில் இத்திட்டத்துக்கு நல்ல வரவேற்பிருக்கவில்லை. சனாதிபதிமிலோ சேவிக்இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன பால்கன்நாடுகளில் அமைதி நிலவுவது சேர்பியாவின் கைகளிலேயே இருக்கின்றது.

## சத்தியத்தை மீறும் சத்தியம்

குடிப்பதை நிறுத்திவிட்டதாக அவன் தன் மனைவியிடம் சத்தியம் செய்தான். ஆனால் பொய் சொல்வதை நிறுத்தி விட்டதாகச் சத்தியம் செய்யவில்லை.

# மாற்றமடைந்துவரும் பொருளாதாரத்தில் ஐக்கிய அமெரிக்கா வகிக்கும் இடம்

-(நியூயோர்க் ரைம்சு)

குவேக்கர் தந்தைகள் ஏதிலிகளாக சென்ற காலத்தில் சொர்க்கபுரியாகத் திகழ்ந்த நாடு,20ம் நூற்றாண்டின் இறுதிக் காலமான இன்று இழிசெயல்களான காடைத்தனம், நடத்தைக் கேடு, கீழ்த்தரமான செயல்கள், சீர்கேடு, ஏமாற்றம், அச்சம் நில வும் ஒரு நரக உலகமாகக் காட்சியளிக்கின்றது. அமெரிக்கர்கள் கண்ட கனவு கோரக்காட்சிகளைக் கொண்ட பகற்கனவாக மாறிவிட்டது.

முதலாவதாகச் செவ்விந்தியர்களைப் படிப்படியாக அழித் தமை, அதன் பின்னர் கறுப்பின மக்களை அடிமைகளாக்கி அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியமை, அண் மைக்காலங்களில் ஜப்பானிய நகரங்களான கிரோசிமா, நாக சாகி ஆகியவற்றின் மீது அணுகுண்டுகளை வீசி அழித்தமை, இதைத் தொடர்ந்து வளைகுடாப் போரின்போது எல்லை மீறிய குண்டு வீச்சினால் ஈராக்கிய நாட்டைக் கற்காலத்துக்குச்செல்லத் தக்கதாக அந்நாட்டின் செல்வங்களை அழித்தமை ஆகியன அமெரிக்கா செய்த அட்டூழியச் செயல்களாகும். இந்த அநியா யங்களையும், அட்டூழியங்களையும் புரிந்த நாட்டைத்தான் சகல சுதந்திரங்களும் சனநாயகமும் சகல உரிமைகளும் நிலவும் நாடு என உலகத்தவர்கள் நம்பும்படி கற்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெரிய நாட்டிலும், அங்குள்ளமக்களிடையேயும் நிலவும் அநியாயங்களையும்அட்டூழியங்களையும் அமெரிக்க நூல் களும்,எழுத்தாளர்களும் கோடிட்டு வெளிப்படுத்துகின்ற வேளை யில் அந்த நாட்டின் சனாதிபதி அங்கு நடப்பவற்றைக் கண்டும்

காணாதவர் போல் இருப்பதோடு அல்லாமல் உலகத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டுவதற்காகத் தனது 'புதிய உலக ஒழுங்கு' ஒன்றை நடைமுறைப்படுத்த எத்தனிக்கின்றார்.

அமெரிக்காவிலுள்ள மக்களின் விவாகரத்து விகிதம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையிலும் பார்க்கத் தற்போது இருமடங்காக அதிகரித்துள்ளது என 'ரைம்' பத்திரிகையில் தொடர்ந்து எழுதுபவர்களில் ஒருவரான திரு. சாள்ஸ் குரோத்தமர் எப்ரல் 27ம் திகதி வெளிவந்த இச்சஞ்சிகையில் எழுதியுள்ளார். அரைவாசிக்கு மேற்பட்ட அமெரிக்க குழந்தைகள் தமது 18 வயதுக்கு முன்னர் தாய் அல்லது தந்தையுடன் மட்டும் வாழ்வர். பிறக்கும் குழந்தைகளில் $\frac{1}{4}$ பங்கிற்கு மேல் திருமணம் செய்யாமலேயே பிறக்கின்றன. இது 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தும் 5 மடங்கு கூடவாகும். மே மாதம் 18ம் திகதி வெளிவந்த 'ரைம்' சஞ்சிகை, லொஸ்ஏஞ்சல்சில் நடைபெற்ற இனக்கலவரத்தைப் பற்றி எழுதியுள்ள விமர்சனத்தில், லொஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற கலவரத்தின் பின்னர் நகரத்துக்கு வெளியேயுள்ள தங்களது வீடுகளுக்கும், தொழிலகங்களுக்கும், சென்ற பொழுது வறுமை நிலையிலுள்ள மக்கள் எப்பொழுதுமில்லாதவாறு மேலும் வறுமை நிலைக்குக் கீழே சென்றுள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது எனக் கூறுகின்றது. லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் நலன்புரிச்சேவைகள் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் வரலாற்று ரீதியாக மதிப்பிட முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது. லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்திலுள்ள மக்கள் தொகையில் 1/7 பங்கினர் ஏறக்குறைய 1.4 மில்லியன் மக்கள் அந்த மாநிலத்தினால் நிருவகிக்கப்படும் நலன்புரித் திட்டங்களின் தயவிலேயே வாழ்கின்றனர். இவ்வுதவி பராமரிப்பிலுள்ள பிள்ளைகளுடைய குடும்பங்களுக்கான உதவிகளாகவும், பொது துயரொழிப்பு உதவிகளாகவும். உணவுமுத்திரை உதவிகளாகவும் வழங்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார உள்ளகக் கட்டமைப்பு வீழ்ச்சியடைவதும், கல்விமுறை வீழ்ச்சியடைவதும் நலிந்துபோகும் பொருளாதாரத்தை எடுத்துக்காட்டுவதாகப் பொருளாதார நிபுணர்களுடன் சேர்ந்து பிரபல பொருளாதார நிபுணரான திரு.பாறி பொஸ்வொத் அவர்கள் அறைகூவல் விடுக்கின்றார். இனிமேல் பிறக்கப்போகும் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் வாழ்ந்த வாழ்க்கைபோல் வாழும் நிலைக்கு வரமாட்டார்கள் எனத் திரு.பாறி பொஸ்வொத் கூறுகின்றார். பொதுவாக அமெரிக்க வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கான சில காரணிகள் பின்வருமாறு-:

1) இரண்டு வருமானங்கள் இல்லாமல் வாழ்க்கைநடத்திச்செல்ல முடியாமல் அமெரிக்கத் தொழிலாளர்கள் தத்தளிக்கின்றனர். அவர்கள் தற்போது சிக்கித் தவிக்கும் பொருளாதாரச் சூழ்நிலையே இதற்குக் காரணமாகும்.

2) 1970ம் ஆண்டில் 11% வீதமாக இருந்த பெற்றோரில் ஒருவரேயுள்ள குடும்பங்கள் தற்போது 25% வீதமாக உயர்ந்துள்ளது. பெண்கள்தான் தனிக்குடித்தன சுமையை பெருமளவில் சுமக்கின்றார்கள்.

3) தனிநபர் வருமானம் குறைவுற்றதனால் 1980ம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் கடன்பழு உயர்ச்சிபெற்று, அமெரிக்கத் தொழிலாளர்களே உலகத்திலுள்ள கைத்தொழில் நாடுகளில் குறைந்தளவு சேமிப்பாளர்களாக உள்ளனர்.

4) ஆசிய, ஐரோப்பிய முதலீட்டாளர்களிலும் பார்க்கக் குறைவாகவே அமெரிக்க முதலீட்டாளர்கள் வளர்ச்சியிலும், ஆராய்ச்சியிலும் முதலீடு செய்கின்றனர்.

5) அரசாங்கத்தினதும், தனிநபர்களினதும் கடன்பழு அதிகரித்துள்ளதால் எந்தவித முதலீட்டையும் செயவதற்கு வருமானம் பற்றாக்குறையாகவுள்ளது.

6) கடந்த 15—20 ஆண்டுகளாக உயர்ந்துகொண்டுபோகும் சம்பளத்தைப் பெறும் மேல்மட்டத்தவர்களினது சம்பளத்திட்டத்திற்கும் குறிப்பிடத்தக்க இழப்புகளுடன் குறைந்தளவு சம்பளத்தைப் பெறும் கீழ்மட்டத்தவர்களினது சம்பளத்திட்டத்திற்கும் இடையே உள்ள பாரிய இடைவெளி இருக்கின்றது.

அமெரிக்காவின் கல்வித்தராதரத்தில் கடந்த முப்பது ஆண்டுகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மாணவர்களுடைய இனம், சாதி, அவர்கள் நகரத்தில் வசிப்பவர்கள், கிராமத்தில் வசிப்பவர்கள் என்ற வேறுபாடில்லாமல் அமெரிக்க சமுதாயத்தில் பரவலாக எங்கும் இவ்வீழ்ச்சி காணப்படுவது மிகவும் மனக்கவலையைத் தரும் ஒரு விடயமாகும் எனக் கூறும் திரு.பொஸ்வெர்த் அவர்கள் ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் நாள் தோறும் தாக்கத்தை ஏற்படுத்தும் பழைய உள்ளகக் கட்டமைப்பான தெருக்கள், சுரங்கவழிகள், பாலங்கள், தண்ணீர்வசதி,



87031

மின்சாரம் ஆகியவற்றில் எவ்வித முதலீடும் செய்யப்படுவதில்லை என மேலும் கூறுகின்றார்.

முதன் முதலாக அமெரிக்கா கடனாளி நாடாகத் திகழ்வதோடல்லாமல் வரலாற்று ரீதியாக உலகில் அதிக உச்சக் கடன்பளு உள்ள நாடாகவும் திகழ்கின்றது எனப் புதிய உலக ஒழுங்கில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு என்பது பற்றித் தனது 'த பிறேற்னோரியன் காட்' (The Praetorian- The U S role in the new world order) என்னும் நூலில் முன்னாளில் மத்திய புலனாய்வுத்துறையில் சேவையாற்றிய திரு. ஜோன் ஸ்ரொக்வெல் எழுதியுள்ளார், மேலும் அமெரிக்க மக்களில் 25%வீதத்தினர் கல்வியறிவற்றவர்கள். பாடசாலைக்குப் படிக்கச் செல்லும் மாணவர்களில் உலகத்தில் ஆறாவது இடத்தை அமெரிக்கா வகிக்கின்றது.மக்களின் சராசரி ஆயுட்காலக் கணிப்பீட்டின்படி அது 7வது இடத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் 10வது இடத்தையும், கல்வித்தராதரத்தில் 10வது இடத்தையும் வகிக்கின்றது. இரண்டாவது உலகப்போரில் ஜெர்மனியும். ஜப்பானும் தோல்வியைத் தழுவிக்கொண்டபோதும், இந்த இரு நாடுகளும் அமெரிக்காவிலும் பார்க்கச் செல்வம் கொழிக்கும் நாடுகளாகவும், அத்தோடு அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாகவும் இருக்கின்றது எனத் திரு.ஸ்ரொக்வெல் மேலும் கூறுகின்றார்.

மேற்கூறியவற்றை உற்றுநோக்கும் பொழுது உலகத்தை மாற்றியமைப்பதற்கு முயற்சியை மேற்கொள்வதற்கு முன்னர் ஐக்கிய அமெரிக்கா தனது நாட்டை சீர்செய்யவேண்டியது அவசியமாகும்.

# திரு. லுமும்பா அவர்களைக் கொன்றது யார்? திரு. மொபுட்டு அவர்களிலும் அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது

*-(ஐலன்ட்-01.07.92)*

சயரில் (Zair) கடந்தகால வரலாற்றில் அதிர்ச்சியை ஏற்படுத்தியதும் முப்பது ஆண்டுகளுக்கு முன் சம்பவித்ததுமான அந்நாட்டின் முதலாவது பிரதமர் திரு.பற்றிஸ் லுமும்பா (Patrice Lumumba) அவர்களின் கொலை நிகழ்ச்சி மீண்டும் தலை தூக்கியுள்ளது.

1950களில் பரந்த ஆபிரிக்க இயக்கத்தின் (Pan Africanist Movement) தலைவராக இருந்தவரும் கொங்கோவுக்கு சுதந்திரம் வேண்டுமென பெல்ஜியத்திடம் முதன் முதலாக கோரிக்கை விடுத்தவருமான திரு.லுமும்பா அவர்களை சயர் நாட்டின் பெரும்பாலான மக்கள் ஒரு வீரத்தலைவராகவும் தற்கொடையாளியாகவும் இன்றும் போற்றுகின்றனர்.

சயர் நாட்டின் இரும்பு மனிதரான சனாதிபதி மொபுட்டு செசெசெக்கோ அவர்கள் (Mobuttu Sese Seko) இந்த விடயத்தில் வகித்த பங்கு காரணமாக முப்பது ஆண்டுகளாக திரு.லுமும்பா அவர்களின் சாவைப்பற்றிய விடயங்கள் பேசப்படாதிருந்தது.

அமெரிக்காவின் கட்டளைக்கமைவும், அமெரிக்க புலனாய்வுத்துறையின் (C.I.A.) இரகசியமான உதவியுடனுமே திரு. மொபுட்டு இப்படி நடந்துகொண்டார் என்று மேலும் கூறப்ப

டுகின்றது. திரு,மொபுட்டு அவர்களின் அரசியல் எதிரிகள் இந்த விடயத்தில் அவர் நேரடியான தொடர்பு கொண்டுள்ளார் என திடமாக நம்புவதால் சயர் நாட்டின் எதிர்கால அரசியலை தீர்மானிப்பதற்கு கூட்டப்படும் தேசிய மாநாட்டை ஒரு பொது விசாரணை மன்றமாக ஆக்கி திரு.மொபுட்டு அவர்களின் நடவடிக்கைகளை அங்கு அம்பலப்படுத்துவதன் மூலம் அவரை அவமானப்படுத்தி, அவரைப் பதவியிலிருந்து இறக்க அவர்கள் எண்ணினார்கள்.

திரு. லுமும்பா அவர்கள் பற்றிய விடயத்தை மாநாட்டில் கொண்டுவருவதை திரு.மொபுட்டு அவர்களின் ஆதரவாளர்கள் தடுக்கமுடியாதிருந்தபோதிலும் எதிரணியினர் மேற்கொண்ட தந்திரோபாயம் அவர்களுக்கே ஆபத்தை கொண்டு வந்திருக்கின்றது. திரு. மொபுட்டு அவர்களுக்கு உள்ள தொடர்புபற்றி அவர்மீது எவரும் குற்றம் சுமத்தாவிடினும் இந்த விடயத்தில் தொடர்புள்ளோர் பட்டியலில் சனாதிபதியின் அரசியல் எதிரிகள் பலரின் பெயர்களும் இருப்பதாக இப்போது கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களாக தற்பொழுது இருக்கும் முன்னாள் பிரதம மந்திரிகளான திருவாளர்கள் எத்தியென் சிசெக்கெடி (Etienne Tshisekedi) யோசெப் இலியோ (Joseph Ileo( ஆகியோரும் மற்றும் இரு முன்னாள் அமைச்சர்களும் இந்தப் பட்டியலில் அடங்குவர்.

நாடு சுதந்திரம் பெற்றபின் நன்கு மதிக்கப்பட்டவரான திரு. இலியோ அவர்களுக்கு எதிராகப் பாரதூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த மாநாட்டில் வழங்கப்பட்ட ஆவணங்களில் திரு.லுமும்பா அவர்களின் கொலைக்கு ஏதுவாகவிருந்த பிடியாணையில் அப்போதைய பிரதமரான இவரே கைச்சாத்திட்டுள்ளார் எனக்கூறப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினருக்கு கெட்டபெயரை உண்டாக்கவேண்டும் என்ற நோக்கில் திரு. மொபுட்டு அவர்களுக்கு சார்பானவர்கள் பலராலேயே இக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஓர் நேர்காணலின்போது திருவாளர்கள் சிசெக்கெடியும், இலியோவும் இக்குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளபோதிலும் இவர்களில் ஒருவரேனும் இன்றுவரை இவற்றுக்குப் பகிரங்கமாகத் தங்கள் மறுப்பைத் தெரிவிக்கவில்லை.

'நாம் இதுவரை ஆராய்ந்துபார்த்த விடயங்களிலிருந்து ஏதோ ஒருவகையில் எல்லோரும் இந்நிகழ்ச்சியில் தொடர்புள்ளவர்களாயிருந்திருக்கிறார்கள்' என திரு.மொபுட்டு அவர்களின் கொள்கைகளைத் தீவிரமாக கண்டிப்பவரும் சயர்நாட்டில் மனிதஉரிமையைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சங்கத்தின் தலைவருமான திரு. நகெவ்வா அற்றொண்டோகோ கூறியுள்ளார்.

கொங்கோலிய தேசிய இயக்கத்தை ஆரம்பித்தவரும் சிறந்த பேச்சாளரும், பண்புள்ள தலைவருமான திரு.லுமும்பா அவர்கள், கொங்கோ சுதந்திரம் பெற்றபோது அதன் முதலாவது பிரதமராக 1960ம் ஆண்டு யூனில் பதவியேற்றார்.

ஆயினும் சுகந்திரம்பெற்ற சில வாரங்களுக்குள் நாடு வீழ்ச்சியுறும் நிலையில் இருந்தது. திரு.லுமும்பா அவர்கள் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதுடன், அப்பொழுது கட்டங்கா (Katanga Province) என அழைக்கப்பட்ட மாகாணத்தில் தோன்றிய பிரிவினைவாத இயக்கத்தை அடக்குவதற்கு ஐக்கிய நாடுகள்சபையின் உதவியையும் நாடினார்.

ஆபிரிக்காவில் சோவியத் நாட்டின் செல்வாக்கு வளர்ச்சியுறுவதையிட்டுக் கவலைகொண்ட அமெரிக்க மேலாளர்களும் அதன் புலனாய்வுத்துறையும் காஸ்றோ (Castro) போன்ற இன்னொருவர் தோன்றுவதைத் தடுப்பதற்கு திரு.லுமும்பா அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என வெளிப்படையாகவே பேசிவந்தனர்.

திரு.லுமும்பா அவர்களுக்கும் கொங்கோவின் சனாதிபதியாகவிருந்த திரு.யோசப் கசவுபு (Joseph Kasavubu) அவர்களுக்கும் இடையே எழுந்த செயலுரிமைப் போட்டியில் ஒரு இக்கட்டான நிலை உருவாகியதால், திரு.லுமும்பா அவர்களால் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த கேணல் மொபுட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றி அரசியல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி ஒரு இராணுவ ஆட்சிக்குழுவின் தலைவராக சிறிது காலம் ஆட்சிபுரிந்தார்.

திரு.மொபுட்டு அவர்களால் திரு.லுமும்பா அவர்கள் முதலில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். தனக்கு சார்பானவர்கள் இருக்கின்ற இடமான வடக்குக்குத் தப்பிச் செல்ல திரு.லுமும்பா அவர்கள் முயன்ற போது அவர் கைதுசெய்யப்பட்டார். திரு. மொபுட்டு அவர்களினதும் திரு. கசவுபு

அவர்களினதும் உத்தரவுப்படி அவர் அவருடைய பரம எதிரியும், கட்டங்கா பிரிவினைவாதத்தலைவருமான திரு. மோயிஸ் சுமொபே )Moise Tshmobe) அவர்களின் தளத்திற்கு வானூர்தி மூலம் அனுப்பப்பட்டார் என அறியமுடிகின்றது. கட்டங்காவுக்கு கொண்டு செல்லப்பட்ட திரு.லுமும்பா அங்கு கொல்லப்பட்டார்.

இந்த விடயத்தில் திரு. சிசெகெடி அவர்களுக்கு தொடர்புண்டு என்ற குற்றச்சாட்டுக்கு அவர் ஒரு நேர்காணல்போது பதில் அளிக்க மறுத்ததுடன் திரு. லுமும்பா அவர்களின் கொலையைப் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுமுன் தான் விரைவில் தோன்றி பதில் அளிக்க விருப்பதாகக் கூறியுள்ளார்.

திரு.லுமும்பா அவர்களின் கைது ஆணையில் தான் கையொப்பமிட்டது போல் காட்டப்பட்ட போதும் உண்மையில் அக்கையொப்பம் தன்னுடையதில்லையெனவும் அது திரு. மொபுட்டு அவர்களால் போலியாக தயாரிக்கப்பட்டதெனவும் 70வயதான திரு.இலியோ அவர்கள் ஒரு நேர்காணலின் போது கூறியுள்ளார்.

இருந்தபோதிலும் 30 ஆண்டுகாலத்தின் பின் இந்த நிகழ்ச்சியை விசாரணைக்கு எடுத்ததையிட்டு தான் வரவேற்பதாக இவர் கூறியுள்ளார்.

''திரு.லுமும்பா அவர்களின் சாவைப்பற்றி நான் இதுவரை அறியாத பல விடயங்களை தேசிய மகாநாட்டில் அறிந்துகொண்டேன். என்னுடைய தலையில் இருந்த ஒரு பெரிய சுமை என்னிடமிருந்து இறக்கப்பட்டுள்ளது'' என மேலும் திரு.இலியோ அவர்கள் கூறியுள்ளார்.

# அரைத்த மாவையே அரைக்கின்றோம்!

*ராணி, 31-05-92*

**1578**-ம் ஆண்டு கேரளாவில் உள்ள கொல்லத்தில் ''தம்பிரான் வணக்கம்'' என்ற தமிழ் நூல் அச்சிடப்பட்டது. அதுதான் தமிழில் அச்சேறிய முதல் நூல் என்று சொல்லப்படுகிறது.

உண்மைதான்! சாதாரண உண்மை அல்ல; 40 ஆண்டு கால உண்மை!

அந்த நூல் 1951-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அன்று அதுதான் தமிழில் அச்சேறிய முதல் நூல் என்று சொல்லப்பட்டது.

அன்று அதுதான் உண்மை. ஆனால், இன்று அது சரியல்ல. ஏனென்றால், அதற்குப்பின் எவ்வளவோ புதிய உண்மைகள் வெளிப்பட்டுவிட்டன.

ஆனால், நாமோ 40 ஆண்டுக்கு முந்திய உண்மையைத் தான் இன்றும் சொல்லிக்கொண்டிருக்கின்றோம்! புதிய உண்மைகளை நம்மால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், பிறர் கண்டுபிடித்துச் சொல்லும் உண்மையையாவது படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

## பழைய வரலாறு

ஏடும் எழுத்தாணியுமாக இருந்த தமிழை முதன் முதல் அச்சேற்றியவர்கள் போர்த்துக்கீசியர் என்ற மேல்நாட்டவரே.

போர்த்துக்கீசிய மன்னர் அனுப்பிய வாசுகோடகாமா என்ற கப்பல் தலைவர், 1498-ம் ஆண்டு சேரநாட்டில் உள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். 1505 இல் கொச்சியும், 1510 இல் கோவாவும் போர்த்துக்கீசியரின் ஆட்சிக்குள் வந்தன. 1550 ல் திருச்சூரை அடுத்த அம்பலக் காட்டில் ஏசுவின் திருச் சபையை அமைத்தார்கள். கொச்சி முதல் தூத்துக்குடி வரை கடற்கரை ஓரமாக வாழ்ந்த மீனவர்களிடம் கிறித்துவின் நற் செய்தியைப் பரப்பினார்கள். அன்று கொச்சி மீனவர்களும் தமிழ் மொழியே பேசினார்கள்.

## முதல் நூல்

அவர்களின் பிரசாரத்துக்கு அச்சிட்ட நூற்கள் தேவைப் பட்டன. 1554-ல் போர்த்துக்கலில் உள்ள லிஸ்பன் நகரில் ''லூசே தமிழ் வினா- விடை'' என்ற நூலை அச்சிட்டார்கள். தமிழில் அச்சேறிய முதல் நூல் இதுதான். ஆனால், தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தவில்லை. ''அம்மா'' என்பதை 'AMMA' என்று ரோமன் எழுத்துக்களில் அச்சிட்டார்கள். 36 பக்கமுள்ள இந்நூலின் ஒரே ஒரு பிரதி மட்டும் இன்றும் லிஸ் பனில் ஒரு பழம் பொருளகத்தில் (மியூசியம்) இருக்கிறது.

தமிழ் அறிஞர் தனிநாயக அடிகள் லிஸ்பன் போயிருந்த பொழுது இந்நூலைப் பார்த்தார். இந்நூலை உலகுக்கு அறிமு கப் படுத்தியவரும் தனிநாயக அடிகளே.

இந்நூலைத் தமிழில் எழுத தூத்துக்குடியிலிருந்து 3 தமிழ் மீனவர்கள் லிஸ்பனுக்குப் போயிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகள் திருச்சபைப் பணியாற்றிய யோவாம் விலா ஏகாண்டே என்ற போர்த்துக்கீசியரின் மேற்பார்வையில் இந் நூல் அச்சிடப்பட்டது. இந்த விபரம் நூலின் முன்னுரையில், இருக்கிறது.

## முதல் அச்சகம்

போர்த்துக்கலில் இருந்து 1556-ம் ஆண்டு கோவாவுக்கு ஓர் அச்சகம் வந்தது. அதில் உடனடியாக துண்டு அறிக்கைகளும் சிற்றேடுகளும் அச்சிடப்பட்டன. துண்டு அறிக்கைகள் கோவில் வாசல்களில் ஒட்டப்பட்டன. 1556-ல் ''தத்துவம்'' என்ற போர்த்துக்கீசிய நூல் முதன் முதல் அங்கு அச்சிடப்பட்டது.

புனித சேவியர் என்ற திருத்தொண்டர் அப்பொழுது கோவாவில் இருந்தார். இவரது தொண்டு தூத்துக்குடிவரை

பரவியிருந்தது. தமிழ் மீனவர்களை கிறித்தவர் ஆக்கியவர் இவரே. இவருக்குத் தமிழ் பேசத் தெரியும். இவர் தமிழில வெளியீடுகள் வேண்டும் என்று விரும்பினார். இவரே தமிழில் எழுதிய ''தம்பிரான் வணக்கம்'' என்ற 4 பக்கமுள்ள சிற்றேடு 1557-ல் கோவாவில் அச்சிடப்பட்டது.

அப்பொழுது தமிழில் அச்செழுத்துக்கள் வரார்க்கப்படவில்லை. எனவே, லிஸ்பனில் போன்றே, ரோமன் எழுத்துக்களில் இந்த சிற்றேடு கோவாவில் அச்சிடப்பட்டது. அதனை தமிழ் மீனவர்களுக்கு திருத்தந்தையர் (பாதிரிமார்கள்) படித்துக்காட்டினார்கள். 1561 டிசம்பர் 4ம் தேதி லூயிசு என்ற திருத்தந்தை கோவாவிலிருந்து லிஸ்பனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், ''தமிழர்களின் சொந்த மொழியில் கோவாவில் அச்சிடப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' கொண்டு, அவர்களுக்குத் தமிழிலேயே படித்தும் பாடியும் காட்டப்பட்டன'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## இதுவே முதல் நூல்!

தமிழர்கள் தாங்களே படித்துக் கொள்ளும்படியாக இந்நூல் இல்லை. இக்குறையை உணர்ந்த தந்தையர், தமிழ் எழுத்துக்களை வார்க்கத்தொடங்கினார்கள். தமிழ் எழுத்துக்களைக் கொண்டு 1577-ம் ஆண்டு தமிழிலேயே ''தம்பிரான் வணக்கம்'' மீண்டும் அச்சிடப்பட்டது. தமிழ் எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல் இதுதான்! இந்தியமொழி ஒன்றில் அச்சான முதல் நூலும் இதுவே.

இந்நூலைத் தமிழில் எழுதியவர் ''அண்டிரிக்'' என்ற திருத்தந்தை. இவர் புனித சேவியரின் மாணவர். தமிழை முழுமையாகக்கற்ற முதல் ஐரோப்பியர் இவரே. சுவான் கொன்சால்வசு என்ற லிஸ்பானியர் இந்நூலுக்கான தமிழ் எழுத்துக்களை வார்த்துக் கொடுத்தார்.

''1575-ம் ஆண்டில் கோவா நகரில் கூடிய சேசு சபை மாநிலக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய வலிஞ்ஞானோ என்ற அடிகளார் தமிழ் மொழியில் கிறித்துவத் திருமறையின் அறிவுரைகளைப் படிப்பிக்கும் நூல் ஒன்றும் இல்லாது கண்டு, மிகவும் நொந்து அக்குறையைப் போக்குமாறு அண்டிரிக்குப் பாதிரியார் என்ற அடிகளாருக்கு உத்தரவிட்டார்'' என்று

தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ச. இராசமாணிக்கம் ''அடியார் வரலாறு'' என்ற நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

## தமிழர் உதவி

போர்த்துக்கலில் இருந்து கோவாவுக்கு வந்த அச்சகத்துடன், அச்சடிப்பதில் நன்கு பயிற்சி பெற்ற தமிழர் ஒருவரும் வந்திருந்தார். ஆனால், அவரது பெயர் முதலான விவரங்கள் வரலாறு ஏடுகளில் இடம்பெறாமலே போய்விட்டன. ''இந்தியாவில் அச்சும் பதிப்பும்'' என்ற நூலில் பி. எஸ். கேசவன் இந்த விவரத்தைத் தெரிவிக்கிறார்.

1554-ல் லிஸ்பனில் ''லூசே தமிழ் வினாவிடை'' என்ற தமிழ் நூல் அச்சாக உதவிய தூத்துக்குடித் தமிழராகத்தான் இவர் இருக்கவேண்டும் என்பதை நாம் எளிதாக ஊகித்து உணரமுடியும்.

கோவாவிலும் (பிறகுகொல்லத்திலும்)பெரோ லூயிசு என்பவரின் மேற்பார்வையில் இந்நூல் அச்சாயிற்று. இவர் தமிழ்ப் புலமை நிறைந்த ஒரு பிராமணர்! கிறித்தவ சமயத்தைத் தழுவிய முதல் பிராமணரும் இவரே!

1577இல் கோவாவில் அச்சான இந்தத் ''தம்பிரான் வணக்கம்'' நூலின் ஒரே ஒரு பிரதி 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரிசில் உள்ள சேசு சபையில் இருந்தது. அது ஜோசப் ஸ்காலிங்கர் என்ற நூல் சேகரிப்பவர் கைக்குப் போயிற்று. அவர் அதை லேடன் (ஆலந்து) பல்கலைக் கழகத்துக்கு வழங்கினார். 18- நூற்றாண்டுத் தொடக்கம் வரை அந்நூலகத்தில் இந்நூல் இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. அதன் பின் காணவில்லை.

லண்டனில் பிரிட்டீசு நூலகத்தில் துணை இயக்குநராக இருக்கும் (இப்பொழுதும் இருக்கிறார்) கிரகாம் ஷா என்ற இந்தியர் இந்த விவரங்களை ஆதாரங்களுடன் ''நூலகம்'' என்ற ஆங்கில இதழில் 1981 இல் எழுதியிருக்கிறார்.

## 2 ஆவது நூல்

1577-ல் கொல்லத்துக்கே ஓர் அச்சகம் வந்து சேர்ந்தது. அங்கு 1578-ல் மீண்டும் ''தம்பிரான் வணக்கம்'' அச்சிடப்பட்

டது. இது 16 பக்கங்களைக் கொண்டது. இது கோவாவில் 1577-ல் அச்சான ''தம்பிரான் வணக்க''த்தின் மறுபதிப்பாக இருக்கக்கூடும் என்று கிரகாம் ஷா கருதுகிறார்.

1557 இல் தான் எழுதிய "தம்பிரான் வணக்கம்'' நூலை புனித சேவியர் விரிவுபடுத்திக்கொடுக்க, அதை தந்தை அண்டிரிக் தமிழ்ப்படுத்தினார். தந்தை மனுவேல் என்ற தமிழர் அவருக்கு உறுதுணையாக இருந்தார். தந்தை பாரியா இதற்கான தமிழ் எழுத்துக்களை வார்த்துக் கொடுத்தார்.

இந்நூலின் ஒரே ஒரு பிரதி இப்பொழுது அமெரிக்காவில் ஆவர்டு பல்கலைக்கழக நூலகத்தில் இருக்கிறது. அவர்கள் 1951-ல் லண்டனில் ஓர் ஏலக் கடையில் இந்நூலை விலைக்கு வாங்கினார்கள்! தங்களின் நூலக இதழில் 1952-ல் 16 பக்க நூலையும் வெளியிட்டு, ஒரு கட்டுரை எழுதினார்கள். அதன் பின்தான் இந்நூல் உலகுக்குத் தெரியவந்தது.

தமிழ்ப் பேராசிரியர் ச இராசமாணிக்கம் 1963-ல்இந்நூலை ''வணக்கம்'' என்ற பெயரில் மீண்டும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

இந்நூலின் இறுதிப்பக்கத்தில் 1577-ல் கோவாவில் உண்டாக்கின எழுத்து, 1578-ல் கொல்லத்தில் உண்டாக்கின எழுத்து என்று எழுத்துக்கள் அனைத்தும் தொகுத்து அச்சிடப்பட்டிருப்பது மிகச் சிறப்பானது ஆகும். 1577-ல் கோவாவில் முதல் நூல் அச்சானதையும் இது உறுதிப்படுத்துகிறது.

எனவே—

1578-ல் கொல்லத்தில் அச்சான ''தம்பிரான் வணக்கம்'' தமிழில் அச்சான முதல் நூல் அல்ல. அது தமிழில் அச்சான 2-வது நூல். நமது பார்வைக்கு இன்று கிடைக்கும் முதல் தமிழ் அச்சு நூல் என்று வேண்டுமானால் அதைச்சொல்லலாம்!

1577-ல் கோவாவில் அச்சான ''தம்பிரான் வணக்கம்'' தான் தமிழில் அச்சான முதல் தமிழ் நூல். அது 200 ஆண்டு முன்வரை இருந்தது. இப்பொழுது எங்கே ஒளித்திருக்கிறதோ! தேடிக்கண்டுபிடிக்க வேண்டும்!!

## தேடுங்கள்;

தந்தை அண்டிரிக் எழுதி, 1586-ல் அச்சான ''அடியார் வரலாறு'' என்ற தமிழ் நூல் 1954-ல்தான் கண்டுபிடிக்கப்பட்டது. வாடிகன் நகரில் உள்ள போப் ஆண்டவரின் நூலகத்தில் இந்நூலை தனிநாயக அடிகள் கண்டு எடுத்தார்.

அதேபோல, தந்தை அண்டிரிக் எழுதி, 1580-ல் அச்சான ''பாவமன்னிப்பு'' என்ற 214 பக்க நூல், 1982-ம் ஆண்டில் தான் கண்டு எடுக்கப்பட்டது. லண்டனில் ஆச்சுபோர்டு பல் கலைக்கழக நூலகத்தில் வேறொரு நூலுடன் சேர்த்து ஒன் றாக ''பைண்டிங்'' செய்யப்பட்டிருந்த இந்நூலை, கிரகாம் ஷா கண்டு எடுத்தார்.

இதே போல, 1577-ல் கோவாவில் அச்சான, தமிழில் முதன் முதல் அச்சேறிய நூல், இந்திய மொழியில் முதன் முதல் அச்சுக்கண்ட நூல் ''தம்பிரான் வணக்க''மும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது!

---

''தேடுவீர், கண்டடைவீர்'' என்பது தேவனின் வாக்கு!

## முழுவதும் கேட்க...

முதல் திருடன்: அண்ணாச்சி! உங்களை எதற்காக ஜெயிலில் போட்டாங்க.

இரண்டாம் திருடன்: நாலு முழம் கயிறு தெருவுல கிடந்தது. அதை எடுத்தேன். அதுக்காக ஆறு மாதம் தீட்டிட்டாங்க

முதல் திருடன்: வெறும் கயிற்றை எடுத்ததுக்கா ஆறு மாதம். அநியாயமாக இருக்கே.

இரண்டாம் திருடன்- அதோட இன்னொரு முனையில் மாடு ஒன்று கட்டியிருந்தது.

# புலிகள் தாங்கள் நினைத்தபடி கடலில் நடமாடுகிறார்கள்.

(ஐலண்ட் - 28.06.92)

அண்மைக்காலங்களில் இலங்கைக் கடற்படையினர் கடலில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படைத் தாக்குதல்களுக்கும் அவர்களின் கடல் கண்ணிவெடிகள் மற்றும் கடற்புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப்புலிகள் பெரும் தொகையான கடல்கண்ணி வெடிகளை உற்பத்திசெய்து வடக்கில் படையினரின் அத்தியாவசியமான பொருட்களைக் கொண்டு வருவதற்கு உபயோகிக்கப்படும் பிரதானமான கடல்மார்க்க வழங்கல் பாதைகளில் விதைப்பார்களாயின் எதிர்காலத்தில் இக்கண்ணி வெடிகள் படையினருக்குப் பெரும் அச்சுறுத்தலைக் கொடுப்பதாகவிருக்கும். யொனி (Johnney) கண்ணிவெடியின் மறுவடிவமே கடலில் வைக்கப்படும் கொலின் (Colin) என அழைக்கப்படும் கண்ணிவெடியாகும்.

விடுதலைப்புலிகளின் ஆய்வு மற்றும் வளர்ச்சிப்பிரிவினால் இதுவரை உருவாக்கப்பட்ட அமுக்கத்தினால் வெடிக்கக்கூடிய கடல் கண்ணிவெடிகளில் இதுவே மிக ஆற்றல்வாய்ந்ததெதன 'களத்தில்' என்ற (Kalaththil) அவர்களின் வெளியீடு கூறுகின்றது. கடற்புலிகள் தனியான ஒரு பிரிவாக 1984ல் அமைக்கப் பட்டபோதிலும், புலிகளின் ஆய்வு மற்றும் வளர்ச்சிப்பிரிவு 1989 லேயே கடல் கண்ணிவெடிகளை உற்பத்திசெய்ய ஆரம் பித்தது. கடல் மேற்பரப்பில் மிதப்பதும் கப்பல்களை நெருங்கிய வுடன் வெடிக்கக்கூடியதுமான கண்ணி வெடிகளைப் பரிசோதனை மேற்கொண்டபின் கடல் நீர்ப்பரப்புக்கு கீழே வெடிக்கக்கூடிய கடற்கண்ணிவெடிகள் மிகுந்த ஆற்றல்வாய்ந்தவை என புலிகளின் ஆய்வு மற்றும் வளர்ச்சிப்பிரிவு கண்டுபிடித்துள்ளது.

கடலின் மேற்பரப்பிலிருந்து சில அடி தூரம் கீழே விதைக்கப்படுவதும், வேகமாகச் செல்லும் கலன் ஒன்றின் நீர் அமுக்கம் தாக்கும் பொழுது அத்திசையை நோக்கி வெடிக்கக்கூடியதுமான கண்ணிவெடியை இறுதியில் விடுதலைப்புலிகள் கண்டுபிடித்தனர். வல்வெட்டித்துறைக் கரைக்கு அப்பால் கடற்புலிகளால் 10.7.90ல் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கரும்புலித்தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மன்னாரைச் சேர்ந்த தளபதி கொலின்ஸ் நினைவாகவே இக்கண்ணிவெடிக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மலிவாகவும், சுலபமாகவும் உற்பத்திசெய்யக்கூடிய கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக புலிகளின் வெளியீடு கூறுகின்றது.

வடக்கே உள்ள படையினருக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களைக் கொண்டுவருவதற்கு உபயோகிக்கப்படும் பிரதானமான கடல்மார்க்கப் பாதைகளில் கண்ணிவெடிகளை விதைத்து வைப்பதே புலிகளின் நோக்கமாகும். 1984 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடற்பிரிவு பாரியமுறையில் மறுசீரமைக்கப்பட்டு ''விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்'' என்ற பெயருடன் அவர்களுக்கென தனித்துவமான சின்னத்தையும் கொண்டுள்ளது. திரு. சூசை அவர்களைச் சிறப்புத் தளபதியாகவும், திரு. கங்கை அமரன் அவர்களைத் தளபதியாகவும் இது கொண்டுள்ளது. கடலில் அதிரடித்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், கடல் கண்ணிவெடிகளை விதைப்பதற்கும் 300 க்கும் மேற்பட்ட புலிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தங்களுடைய முதலாவது சிறப்புக் கடல் அதிரடிப்படை அணி பூநகரிக்கு அப்பாலுள்ள சிறு தீவான மான் தீவு என்னுமிடத்தில் உள்ள இராணுவ தங்ககத்தை தாக்கி பல ஆயுதங்களைக் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் உண்மையிலேயே கடலில் படையினருக்கு பாரிய அளவில் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடியவர்களாகவிருக்கின்றார்கள். வடக்கிலுள்ள படையினருக்குத் தேவையான பொருட்கள் கடல்மூலம் கொண்டு செல்லப்படுவதாலும், தீபகற்பகத்தின் கரையோரத்தில் மூன்றில் இரண்டு பங்கு வடக்கு கிழக்கு ஆகிய பிரதேசத்தில் இருப்பதாலும் கடல்புலிகளின் நடவடிக்கை பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதாகவிருக்கின்றது.

ஆகையால், தற்போதைய நிலையில் கடலைப்பற்றியும் கடற்போரைப்பற்றியும் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள கருத்து என்ன என அறிவது அத்தியாவசியமானதாகின்றது.

'விடுதலைப்புலிகள்' என்ற பெயருடன் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் அவர்களின் உத்தியோகபூர்வமான ஏட்டில் கடற்புலிகளின் உள்நோக்கங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'தமிழராகிய நாம் ஒரு உண்மையை விளங்கிக் கொள்ளவேண்டும். எங்கள் நிலப்பரப்பை விடுவிக்க தமிழ்ஈழப் போராட்டம் முனைப் படைந்தபோது எங்களுடைய முன்னேற்றத்தை தடுப்பதற்கு, இலங்கை அரசாங்கம் தனது படைப்பலத்தை பிரயோகித்தது, தரையில் நடக்கும் சமரை வெற்றிகொள்வதற்கு கடலைப் பாவிக்கின்றது சிங்களப்படையினரால் 1987ல் ஒப்பரேசன் லிப ரேசன் (Operation Liberation) என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் 1990ல் முல்லைத்தீவு இராணுவ தங்ககத்தை நாம் கைப்பற்ற முயன்றபோதும், 1991ல் சிலாவத் துறை இராணுவ தங்ககத்தை நாம் கைப்பற்ற முயன்றபோதும், ஆணையிறவு சமரின்போதும் எங்களுடைய முயற்சிகளை முறியடிப்பதற்கு இலங்கை அரசாங்கம் கடலையே பாவித்தது' என இந்த ஏட்டில் விடுதலைப்புலிகள் கூறுகின்றார்கள்.

'தமிழ் ஈழத்தின் பாதுகாப்பு கடலிலேயே தங்கியுள்ளது என எங்கள் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். பகைவரின் கடலாதிக்கத்தை அழித்தாலே எங்களால் மீட்டெடுக்கப்பட்ட நிலப்பரப்பை பாதுகாப்பாக வைத்திருக்க முடிவதோடு தமிழ் ஈழத்தில் உள்ள பகைவர்களின் தளங்களையும் எமமால் அழிக்கமுடியும். செயற்திறன் வாய்ந்த கடற்படை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு பாரிய பொருளாதார வலிமை எங்களுக்கு தேவையாயுள்ளது' என மேலும் இந்த ஏடு கூறுகின்றது.

பொதுவாகத் தங்களுக்கு மரபு வழியாக வந்த அறிவைக் கொண்டும் பட்டறிவால் பெற்ற அறிவைக்கொண்டுமே 1987ம் ஆண்டுக்குமுன் கடலைப்பற்றிய அறிவை இவர்கள் பெற்றனர். கடல் பிரயாணி ஒருவருக்குத் தேவையான தகவல்கள் எல்லாவற்றையும் விரிவான முறையில் கொடுத்துதவும் கைநூல்கள், கடல் வரைபடங்கள் ஆகியவற்றை ஒரு சிலரே பயன்படுத்தி வந்தனர். இந்தியாவுக்கு செல்லக்கூடிய கடல் வழிகள் அடங்கிய வரைபடங்களை விளங்கிக் கொள்ளக்கூடிய அறிவு இல்லாமையுமே இதற்குக் காரணமாகும்.

மன்னார் - இராமநாதபுரம் கடற் பாதையில் மிகுந்த ஆபத்தை சந்திக்க வேண்டிவரும் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த பரந்த கடலில் நகரும் தீவுகள் என விவரிக்கத்தக்க ஆதாமின் பாலத்து திடை எனப்படும் மண்மேடுகளிலிருந்து மிதந்து வரும் மணற்காற்று மூடுபனிபோல காட்சி தரும்.

திருக்கோயிலின் கரையோரப் பகுதியில் சுழன்று வரும் அலைகளையும் இடையேயுள்ள கற்பாறைகளையும் தவிர்க்க வேண்டும் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

ஒருவர் முல்லைத்தீவை நோக்கிச் செல்ல வேண்டுமானால் வேதாரணிய வெளிச்சவீடு அவருக்கு வட கிழக்கே இருக்க வேண்டும் என்பதும் யாவரும் அறிந்ததே.

இதைத் தெரிந்துகொண்டால் போதுமானது. கொந்தளிக்கும் கடல்களில் துணிவுடன் பல்லாண்டு காலமாக பிரயாணம் செய்த தன் காரணமாகவே இப்படியான அறிவைப் பெற முடிந்தது. கடலைப்பற்றிய தகவல்களைக் கூறும் ஆவணம் எதுவும் எந்த ஒரு ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுவிடமும் இருக்கவில்லை.

கடலைப்பற்றிச் சிறப்பாக அறிந்து கொள்வது விடுதலைப் புலிகளுக்கு அத்தியாவசியமானதாகும். பின்வருவனவற்றை அடையாளம் கண்டுகொள்வதற்காகவே கடலைப்பற்றிய ஒழுங்குமுறையான அறிவைப் பெற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் ஆர்வமாக ஈடுபட்டுவருகின்றார்கள்.

அ) கண்ணிவெடிகளை வைக்கவேண்டிய கடல்பாதைகளை கண்டு கொள்ளல்.

ஆ) நீரிலும் நிலத்திலும் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய கரையோரப் பிரதேசங்களை அடையாளம் கண்டு கொள்ளல்.

இ) கடல் படையினரின் ஆற்றலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கடல் கொந்தளிப்பு காற்றோட்ட நீரோட்டங்களால் ஏற்படும் நெறி பிறழ்வு மற்றும் காற்றின் சீர் ஆகியவற்றைக் கண்டுகொள்ளல்.

தங்கள் கடல் பலத்தை விரைவாக அதிகரிக்க வேண்டும் என்ற அக்கறை காரணமாகவே விடுதலைப் புலிகள் வடக்குக் கரையையும் அதைச் சார்ந்த கடலைப்பற்றியும் விரிவாகவும் விபரமாகவும் ஆராய்ந்து வருகின்றார்கள். வடக்கிலுள்ள கடல்

களிலும் ஏரிகளிலும் கடல்படையினரின் நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய கடல்பாதைகள், கடல் கொந்தளிப்புகள் மற்றும் கரையோரங்களைப் பற்றிய அறிவு ஆகியவற்றை அறிந்து கொள்வதே இதன் நோக்கமாகும். (இந்த ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட சில விடயங்கள் விடுதலைப் புலிகளால் 1-5-92ம் திகதி வெளியிடப்பட்ட 'களத்தில்' என்ற அவர்களுடைய வேறு ஒரு வெளியீட்டில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.)

தெருக்களும், பாலங்களும், கட்டடங்களும் எப்படி தரைப் போருக்கு முக்கியமானவையோ அப்படியே கடல்போருக்கு, கடலின் ஆழமும், அதன் கொந்தளிப்பும், கரையோர அமைப்பும் பருவகாற்றும் முக்கியமானவை என அந்த வெளியீடு கூறுகின்றது.

இந்த ஆய்வு யாழ்ப்பாணத்திலுள்ள கடல்கள் மற்றும் கரையோரப் பகுதிகளை ஏழு பிரிவுகளாகப் பிரிக்கின்றது படையினருக்கு கடல்மூலம் தரை இறங்க இருக்கும் வாய்ப்பு அல்லது கேந்திரமாயுள்ள அவர்களுடைய தளங்களுக்கு கடல் மூலம் பொருள்களை வழங்கல் செய்தல் என்பனவற்றை ஒவ்வொரு பிரிவும் தொடர்புகொண்டு ஆராய்ந்து வருகின்றது.

பரந்த மணல் பிரதேசத்தைக் கொண்டதாலும், ஆழ்கடலைக் கொண்டதாலும், முல்லைத்தீவுக்கும் பருத்தித்துறையின் தெற்குப்பக்கத்திற்கும் இடையேயுள்ள கரையோரம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படக்கூடிய இடமாகவிருக்கின்றது.

பாரிய கலன்கள் கரைக்கு வரக்கூடியதாக, கடல் ஆழமாக இருந்தபோதிலும், சல்லிக்கட்டு அல்லது அடலி என்று கூறப்படும் கற்பாறைகள் கரையிலிருந்து 100 200 மீற்றர்களுக்கு அப்பால் கடலுக்குள் இருப்பதால், சிறு கலன்கூட கரைக்கு வரமுடியாமலுள்ளது. படையினர் கரைக்கு வந்து இறங்குவதற்கோ அல்லது புலிகளின் வள்ளங்களைத் தாக்குவதற்கோ முடியாததனால், பருத்தித்துறைக்கும் காரைநகருக்கும் இடையேயுள்ள கடற்கரைப்பிரதேசம் சிறு சிக்கல்களையே கொடுக்கக்கூடியதாகவிருக்கும் என விடுதலைப் புலிகளின் ஆய்வு தெரிவிக்கின்றது. ஒப்பரேசன் சீ லையன் (Operation Sea Lion) என்ற இராணுவ நடவடிக்கையின் போது குண்டு வீச்சிலிருந்து தப்பிக்கொண்ட விடுதலைப் புலிகளின் றாடர் (Radar) நிலையத்தை இதன் காரணமாகவே மாதகலில் புலிகள் அமைத்துள்ளனர். ஆனால் அண்மையில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட சேந்தான்குளம் இந்தக் கரையோரத் தொடருக்கு மாறுபட்டதாகும். இதற்குப் போகும் பாதையில்பாறைகள் இல்லை.

குடாநாட்டில் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய கரையோரப் பகுதியின் பாதுகாப்பை அதிகரிக்கும் அதே வேளையில், மன்னார் தீவுக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள தீவுகளின் தெற்குப்பக்க நுழை வாய்களுக்குமிடையேயுள்ள கடல்களில் தங்கள் கடல் நடவடிக் கைகளை அதிகரிக்கவும் விடுதலைப் புலிகள் முயன்றுவருகிறார் கள். வடக்கிலுள்ள இராணுவத்தின் போர்த்திட்டங்களை, கொலின் கண்ணிவெடிகள் மூலமும், கடல் புலிகளின் தாக்குதல் மூலமும் நீர்மூலமாக்குவதே இவர்களுடைய குறிக்கோளாகவுள் ளது.

இப்படியாக தமிழ் ஈழம் காண்பதற்கான போரில் இன்னொரு போர்முனை படிப்படியாக வடக்கின் கடல்களில் தோன்றிவரு கின்றது.

— ★ —

## அடையாளம் காணலாம்

*மூக்கில் இரத்தக் காயத்துடன் வந்த தன் மகனைப் பார்த்து, 'என்னடா நடந்தது ?' என்று கேட் டாள் அம்மா,*

*'ஒரு சின்னப் பையன் என் மூக்கைக் கடிச் சிட்டான் அம்மா' என்றான் மகன்.*

*'அவனை மீண்டும் பார்த்தால் உன்னால் அடையாளம் காட்ட முடியுமா? என்று கேட் டாள் தாய்.*

*கண்டிப்பாகக் காட்டுவேன். அவன் காது இப்ப என் சட்டைப் பையிலே தானே இருக்கு என்றான் மகன்.*

# குறைவிருத்தி நாடுகளில் இராணுவச் செலவினம் இலங்கை குறித்த ஒரு பரிசீலனை

—ஆரிய அபேசிங்க
*பணிப்பாளர் (விவசாய திட்டமிடல்)*
*காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு.*

அண்மையில் பாங்கொக்கில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய மாநாடு, குறைவிருத்தி நாடுகளின் பாதுகாப்புச் செலவினத்தினை தற்போதைய உலக சராசரி விகிதத்துக்கு - அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சத விகிதம் அளவுக்கு - குறைத்துவிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியிருந்தது. சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் மிக மோசமான காரணி மனிதச் சீரழிவாகுமென 1972இல் றொபர்ட் மக்னமாரா குறிப்பிட்டிருந்தார். அபிவிருத்திப் பொருளாதாரங்கள் குறித்த உலக வங்கியின் வருடாந்த மாநாடு 1991 ஏப்பிரல் மாதத்தில் வாஷிங்டனில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் சமர்ப்பித்த அறிக்கையொன்றில், உலக வங்கியின் முன்னாள் தலைவர் றொபர்ட் மக்னமாரா பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.: "நாடுகள் தமது பாதுகாப்புச் செலவினங்களை இந்த மட்டத்துக்குக் குறைத்து விடுவதன்மூலம் உருவாக்கிக்கொள்ளக்கூடியசேமிப்புகளை பொருளாதார - சமூக தேவைகளை நிறைவுசெய்துகொள்வதற்கு உபயோகித்துக்கொள்ள முடியும். நிபந்தனைகளை விதிப்பது என்பது சச்சரவுக்குரிய ஒரு காரணமாக இருந்து வந்த போதிலும், இன்று வறிய நாடுகள் மேற்கொண்டுவரும் அபரிமிதமான இராணுவச் செலவுகளின் வீண்விரயத்தை ஒழிப்பதற்கு இந்த நிபந்தனை விதிப்பது அவசியமாகியுள்ளது." சர்வதேச

நாணய நிதியத்தின் முகாமைப் பணிப்பாளர் 1991 ஜூலையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. வின் பொருளாதார, சமூக கவுன்சில் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது, அடுத்து வரும் வருடத்தில் உலகளாவிய சேமிப்புக்களை கட்டியெழுப்பவேண்டிய உடனடித் தேவையையும், முதலீட்டுக்கும் சேமிப்புக்களுக்கும் இடையில் நிலவிவரும் இடைவெளியை நிரப்பவேண்டிய அவசியத்தை தையும் வலியுறுத்திக் கூறியிருந்தார். உற்பத்திக்கு உதவாத செலவினங்களை கட்டுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார். இராணுவச் செலவினங்களும் இதில் அடங்கும்.

1960க்கும் 1988க்கும் இடையில் வறிய குறைவிருத்தி நாடுகளின் பாதுகாப்புச் செலவினம் மெய் அளவுகளில் நான்கு மடங்காக அதிகரித்திருந்தது. அதாவது அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி விகிதத்திலும் பார்க்க இரட்டிப்பானதாக இது இருந்தது. 1988இல் முடிவடைந்த தசாப்தத்தின்போது, குறைவிருத்தி நாடுகள் ஆயுதங்களை இறக்குமதி செய்வதில் 43,900 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவிட்டிருந்தன. இது ஆயுதங்களில் நடைபெற்ற உலக வர்த்தகத்தில் நான்கில் மூன்று பங்கிற்கும் மேற்பட்டதாக இருந்தது. 1984க்கும் 1987க்கும் இடையில் 180 கோடி கூட்டு சனத்தொகையைக் கொண்ட 22 நாடுகள், கல்வியிலும் சுகாதாரத்திலும் அவை முதலிடு செய்த தொகையைப் பார்க்கிலும் அதிக தொகையைப் பாதுகாப்புக்காகச் செலவிட்டுள்ளன. 1945க்குப் பின்னர் மூன்றாவது மண்டலத்தில் இடம்பெற்ற 125க்கு மேற்பட்ட யுத்தங்களில் சுமார் 40 கோடி பேர் மரணித்திருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. பிரதான ஆயுத ஏற்றுமதி நாடுகள் வருமாறு: ஐக்கிய சோவியத் சோசலிச குடியரசு (அமெரிக்க டொலர் 23,600 கோடி), ஐக்கிய அமெரிக்கா (அமெரிக்க டொலர் 14,900 கோடி), பிரான்ஸ் (அமெரிக்க டொலர் 4,300 கோடி) ஐக்கிய இராச்சியம் (அமெரிக்க டொலர் 2,300 கோடி), ஜேர்மனி (அமெரிக்க டொலர் 1·400 கோடி), போலந்து (அமெரிக்க டொலர் 1·300 கோடி) இத்தாலி (அமெரிக்க டொலர் 1,100 கோடி), சுவிற்சர்லாந்து அமெரிக்க டொலர் 500 கோடி) 1969க்கும் 1988க்கும் இடையில் மூன்றாவது மண்டலத்திலிருந்த பிரதான ஆயுத இறக்குமதி நாடுகள் வருமாறு: ஈராக் (அமெரிக்க டொலர் 6·110 கோடி) சவுதி அரேபியா (அமெரிக்க டொலர் 3·720 கோடி), வியட்னாம் (அமெரிக்க டொலர் 2·900 மோடி), சிரியா (அமெரிக்க டொலர் 2,290 கோடி), லிபியா (அமெரிக்க டொலர் 2,660 கோடி), இந்தியா அமெரிக்க டொலர் 2,170 கோடி), கியுபா அமெரிக்க டொலர் 1·530 கோடி), எகிப்து (அமெரிக்க டொலர் 1,580

கோடி). அங்கோலா (அமெரிக்க டொலர் 1,130 கோடி), ஆப் கானிஸ்தான் (அமெரிக்க டொலர் 1·020 கோடி) அல்ஜீரியா அமெ ரிக்க டொலர் 980 கோடி), எதியோப்பியா (அமெரிக்க டொலர் 930 கோடி), தாய்வான் (அமெரிக்க டொலர் 810 கோடி), தென் கொரியா (அமெரிக்க டொலர் 760 கோடி), துருக்கி அமெரிக்க டொலர் 710 கோடி), ஜோர்தான் (அமெரிக்க டொலர் 620 கோடி), கிரீஸ் அமெரிக்க டொலர் 510 கோடி), பாகிஸ்தான் (அமெரிக்க டொலர் 2,300 கோடி) தென்யேமன் அமெரிக்க டொலர் 490 கோடி), (ஆதாரம்: உலக இராணுவ மற்றும் சமூக செலவினம். ருத்லிகர் செவார்ட், நியுயோர்க் 1991)

இதே ஆய்வின்படி, 1991ஆம் ஆண்டில் உலக ஆயுத வர்த்தகம் (1987இன் டொலர் விலைகளில்) 88,000 கோடி அமெரிக்க டொலர் களாக இருந்து வந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. உல கின் நிரந்தர இராணுவப் படையில் 2 கோடியே 60இலட்சம் பேரும் ரிசேவ் படையில் 4 கோடிப் பேரும் உள்ளனர். மேலும் உலகெங் கிலும் 51,000 அணுவாயுதக் கிடங்குகள் உள்ளன. வளர்முக குறைவிருத்தி நாடுகளின் மொத்த இராணுவ செலவினம் 1988ல் 17,000 கோடி அமெரிக்க டெலர்களாக இருந்தது. இது அந்நாடு களின் கூட்டு உள்நாட்டு உற்பத்தியின் நான்கில் மூன்று பங்கா கும். சமீப காலம் வரையில் பல்வேறு குறைவிருத்தி நாடுகளி லும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருந்த சர்வாதிகாரத் தலைவர் கள் அழிவுகரமான சிறு யுத்தங்களில் செலவிட்டுவந்த பேரழிவி லான இராணுவச் செலவினம் வாழ்க்கையின் துரதிர்ஷ்ட வச மான ஓர் உண்மை என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந் தது இந்த எதேச்சாதிகாரத் தலைவர்கள் தமது சொந்த மக்க ளுக்கெதிரான உள்நாட்டுப் போர்களில் கண்மூடித்தனமாக ஈடு பட்டு வந்தனர். கெடுபிடியுத்தப் பகைமைநிலை, இந்தக்குறைவிருத்தி நாடுகளுக்கு, மலிவான ஆயுதங்களை கொள்வனவு செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பான ஒரு சூழ்நிலையை வழங்கியிருந் தது. இப்பொழுது இரண்டு முக்கியமான காரணங்களின் நிமித் தம் இந்த நிலைமை மாற்றமடைந்து வருகின்றது.

அ. சோவியத் யூனியனின் வீழ்ச்சியும் அது கெடுபிடி யுத்தத் தத்தின் முடிவினை எடுத்துவந்ததும்:

## இராணுவ செலவினம் 1990

| நாடு | அ. டொலர் 1985இன் விலைகளில் | மொ. உ. உ. /மொ. கே. உ. யில் வீதம் |
| --- | --- | --- |
| வடகொரியா | 5010 | 8·6 |
| பாகிஸ்தான் | 2800 | 7·2 |
| பர்மா | 200 | 6·1 |
| புருணை | 210 | 6·0 |
| இலங்கை | 360 | 5·9 |
| தாய்வான் | 5300 | 5·4 |
| சிங்கப்பூர் | 1310 | 5·1 |
| தென்கொரியா | 6640 | 4·4 |
| மலேசியா | 1570 | 3·8 |
| இந்தியா | 8510 | 3·2 |
| தாய்லாந்து | 880 | 2·6 |
| பிலிப்பைன்ஸ் | 900 | 2·1 |
| சீனா | 5690 | 1·7 |
| பங்களாதேஷ் | 250 | 1·5 |
| இந்தோனேஷியா | 1650 | 1·5 |

ஆதாரம்: கேந்திர கற்கைகளுக்கான சர்வதேச நிறுவனம்

## குடித்தொகையில் ஒவ்வொரு 1000 பேருக்கான ஆயுதப்படையினர் அளவு — 1989

| | |
| --- | --- |
| ஆப்கானிஸ்தான் | 3·7 |
| பங்களாதேஷ் | 0·9 |
| பாகிஸ்தான் | 4·6 |
| இலங்கை | 1·3 |
| பர்மா | 5·6 |
| கம்போடியா | 6·2 |
| இந்தோனேஷியா | 1·6 |
| வடகொரியா | 49·6 |
| தெனகொரியா | 17·4 |
| தாய்வான் | 18·3 |
| லாவோஸ் | 13·8 |
| தாய்லாந்து | 5·2 |
| வியட்னாம் | 16·0 |

| | |
|---|---|
| பிஜி | 6·8 |
| இந்தியா | 1·5 |
| நேபாளம் | 1·9 |
| பாபுவா நியுகினியா | 1·0 |
| புருணை | 15·5 |
| சீனா | 2·8 |
| மலேசியா | 7·7 |
| மங்கோலியா | 10·2 |
| பிலிப்பைன்ஸ் | 1·8 |
| சிங்கப்பூர் | 20·9 |

ஆ. உலகளாவிய ரீதியில் காணப்படும் மூலதனப் பற்றாக்குறை.

வளைகுடாப் போரினால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களைச் சீர் செய்தல், சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் இடம்பெற்றுவரும் பொருளாதார சீர்திருத்தங்களை நிதிப்படுத்துதல், உலக பொருளாதாரத்துக்குள் முன்னைய சோவியத் யூனியனின் பிரவேசத்தினை எளிதாக்குதல் என்பன உலக பொருளாதாரத்துக்கு 10,000 கோடி அமெரிக்க டொலர் செலவொன்றினை எடுத்துவரும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையிலேயே, கெடுபிடி யுத்தத்தின் முடிவில் கிடைக்கும் சமாதான அனுகூலத்தினை குறைவிருத்தி நாடுகள் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டுமென உலக வங்கி வலியுறுத்தியுள்ளது. வளர்முக நாடுகளுக்கான நிதி உதவிகளை வழங்கும் சுதந்திரமான ஒரு குழு, கடன்களையும் உதவிக் கொடைகளையும் பகிர்ந்தளிக்கும்பொழுது, தமது மொத்த தேசிய உற்பத்தியில் பாதுகாப்புக்கென 2 சதவீதத்துக்கும் குறைவான தொகையை செலவிட்டுவரும் நாடுகள் மீது விஷேச கவனம் செலுத்தப்படுதல் வேண்டுமென சிபார்சு செய்துள்ளது.. ஹெல்முட் ஸ்மித்தின் தலைமையின் கீழ் உள்ள இந்தக் குழுவில், நைஜீரியா, பெரு, கனடா, தென்கொரியா போன்ற நாடுகளின் முன்னாள் அரச தலைவர்களும் அடங்கியுள்ளனர் இத்தகைய யோசனைகள் பல வளர்முக நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. பாதுகாப்பு என்பது பிரட்டன்வூட்ஸ் நிறுவனங்களின் வேலையல்ல என்று இவர்கள் வாதிட்டு வருகிறார்கள். குறைவிருத்தி நாடுகளுக்கு இடமாற்றம் செய்யப்படும் மூலவளங்களின் அளவினைக் குறைத்துவிடுவதற்கு இந்நிறுவனங்கள் ஏற்கனவே சுற்றுச் சூழல் மற்றும் மனித உரிமைகள் என்ற விடயத்தை ஒரு சாக்காக வைத்துக்கொண்டுள்ளன என இவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

தென்னாசிய நாடுகளின் பாதுகாப்புச் செலவினம் அதிகரித்து வருவதற்கான காரணம் பின்வருமாறு:

அ. அயல் நாடுகளுடன் இடம்பெற்றுவரும் போட்டி.

ஆ. பழம்பாணியிலான ஆயுதங்களுக்குப் பதிலாக புதியவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை.

இ. பிராந்திய சச்சரவுகளின் போது இராணுவ வலிமையை வெளிப்படுத்திக் காட்டவேண்டிய தேவை:

ஈ. ஆசியா மீதான ஐக்கிய அமெரிக்கப் பபாதுகாப்புக் குடை சரிந்துகொண்டிருக்கும் நிலை.

ஆசிய நாடுகள் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 3·1 சதவீதத்தினை பாதுகாப்பின்மீது செலவிட்டு வருகின்றன. இந்தச் செலவு தொடர்ச்சியாக ஏறுமுகமாகவே இருந்துகொண்டிருககிறது. ஆசியா ஆயுதங்களுக்கான மிகப்பெரிய சந்தையாகவும், துரிதகதியில் வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு சந்தையாகவும் இருந்து வருகிறது. 1980 களிலிருந்து சராசரி வருடாந்த அதிகரிப்பு சுமார் 4 சதவீதமாக இருந்து வந்துள்ளது. இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக இருந்து வருவதுடன், தனது அயல்நாடுகளை எவ்விதத் தயக்கமுமின்றி அது பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. பாகிஸ்தான், இலங்கை, நேபாளம்; பூட்டான், பங்களாதேஷ், ஆகிய நாடுகளுடன் அது பிரச்சினைகளைக் கொண்டுள்ளது. இப்பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளும் தமது பாதுகாப்புச் செலவினத்தை, மொத்த தேசிய உற்பத்தியின் 4·5 சதவீதமளவுக்கு கட்டுப்படுத்திக்கொள்ளும் பட்சத்தில், பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகள் இந்தியாவின் மேலாதிக்கத்துக்கு உட்படுத்தப்படக்கூடும். பாகிஸ்தான் இதற்கான ஓர் உதாரணமாக அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. பாகிஸ்தானின் வெளிக்கடன் 2,000 கோடி அமெரிக்க டொலர்களாகும். எனினும், அந்நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 1988இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6·9 சதவீதமாக இருந்ததுடன் இது 1990இல் 7·2 சதவீதம் வரையில் அதிகரித்துச் சென்றுள்ளது. கல்வி, சுகாதாரம் என்பவற்றின்மீது செய்யப்படும் செலவுகளிலும் பார்க்க சுமார் 3 மடங்கு அதிகம் செலவு பாதுகாப்பின்மீது செய்யப்பட்டு வருகின்றது. இந்தியாவுடனான இந்த ஆயுதப் போட்டியின் விளைவாக, பாகிஸ்தான், அரசாங்கத்தின் ஏனைய பல முக்கியமான பணிகளைப் புறக்கணித்து வந்துள்ளது. அந்நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 1991இல் 320 கோடி

22456CE



அமெரிக்க டொலர் வரையில் அதிகரித்துச் செல்லவிருக்கின்றது. இது அரசாங்க வருவாயில் 27 சதவீதமாகும். அத்துடன் கடன் சேவைக் கொடுப்பனவுகள் வரவு செலவுத் திட்டத்தின் 43 சதவீதமாக இருந்துவருகின்றன. இந்தியா மிதமிஞ்சிய அரசாங்கச் செலவுகளைக் குறைத்துவிடும் முயற்சியின் ஒரு பாகமாக அதன் பாதுகாப்புச் செலவினத்தை 1991 இல் முன்னைய ஆண்டின் 1,575 கோடி அமெரிக்க டொலரிலிருந்து 630 கோடி அமெரிக்க டொலர்களாகக் குறைத்துக்கொண்டுள்ளது.

குறைவிருத்தி நாடுகளுக்கு உதவி வழங்கும்பொழுது, பாதுகாப்புச் செலவினத்தை கவனத்திலெடுக்கப்போவதாக ஜப்பான் ஏற்கனவே அறிவித்துள்ளது. வாஷிங்டனும்கூட இத்தகைய அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றி வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5·5 சதவீதத்தினைப் பாதுகாப்புக்காக செலவிட்டு வருகிறது. 1990இல் ஜப்பான், தென்னாசிய பிராந்தியத்துக்கு உதவிகள் வழங்கும் வகையில் 550 கோடி அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது. இதே வேளையில் இப்பிராந்தியத்துக்கென உலக வங்கி பகிர்ந்தளித்த தொகை 370 கோடி அமெரிக்க டொலர்களாகும். சீனா அதன் பாதுகாப்புச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1·7 சதவீதம் மட்டுமே என்று கூறிவருகின்றது. எனினும் ஆயுதங்கள் மீதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகளை இது கவனத்தில் எடுக்கவில்லை. ஆப்கானிஸ்தான், பர்மா வட-கொரியா, வியட்னாம் போன்ற நாடுகள் தமது பாதுகாப்புச் செலவினம் தொடர்பான விபரங்களை முற்றாக வெளிப்படுத்துவதில்லை.

## மொத்த அரச செலவில்% ent

| வருடம் | கல்வி | சுகாதாரம் |
|---|---|---|
| 1978 | 4.8 வீதம் | 3.7 வீதம் |
| 1986 | 5.1 வீதம் | 3.6 வீதம் |
| 1987 | 5.1 வீதம் | 3.3 வீதம் |
| 1988 | 4.5 வீதம் | 5.7 வீதம் |
| 1989 | — | 6.1 வீதம் |

வடகொரியா, பர்மா, பாகிஸ்தான், இலங்கை, தாய்வான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பாதுகாப்புச் செலவினம் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள

# தமிழ் உணர்வு

ஆடாமயிலாய் அசையா இளங்கொடியாய்
ஓடா நதியாய் ஒரு புதிராய் - நாடெல்லாம்
வீசாத தென்றலாய் வீசும் தமிழ்ப்பெருமை
பேசாத வாய் பிணத்தின் வாய்!

புறமும் அகப்பாட்டும் காப்பியனால் பூத்த
இறவா இலக்கணத்தின் ஏடும் - குறள்மொழியும்
ஆர்க்கும் சிலம்பின் அழகு தமிழ் நடையும்
பார்க்காத கண் பாவக் கண்!

கத்து கடல்பறித்தும் கல்லாதார் தீவைத்தும்
குத்து வடமொழியின் கூர்பட்டும் - இத்தனைக்கும்
வாடாத செந்தமிழின் வரலாறு கேட்டபின்
ஆடாத கால் ஆனைக்கால்!

வானம் அளவு வளர்ந்து மொழிக்கெல்லாம்
தானம் கொடுத்த தமிழேட்டில் - ஈனம்
படைக்க வந்தாரா? அவர் பல்லை ஓங்கி
உடைக்காத கை உலக்கை!

ஆளிருந்தால் என்ன? அழகிருந்தாலும் என்ன?
நீள் விழியார் நெஞ்சில் நிறைந்தென்ன? - கேள்தோழா
வையம் புகழும் தமிழ்க்கவிதை என் வாழ்வில்
செய்யாத நாள் செத்த நாள்!

**காசி ஆனந்தன்**
*(உயிர் தமிழுக்கு)*

## இலங்கையில் பாதுகாப்புச் செலவினம்

| வருடம் | பாதுகாப்புச் செலவு ரூபா 100 கோடி | மொ. உ. உ. ரூ. 100 கோடி | மொ. உ, உ. வீதம் | மொத்த அரசாங்கச் செலவு ரூ. 100 கோடி | அரசாங்கச் செலவினத்தில் வீதம் |
|---|---|---|---|---|---|
| 1982 | 1·1 | 94·6 | 1·16 | 37·9 | 2.90 |
| 1983 | 1·7 | 114 | 1·49 | 46·5 | 3·65 |
| 1984 | 2·3 | 140 | 1·64 | 53·6 | 4·29 |
| 1985 | 5·5 | 148 | 3·72 | 64·7 | 8·50 |
| 1986 | 5·8 | 164 | 3·54 | 69·7 | 8·32 |
| 1987 | 10.6 | 178 | 5·95 | 72·2 | 14·68 |
| 1988 | 10·1 | 204 | 4·95 | 88·9 | 11·36 |
| 1989 | 8·9 | 228 | 3·90 | 94·5 | 9·42 |
| 1990 | 10·29 | 290 | 3·54 | 115·1 | 8·94 |
| 1991 | 16·7 | 304 | 5·49 | 135·0 | 12·37 |
| 1992 | 15·3 | — | 5·7 (மதிப்பீடு) | — | 20·0 (தோராயமாக) |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

நிர்ணய இலக்குகளைத் தாண்டிச் சென்றுள்ளன என்று லண்டனில் அமைந்துள்ள கேந்திர கற்கைகளுக்கான சர்வதேச நிறுவனம் கூறுகிறது. ஆப்கானிஸ்தான், கம்போடியா, லாவோஸ், வியட்நாம் போன்ற நாடுகளும் 4·5 சதவீத எல்லையை தாண்டிச் சென்றுள்ளன. பல ஆசிய நாடுகள் இராணுவச் செலவினத்தை ஒரு பொருளாதார அபிவிருத்தி வடிவம் என பொதுவாக கருதி வருகின்றன. சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இராணுவத்தினால் பாதைகள் மற்றும் சமூகப் பொதுக்கட்டமைப்பு வசதிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவை இராணுவ வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதில்லை பல ஆசிய நாடுகள் தமது பாதுகாப்புச் செலவினம் தொடர்பான தகவல்களைப் பெரும்பாலும் மறைத்து வருகின்றன. தாய்லாந்தில் 1991 இல் பாதுகாப்புச் செலவினத்தில் 13.5 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அந்நாடு அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் 15 சதவீதத்தை பாதுகாப்புக்காக இவ்வாண்டில் செலவிட்டுள்ளது. சீனா, பர்மா, பாகிஸ்தான், தாய்வான், தென் கொரியா போன்ற நாடுகளும் இதே விதத்தில் செயற்பட்டு வருகின்றன. 1989—90 காலத்தில் பர்மாவின் பாதுகாப்பு வரவு செலவுத் திட்டம் 106 கோடி அமெரிக்கடொலர்களாக இருந்தது. இது மொத்த அரசாங்க வருவாயில் மூன்றில் ஒன்றிலிருந்து அரைவாசிப் பகுதிவரை இருந்தது. இந்தியாவிலும் கூட, பாதுகாப்புத் துறை அதிகாரிகள், இராணுவத் தளபாடங்களின் கொள்வனவுக்காக மேலதிக நிதிகளைக்கோரி வருகின்றார்கள். இந்தியா உலகின் மூன்றாவது மிகப்பெரிய ஆயுத இறக்குமதி நாடாக இருந்து வருகின்றது. சிங்கப்பூர் 1970 கள் தொடக்கம் பாதுகாப்புக்காக அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை செலவிட்டு வந்துள்ளது. 1990 ல் சிங்கப்பூரின் இராணுவச் செலவினம் 180 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. பிலிப்பைன்ஸும் பாரிய அளவில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து கொண்டிருக்கிறது. ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகள் 1980 களில் பாதுகாப்புக்கென பெருமளவில் செலவுகளைச் செய்து வந்துள்ளன. கிழக்கு ஆசியாவின் ராஜநாகங்கள் என்று அழைக்கப்படும் நாடுகள் இராணுவச்செலவினத்துடன் சேர்ந்து உலக சராசரியிலும் பார்க்க உயர்ந்த அளவிலான துரித பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளன. இந்த நாடுகளின் அரசாங்கங்கள், இராணுவசேவையினை, எதிர்கால உழைப்பாளர்களிடையே ஒழுக்கத்தினையும் தேசபக்தியையும் விதைத்துவிடக்கூடிய ஓர் உபயோகமுள்ள வழி முறையாகக் கருதி வருகின்றன. தென்கொரியாவும் சிங்கப்பூரும் தமது சொந்

தப் பாதுகாப்புக் கைத்தொழில்களை இப்பொழுது ஸ்தாபித்துக் கொண்டுள்ளன.

பெரும்பாலான குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரையில், இராணுவ நடவடிக்கையிலிருந்து கிட்டும் அனுகூலம் அதற்காகும் செலவினைவிட எவ்வளவோ குறைவானதாகவே உள்ளது. குறைவிருத்தி நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்களில் சுமார் அரைவாசிப்பகுதி படையினருக்கான சம்பளங்களாகவே செல்கிறது. இதனை ஒரு வருமான மீள் பகிர்வு நடவடிக்கையாக ஏன் கருதக்கூடாது என இந்தோனேஷிய இராணுவம் வாதிட்டு வருகின்றது. ஆனால், இதே பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு வேறு பல வழிமுறைகள் உள்ளன. இந்நாடுகளின் மிகவும் அருமையான வெளிநாட்டு மூலவளங்கள் பொருளாதார உற்பத்திக்கு உதவாத முறையில் ஆயுதக் கொள்வனவுகளுக்கென செலவிடப்பட்டு வருகின்றன.

இலங்கை 1971ன் கிளர்ச்சி வரையில், பல தசாப்தகாலமாக பாதுகாப்புநோக்கத்துக்கென ஒரு சிறுதொகையையே செலவிட்டு வந்தது. அநேகமாக, நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதம் தாங்கிய தீவிரவாத இயக்கங்கள் வளர்ச்சியடையும் வரையில் இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் மிகக் குறைந்த அளவிலேயே இடம்பெற்று வந்தது. கடந்த இரு தசாப்த காலத்தில் நாட்டின் பாதுகாப்புச் செலவினம் அதிகரித்துக் கொண்டு வந்துள்ளது. இலங்கையில் பாதுகாப்புச் செலவு தொடர்பான தரவுகளை சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றுக்கான செலவுத் தரவுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது கிடைக்கும் சித்திரம் கலக்கமூட்டும் ஒன்றாகவே உள்ளது.

87031

# ஜப்பானின் தலைப்பட்டினமான ரோக்கியோ ஒரு நாள் தனது தகுதியை இழக்கவேண்டி நேரிடும்

—மெயின்றோல்வ் எல்பர்ஸ்— (ஐலண்ட் 3-7-92)

ஜப்பான் நாட்டின் தலைநகரமான ரோக்கியோவின் காலம் குறுகிக் கொண்டே வருகின்றது.

இடவசதியற்றதும் மக்கள் தொகை பெருகியதுமான இந்தப் பட்டினம் சீரழிந்து போவதற்கு முன்பு பிறிதொரு இடத்தில் புதிய தலைப்பட்டினம் ஒன்றை உருவாக்குவது ஒன்றே வழி என்பதில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன.

பட்டின சீரமைப்புத் திட்டமிடல் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சு பாராளுமன்றக் கட்டடத்தையும், அரச பணிமனைகளையும் ரோக்கியோவிலிருந்து 60 கிலோமீற்றர் தூரத்துக்கப்பால் மீள அமைக்கவேண்டுமென்று ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. இப்படி ஒரு பட்டினத்தைப் புதிதாக அமைப்பதாயின் அதற்கு 110 பில்லியன் டாலர்கள் தேவைப்படும் என நிபுணர்கள் கணிப்பிடுகின்றனர்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் 600,000 மக்களுக்கு வேலைவாய்ப்பும், வீட்டுவசதிகளும் அளிக்கக்கூடிய ஒரு புதியபட்டினம் உருவாகி, இந்த நூற்றாண்டு முடிவுக்குள் இயங்கத் தொடங்கிவிடும்,

பிரேசிலின் தலைப்பட்டினமான றியோ டி ஜெனறோவிற்குப் பதிலாகக் காட்டுப் பிரதேசமாக இருந்த பிறசிலியா ( Brasilia ) வைப் புதுப்பித்துப் புதிய தலைப்பட்டினம் ஒன்றை அமைத்ததை தொடர்ந்து, ஜப்பானிலும் ஒரு புதிய தலைப்பட்டினம் அமைக் கப்படவேண்டுமென்ற எண்ணம் 1960ம் ஆண்டுக்கு முன்னரே தோன்றலாயிற்று.

கடந்த 124 ஆண்டுகளாக ஜப்பானின் தலைநகராக இருந் துவரும் ரோக்கியோ பட்டினத்துக்கு கொடுக்கப்பட்டுவரும் தாக் கங்களை நிபுணர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளனர்.

முன்னைய திட்டத்தின்படி ரோக்கியோவுக்குப் பதிலாக நாகோயா ( Nagoya ) அல்லது ஒசாகா ( Osaka ) வைக் கட்டி யெழுப்பி ரோக்கியோவின் நடவடிக்கைகளை இந்த இரண்டி லொரு பட்டினத்தில் நடத்துவதாக இருந்தது. பியூஜி( Fuji ) மலையடிவாரத்தில் புதியதலைப்பட்டினத்தை கட்டியெழுப்பலாம் எனத் திட்டமிருந்தாலும் அது பின்னர் கைவிடப்பட்டது.

ரோக்கியோவுக்குள்ள தாக்கங்கள் அதிகளவிலானவை. இந்தப் பட்டினத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 30 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். ஜப்பானின் நிலப்பரப்பில் 3.6 சதவீத மான நிலப்பரப்பான ரோக்கியோவில் ஜப்பானின் சனத்தொகை யில் காற்பங்கினர் வாழ்ந்துவருகின்றனர்.

ஜப்பானியப் பேரரசரின் அரண்மனை ரோக்கியோவில் அமைந்திருக்கின்றது. அநேகமாக எல்லாத் தொழில் நிறுவனங் களின் தலைமையகங்களும் இங்கேயுள்ளன, அல்லது இங்கே யுள்ள அமைச்சுக்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத் கூடிய வகையில் அவர்களது பெரியகிளை செயலகங்கள் இங் குள்ளன.

அதிகபட்ச வேதனங்களைக் கொடுக்கக்கூடிய வேலை வாய்ப்புக்களை அளிக்கும் 90 சதவீதமான ஆராய்ச்சி நிலையங் கள் 40 சதவீதமான பல்கலைக்கழகங்கள், பங்குச் சந்தை, ஜப் பானின் நடுவண் வங்கி ஆகியன ரோக்கியோவில் அமைந்திருக் கின்றன.

எல்லாப் பண்பாடுகளையும் பொழுதுபோக்குக்கான சகல வசதிகளையும் உள்ளடக்கும் ரோக்கியோப் பட்டினம் ஆசியா வின் அனைத்துலகப் பட்டினமாகத் திகழ்கின்றது.

ரோக்கியோ பட்டினம் அமைந்துள்ள கன்ரோ (Kanto) சமவெளி மக்களைக் காந்தம் போன்று இழுக்கின்றது. ஒப்பீட்டு அடிப்படையில் வாழ்க்கைத் தரம் இங்கே உயர்ந்திருக்கின்ற போதிலும், இது மக்களின் வாழ்க்கை நிலையை வீழ்ச்சியடையச் செய்கின்றது.

இந்தப் பட்டினத்தைச் சுற்றிச் சிறு, சிறு பட்டினங்கள் தோன்றியுள்ளபோதிலும், அப்பட்டினங்கள் நடுவிலும் தொழிற் பணிமனைக் கட்டடங்களுக்கே கூடிய இடவசதி அளிக்கப்படுகின்றது.

நெருக்கமான பயணிகளை ஏற்றிச் செல்லும் கணனிகளால் இயங்கும் புகைவண்டிகளில் தங்கள் தொழிலகங்களுக்குச் செல்வதற்கு மக்கள் இரண்டு மணித்தியால நேரத்தைக் கழிப்பது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகும்.

இடவசதி போதாமையால் சராசரி நான்குபேர்களைக் கொண்ட குடும்பம் 40—60 சதுரமீற்றர் பரப்புள்ள இடத்திலேயே தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அடிக்கடி ஏற்படுகின்ற போக்குவரத்துத் தடைகளும், வாகனங்களை நிறுத்துவதற்குப் போதிய இடவசதி இல்லாததும் ரோக்கியோ பற்றிய கவலையை அதிகரிக்கச் செய்கின்றது.

இந்தப்பட்டினத்தில் நாளொன்றுக்கு 17000 தொன் குப்பை கூழங்களை அகற்றவேண்டியுள்ளது. இக்குப்பை கூழங்கள் மக்கள் செறிந்துவாழும் இடங்களில் வைத்து எரிக்கப்பட்டோ அல்லது கடலிலிருந்து நிலத்தை உருவாக்குவதற்காக கடற்கரை ஓரங்களில் கொட்டப்பட்டோ வருகின்றது.

மக்களுக்குத் தேவையான மின்சாரவசதிகள், நீர், வடிகால் அமைப்பு ஆகியவற்றை அளிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என அறிவியலாளர் திரு. ரோசியோ ஒஜிமா கூறுகிறார்.

இந்தப்பட்டினத்தில் ஏற்படப்போகும் இன்னல்களை எல்லா பொறியியலாளர்களும் அறிந்துள்ளனர். ஆனால் சிலரே வெளிப் படையாக இதைக் கூறவிரும்புகின்றனர். ஏனெனில் இப்படிப் பட்ட அறிக்கைகள் வெளிவந்தால் மக்கள் மனதில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அச்சம் ஏற்பட்டுவிடும் என அவர் கூறுகின்றார்.

காணிகளின் மேலதிகமான விலையேற்றம், கட்டடங்கள் அடர்த்தியாக அமைந்திருப்பது ஆகியன புதியதெருக்கள், பூங்காக்கள் அமைப்பதற்கும், இந்தப்பட்டினத்துக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய உள்ளகக்கட்டமைப்பை உருவாக்குவதற்கும் பட்டினத்திட்டமிடல் மேலாளருக்குத் தடையாக இருக்கின்றது.

இதைவிடப் பூமி அதிர்ச்சிக்கு ஆளாகுவதில் குறைந்தளவு தாக்கமுடைய பட்டினத்தைத் தெரிந்தெடுத்துத் தலைப்பட்டினமாக்குவது முக்கியமானதாகும்.

1923ம் ஆண்டு நிகழ்ந்த பாரிய கன்ரோ பூமியதிர்ச்சியில் 100,000 மக்கள் இறந்துள்ளனர். ரோக்கியோவில் நிகழும் சிறு சிறு பூமியதிர்ச்சிகளை, இப்பட்டினத்து மக்கள் அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்றாக நினைக்கின்றனர். ஆனால் ஒரு பாரிய பூமி அதிர்ச்சி நிகழும் பட்சத்தில் இழப்புக்கள் நினைத்துப் பார்க்க முடியாதளவு இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

ரோக்கியோவைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் தங்கள் மாவட்டத்திலேயே புதிய தலைப்பட்டினம் அமைக்கப்படவேண்டுமென்று தங்கள் தங்கள் மாவட்டங்களுக்கு ஆதரவு தேடுவதில் ஏற்கனவே இறங்கியுள்ளன.

–)(–

## வைப்புழி

வங்கிகளில் உள்ள 'லாக்கர்'களை 'பெட்டகம்' என்று இப்பொழுது சொல்லுகிறோம். ஆனால் சங்க காலத்திலே அதற்கு ஒரு நல்ல சொல் வழங்கியிருக்கிறது.

அது—

வைப்புழி.

'வைப்புழி' என்றால் பொருள் வைக்கும் இடம் என்று பொருள். திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களில் 'வைப்புழி' என்ற இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

# வானூர்தியின் விபத்தைப்பற்றி முரண்பாடான கருத்து நிலவுகின்றது

(ஐலண்ட் -- 12.07.92)

விடுதலைப்புலிகளால் முற்றுகையிடப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இராணுவ தங்ககத்தில் காயப்பட்டிருந்த இராணு வத்தினரை, வீரத்துடன் மீட்டெடுத்த இரண்டு ஆண்டுகளின்பின், இயக்கச்சியில் வானூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. 1990ம் ஆண்டு யூலைத்திங்கள் முதல் வாரத்தில் 'ஈகில்' (Eagle) என அழைக்கப்பட்ட நடவடிக்கையை உலங்குவானூர்தி மூலம் மேற் கொண்ட வான்படையினர், பண்ணைப்பாலத்தில் தரையிறங்கிக் காயமுற்றிருந்த இராணுவத்தினர் சுமார் ஏ பேரைப் பாது காப்பாக அவ்விடத்திலிருந்து மீட்டெடுத்துச் சென்றனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்ததும் சர்ச்சைக்குரியது மான விபத்தில் அழிக்கப்பட்ட வை—8 (Y—8) பயணிகள் வானூர்தி இந்த வெற்றிகரமான மீட்புப்பணியில் ஒருவேளை பங்குபற்றியிருக்கலாம்.

போரின் உக்கிரம் சிலவேளைகளில் அதில் பங்குபற்றுப வர்களை அதில் ஏற்படும் தாக்கத்தின் முக்கியத்துவத்தை அள விடமுடியாது செய்கின்றது. 1988ம் ஆண்டு முற்பகுதியில் கொள் வனவு செய்யப்பட்டதும், 100 பேர் பயணம் செய்யக்கூடியதும், சீனத்தயாரிப்புமான இந்தப் பயணிகள் வானூர்தி, ஆறு மேலா ளர்கள் உட்பட 10 பேருடன் அழிக்கப்பட்டது இலங்கை வான் படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும்.

இயக்கச்சியில் நடைபெற்ற இந்த வானூர்தி விபத்தைப் பற்றி முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த விபத்து

எப்படி ஏற்பட்டது என்பது பற்றி நேற்றுவரை சரியான தக வல்கள் கிடைக்கவில்லை. இயக்கச்சியில் நேர்ந்த இந்த அழிப் புக்கும், உயிர் இழப்புக்கும் தாங்களே காரணமென விடுதலைப் புலிகள் உரிமைகோரியுள்ள அதேவேளையில் பாதுகாப்புப் படையினர் இதை மறுத்துள்ளனர்.

இந்த வானூர்திக்கு என்ன தவறு நேர்ந்தது? இதன் தகர்ப்புக்கு யார் காரணமாகவிருந்தார்கள்? வானூர்தியைச் சுட்டு வீழ்த்தக்கூடிய ஆற்றலை விடுதலைப் புலிகள் பெறுவார் களாயின் அதற்குகெதிராக எந்தவிதமான மாற்று நடவடிக் கையை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது? குழப்பம் நிலவும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுவரும் போரை முடிவுக்குப் கொண்டுவரவேண்டுமென்று விரும்பும் மக் களைக் கவலையுறச் செய்யும் கேள்விகள் இவையாகும்.

இந்த விபத்தை விசாரிப்பதற்காக மூன்று உறுப்பினர்க ளைக் கொண்ட விசாரணைக்குழுவொன்றை வான்படைத்தளப தியான திரு.ரெறன்ஸ் குணவர்த்தனா நியமித்துள்ளார்.

இரண்டாவது ஈழப்போரின் ஆரம்பகாலத்தில் படையின ருக்குப் பாரிய உயிரிழப்பை ஏற்படுத்துவதிலும், குறிப்பாக வன் னிப்பகுதியில் ஒதுக்குப்புறங்களில் அமைக்கப்பட்டிருந்த படைப் பிரிவுகளை அந்த இடங்களிலிருந்து அகற்றுவதற்குப் படையின ருக்கு நெருக்குதல் கொடுப்பதிலுமேயே விடுதலைப்புலிகள் தங் கள் முழுக்கவனத்தையும் செலுத்தினார்கள். இருப்பினும் பிற்ப குதியில் இவர்களுடைய இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டது. அரசாங்கத்திற்கு வான் பிரதேசத்திலுள்ள மேலாதிக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதிலேயே அண்மைக்காலமாக, விடுத லைப்புலிகள் ஆர்வமாகவிருக்கின்றார்களென பார்வையாளர் கள் கருதுகிறார்கள்.

அரசாங்கத்திற்கு வான்பிரதேசத்திலுள்ள மேலாதிக்கத்தை எதிர்கொள்ளவதற்காக, மற்ற ஆயுதங்களுடன், வெப்ப ஈர்ப்பு வானூர்தி எதிர்ப்பு ஏவுகணையும், சோவியத்நாட்டில் தயாரிக் கப்பட்டதுமான சாம்—7 ஏவுகணைகள் தங்களிடம் இருப்பதாக விடுதலைப்புலிகள் கூறிவந்துள்ளார்கள். 1990ம் ஆண்டு செப் டெம்பர் திங்கள் இரண்டாவது வாரத்தில் சியா மார்செட்டி என அழைக்கப்படும் எஸ். எப். 260 ரக வானூர்தி காணாது போனபோது இந்த வானூர்தியை சாம் —7 ஏவுகணையால் தாங்கள் சுட்டுவீழ்த்தியதாகவும், இந்த விபத்திலேயே அதை

ஓட்டிச்சென்ற திரு. பிறியதர்சன அபேவீர குணவர்த்தன கொல்லப்பட்டதாகவும், லண்டனிலுள்ள தங்கள் தலைமைச்செயலகத்திலிருந்து விடுதலைப்புலிகள் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்கள்.

விடுதலைப்புலிகளின் இயந்திரத்துப்பாக்கிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்குப்பக்கமாகவுள்ளதும், யாழ்ப்பாணக் கோட்டைக்கும் மண்டைதீவுக்கும் இடையேயுள்ளதுமான கடல் நீரேரியில் இந்த வானூர்தி வீழ்ந்து நொருங்கி அதிலிருந்த இந்த விமானி கொல்லப்பட்டார்.

எப்படியிருந்தபோதிலும், கீழ்மட்டத்திலுள்ள போராளிகளின் மனவுறுதியைப் பேணும் நோக்கத்துடன் இப்படியான கோட்பரப்புகையை விடுதலைப்புலிகள் மேற்கொள்வதாகக் கூறி, அவர்களின் உரிமைக்கோரிக்கையை பாதுகாப்புப் படையினர் நிராகரித்தனர்.

1990ம் ஆண்டு செப்டெம்பர் திங்களில் தாங்கள் சியா மார்செட்டி வானூர்தியை சுட்டுவீழ்த்தியதாக விடுதலைப்புலிகள் உரிமைகோரியிருந்ததற்கு முன்பே அவர்களிடம் வானூர்தி எதிர்ப்பு பீரங்கிகள் உள்ளன என நம்புவதற்கு போதிய சான்றுகள் இருந்தன.

நல்லூரில் 1988ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்திய பரா அதிரடிப்படையினர் மேற்கொண்ட ஒரு நடவடிக்கையின் போது ஒரு ஏவுகணையை அவர்கள் கண்டெடுத்தது இதற்கு முதலாவது சான்றாகும். இந்த ஏவுகணையைப்பற்றி நான் இந்தியப் பதில் தூதுவரான திரு. நெருபன் சென் அவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்திய அமைதிகாக்கும் படையினர் கண்டெடுத்த தரையிலிருந்து வானுக்குச் செலுத்தக்கூடிய ஏவுகணையும் அதன் செலுத்தியும் ருசியத்தயாரிப்பான வெப்ப ஈர்ப்பு வானூர்தி எதிர்ப்பு ஏவுகணையான சாம்7 என அவர் கூறினார்.

'யேன் காலாட்படையும் ஆயுதங்களும்' என்ற நூலின்படி நேட்டோ (Nato) நாடுகளால் கிறையில் (Grail) என அழைக்கப்படும் இந்தச் சாம்—7 ஏவுகணை முதன் முதலாக அராபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையே நடந்த ஆறு நாள் போரின் போதும், அதன்பின் வியட்நாம் போரின்போதும் உபயோகப்படுத்தப்பட்டது. சாம்—7, சாம்—5 அல்லது அவைதப்போன்ற ஆயு

தங்களை மத்திய கிழக்கிலும், லண்டனிலும், ஐரோப்பிய தலை நகரங்களிலுள்ள ஆயுத விற்பனையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்ய முடியுமென சில பார்வையாளர் கூறியுள்ளனர். கிழக்கு ஐரோப்பாவில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக நவீன ஆயுதங்களும், ஆயுதத்தளபாடங்களும் விற்பனைக்கு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகவும் அதிகரித்துள்ளதெனவும் இவர்கள் கூறியுள்ளனர்.

இந்த ஐரோப்பிய மற்றும் கிழக்குநாடுகளிருந்து விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து அவற்றை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நடைபெறும் போரில் பயன்படுத்தலாம் என இவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

*1991*ம் ஆண்டு யூன் மாதத்தில் ஏற்பட்ட அமெரிக்க தயாரிப்பு *212*ரக உலங்கு வானூர்தியின் இழப்பை இங்கு நினைவுகூருவோம். வவுனியா, மன்னார் பெருந்தெருவில், வவுனியாவுக்கு மேற்கே ஒன்பது கல் தொலைவில் பூவரசங்குளத்தில் கடும் சமரில் ஈடுபட்டிருந்த படையினருக்கு வான்மூலம் உதவுவதற்காகச் சென்றுகொண்டிருந்த வேளையில், வவுனியாவுக்கு மேற்கே ஐந்து கல் தூரத்தில் தொழில் நுட்பக்கோளாறு காரணமாக மோதி தரை இறக்கப்பட்டபோது இந்த உலங்கு வானூர்தி சிதறிப்போயிற்று.

ஆனால் இப்படியான இழப்புக்களை இலங்கை வான்படை இடைக்கிடையே சந்திக்க நேர்ந்தபோதிலும் இது எப்பொழுதும் இராணுவத்தினரின் தரை நடவடிக்கைகளுக்கும், குறிப்பாக அவர்கள் வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள கடல்மூலம் தரையிறங்குவதற்கும் பெரிதும் உதவியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரானபோரில் தாங்கள் வெற்றி ஈட்டவேண்டுமென்று வேணவா கொண்ட இராணுவத்தினருக்கு, குறிப்பாக யாழ்ப்பாண தீபகத்திலும் வன்னிப்பகுதிலும் சியா மார்செட்டி வானூர்திகளும், உலங்கு வானூர்திகளும், வை—8ரக வானூர்திகளும், அவ்ரோ வானூர்திகளும் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட சீனத்தயாரிப்பு யெட் போர் வானூர்திகளும் பெரிதும் உதவியுள்ளன.

இரண்டு வை—8 ரக வானூர்திகளும் 16 இருக்கைகளைக் கொண்ட எட்டு அல்லது ஒன்பது வை 12 ரக வானூர்திகளும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நீண்டகாலம் சேவையாற்றியுள்ளன. வான்படையின் போர்த்திறனை அதிகரிப்

பதற்காக, இரு ஆண்டுகளுக்கு முன் நவம்பர் மாதத்தில் மூன்றுமை—12 ரக வானூர்திகள் கொள்வனவு செய்யப்பட்டன. வான் பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் இராணுவத்தினருக்குள்ள மேலாதிக்கத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய தேவையை விடுதலைப்புலிகள் உணர்ந்துள்ளதாக இராணுவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். சென்ற $1\frac{1}{2}$ ஆண்டுகாலத்தில் வான் மற்றும் கடற்படையை பலமிழக்கச்செய்ய விடுதலைப்புலிகள் உறுதியாகச் செயற்பட்டுள்ளார்கள்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு இராணுவ தங்ககத்தில் முற்றுகையிடப்பட்டிருந்த 800 படையினரைப் பாதுகாப்பதற்கு சென்ற ஆண்டு யூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடல்மூலம் சென்ற இராணுவத்தினருக்கு வான்மூலம் உதவி அளித்த உலங்கு வானூர்திகளைச் சுட்டு வீழ்த்துவதற்கு விடுதலைப்புலிகள் முயன்றனர்.

தரைப்படையினருக்கு உதவுமுகமாக வான் நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளைகளில், தங்களால் பாவிக்கப்படும் 50 கலிபர் துப்பக்கிகளை விட நவீனமயமான வானூர்தி எதிர்ப்புப் பீரங்கிகளை விடுதலைப்புலிகள் பெற்றுள்ளதை இலங்கை வான்படையின் மூத்த மேலாளர்களால் அவதானிக்க முடிந்தது. 50 கலிபர் துப்பாக்கியைவிட அதிக ஆற்றல் வாய்ந்த ஆயுதம் விடுதலைப்புலிகளிடமிருப்பதை தாங்கள் கண்டதாக வான்படை மேலாளர்கள் இலங்கை வான்படையின் தலைமைப் பீடத்தில் நடாத்திய ஒரு சிறப்பு பத்திரிகை மாநாட்டில் ஒத்துக் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும், அந்த ஆயுதம் என்ன என்பதை அந்த மேலாளர்கள் இனம்காணவில்லை. அந்த ஆயுதத்தால் ஒரு வானூர்தி தாக்கப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அந்த ஆயுதத்தை வாகனம் ஒன்றில் பொருத்த முடியும், இருப்பினும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒடுக்குவதற்குப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தாங்கள் உதவுவதை எந்தவொரு அச்சுறுத்தலும் தடைசெய்யாது என வான்படையினர் கூறியுள்ளனர். அவர்கள் தங்கள் கூற்றை நிரூபிக்கும் வகையில், படையினரின் எல்லாவிதமான நடவடிக்கையின் போதும், அவை சிறிதாயிருந்தாலென்ன, பெரிதாகவிருந்தாலென்ன எப்பொழுதும் அவர்களுக்கு உதவிவந்துள்ளனர்.

ஆனால் கடற்படையினர் மீதும் புதுவிதமான தாக்குதல்களை, படிப்படியாக ஆனால் உறுதியாக விடுதலைப்புலிகள்

மேற்கொண்டு, படையினருக்குப்பாரிய இழப்புக்களை ஏற்படுத்தி வந்துள்ளனர். ஒதுக்குப் புறங்களில் அமைந்துள்ள படையினரின் காவல் அரண்கள் மீதும், அவர்கள் ரோந்து செல்லும் போதும் காடுகளில் நிலைகொண்டுள்ள விடுதலைப்புலிகளின் நடமாடும் குழுக்கள் தாக்குதலை மேற்கொள்வதன் காரணமாக கிழக்கிலுள்ள வான்படையினர் அவர்களின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் கடற்படைக்கெதிராக கடலில் பிரமிக்கத்தக்கதும், துணிகரமானதுமான தற்கொலைப் படைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள்.

கடலில் பருத்தித்துறைக்கு வடக்கே ஆறு கல் தூரத்தில் கடற்கண்காணிப்பில் ஈடுபடுத்தும் மூன்று கப்பல்களில் ஒன்றான 'அபிதா' என்ற கப்பலுடன் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட வள்ளத்தை சென்ற ஆண்டு மே திங்கள் 4ம் திகதி மோதவைத்து தற்கொலைத் தாக்குதல் மூலம் விடுதலைப்புலிகள் அதைச் செயலிழக்கச் செய்துள்ளனர். இந்தக் கப்பலிலிருந்து ஐந்துபேர் கொல்லப்பட்டனர். இதைப்போன்ற வேறு ஒரு தாக்குதல் நடவடிக்கையின் போது வடபகுதியில் கரையோரச் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த படகொன்றையும் சென்ற ஆண்டு செப்டெம்பர் திங்களில் விடுதலைப்புலிகள் தகர்த்துள்ளார்கள்.

நயினாதீவிலிருந்து காரைதீவுக்குச் சென்றுகொண்டிருந்த பொழுது, சங்கிலித்தொடராக விடுதலைப்புலிகளால் விதைத்து வைக்கப்பட்டிருந்த கடற்கண்ணி வெடிகளுடன் மோதித் தகர்ந்துபோன இந்தப்படகில் இருந்த இரண்டு மேலாளர்கள் உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

கடற்புலிகளின் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் குறிப்பாக வடக்குப்பகுதியில் தாங்கள் மேற்கொண்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு படையினருக்கு அறிவுறுத்தப்பட்டதாக சில மேலாளர்கள் கூறியுள்ளனர் மன்னார்க் கரையோரத்திலுள்ள பூநகரியில் ஒருபடைப்பிரிவை அமைத்திருக்கும் அதேவேளையில் சிறிய தீவுகளான எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, காரைதீவு மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் தங்கள் கண்காணிப்பைக் கடற்படையினர் அதிகரித்துள்ளனர்.

பிரதான நிலப்பரப்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் உட்புகும் அல்லது யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பிரதான நிலப்பரப்பிற்குச் செல்லும் சகல போக்குவரத்துப்

பாதைகளையும் விடுதலைப்புலிகளும், பொதுமக்களும் பயன படுத்துவதைத்தடுப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் முயற்சி எடுத்ததாகச் சில வட்டாரங்கள் கூறியுள்ளன. குடாநாட்டின் மேற்குப்பக்கமாகவுள்ள, மேற்கூறப்பட்டுள்ள தீவுகளில் கடற் படையினரின் கண்காணிப்பு கூடுதலாகவிருப்பதன லேயே. இந் தத்தீவுகளுக்கிடையே விடுதலைப்புலிகளின் நடமாட்டம் குறை வாகவிருக்கின்றது. அதே நேரத்தில் மற்றைய நுழைவாயில் களான ஆனையிறவு, கொம்படி மற்றும் ஊரியான் பாதை களைப் போக்குவரத்துக்குத் தடைசெய்ததுடன் குடாநாட்டின் பிரதான நிலப்பரப்பை இணைக்கும் சங்குப்பிட்டிப் பாதையை யும் படையினர் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந் துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளின் மேலா திக்கத்தை இந்த ஆண்டு இறுதிக்குமுன் முடிவுக்குக் கொண்டு வர விரும்புவதாக இந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. இருப் பினும் சென்ற பத்து ஆண்டுகாலமாக ஒரு முடிவுக்குவராத இந்தப் போரை நோக்குகையில் இந்த இலக்கை இவர்கள் அடையும் சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவிருப்பதாகவும் இவ்வட்டாரங்கள் கூறியுள்ளன. கவசப்படை அணிக்கெதிராகத் தற்பொழுது போரில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் தாங்கி எதிர்ப்புப் பிரிவினரின் உயர்வான பயிற்சியையும், அவர் கள் மனோதிடத்தையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். போர்த்தாங்கிகளையும், படையினரைக் கொண்டு செல்லக் கூடிய கவசவாகனங்களையும் படையினர் சண்டையில் ஈடுபடுத் தத் தொடங்கியவுடன் இதனால் எழும் அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்கு விடுதலைப்புலிகள் தாங்கி எதிர்ப்பு அணியை உருவாக்கியுள்ளார்கள்.

அரசாங்கத்தின் எந்தவொரு திட்டத்தையும் முறியடிக்க விடுதலைப்புலிகள் ஆயுத்தமாகவுள்ளார்கள் போலத் தோன்று கின்றது. புதிய நடவடிக்கைகளைத் திட்டமிடும்போதும், புதிய தாக்குதல்களை ஆரம்பிக்கும்போதும், படையினருள் இறந் தோரினதும், காயப்பட்டோரினதும் எண்ணிக்கையை மறந்து விடக்கூடாது. சென்ற இரண்டு ஆண்டுகளில் 3000க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். காயப்பட்டவர்களின் எண் ணிக்கை 8000த்தை தாண்டியுள்ளது. இதில் சுமார் 7300பேர் இராணுவத்தினர் ஆகும். இவற்றுள் இதன் மேலாளர்களும் அடங்குவர்.

# இஸ்ரேல் நாட்டை புதிய உலகத்திற்குள் இட்டுச்செல்ல திரு. யிற்சாக்கின் தலைமைத்துவத்தால் முடியுமா?

–மெர்வின் த. சில்வா–
(சண்டே ரைம்ஸ்- 28-06-92)

செவ்வாய்க்கிழமை இரவு நேரம், நான் இஸ்ரேலைப் பற்றிய பகுப்பாய்வுக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது அந்நாட்டுப் பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகள் வெளியிடப் படவில்லை. ஆனால், அங்குள்ள பகுப்பாய்வாளர்கள், அண்மைக் காலங்களில் நடைபெற்றுவரும் பாராளுமன்ற ஆட்சி முறைப் படியே இம்முறையும் தேசிய ஒற்றுமையைக் கோடிட்டுக் காட்டும் பெரியளவிலான ஒரு கூட்டணி அரசாங்கம், அல்லது லிகுட் (Likud) கட்சியுடனேயோ, அல்லது தொழிற்கட்சியுடனேயோ கொள்கைகளில் வேறுபாடுள்ள சிறிய சிறிய கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டணி அரசாங்கம் அமையும் எனக் கூறுகின்றனர்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக 120 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற பொதுத்தேர்தல் களில் வலதுசாரி லிகுட் கட்சியோ, அல்லது இடதுசாரிகள் பக்கம் சாயும் தொழிற்கட்சியோ பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதை இஸ்ரேலின் அரசியல் வரலாற்

றைக் கற்கும் ஒரு மாணவன் நன்றாக அறிந்திருக்கின்றபடியால் அங்கு ஒரு கூட்டணி அரசாங்கம் அமைக்கப்படுவதில் வியப் பொன்றுமில்லை.

கூட்டணி அரசாங்கத்தை அமைக்கும்போது உள்ளூர நடைபெறும் சூழ்ச்சிகளிலோ, அல்லது ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்து அதைக் கொண்டு நடத்துவதற்காக மேற்கொள்ளப் பட்டுவரும் தில்லுமுல்லுகளிலோ இந்நாட்டு அரசியல் வரலாற் றைக் கற்கும் மாணவனுக்கு அக்கறை தேவையில்லை. ஆனால், அவன் கீழ்க்குறிப்பிடப்படுகின்ற காரணங்களால் அவற்றில் அக் கறை செலுத்த வேண்டியுள்ளது.

(1) இஸ்ரேல் என்ற நாடுதான் உலகத்திலுள்ள முதலாவதும், ஒரேயொரு யூத நாடுமாகும்.

(2) அமெரிக்காவிலுள்ள யூத மக்கள் தங்கள் மக்கள் தொகையி லும் பார்க்கக் கூடிய அழுத்தங்களை அமெரிக்க அரசாங்கத் தின் மீது பிரயோகிக்கும் நிலையிலுள்ளதால் அமெரிக்கா வின் பாரிய அழுத்தத்தினால், இஸ்ரேல் என்ற நாடு ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டது.

(3) நிலநெய்வளம் பெருமளவிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அராபிய மத்திய கிழக்கில் இந்தநாடு அமைக்கப் பட்டுள்ளது.

(4) இது மிகவும் நீண்டகாலமாக நிலப்பரப்புச் சிக்கலைக் கொண் டுள்ள நாடாகும்.

இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்குவதற்கு ஐக்கிய நாடு கள் சபை கொண்டு வந்த தீர்மானத்தைப் போன்று வேறெந்த ஒரு தீர்மானமும் இவ்வளவு கடுமையாக விமர்சிக்கப்படவில்லை. பாலைவனப்புயல் (Desert Storm) போரில் பெற்ற வெற்றியினால் அமெரிக்காவிலும், வெளிநாட்டிலும் மதிப்பைப் பெற்றிருந்த சனாதிபதி திரு. புஷ், இந்தப் பாலஸ்தீனிய சிக்கலுக்குத் தீர்வு காண இதுதான் தக்க நேரம் என விடாப்பிடியாகச் செயற்படத் தொடங்கினார். இதன் பலனாகவே அவரும் மொஸ்கோவும் சேர்ந்து ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மத்ரிட் (Madrid) டில் மத்திய கிழக்குச் சமாதான மாநாட்டைக் கூட்டினர்.

பொருளாதார நெருக்கடியினால் தாக்கமடைந்த முன் னாள் சோவியத் ஒன்றியம் என்ற நாடு சீர்குலைந்து சிறு சிறு

நாடுகளாகப் பிரிந்த வேளையில் வேறு வழியின்றி ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்த சனாதிபதி திரு. கொபர்சேவ் மத்ரிட் மாநாட்டில் கலந்துகொண்டார்.

இஸ்ரேலின் தேர்தல் கோட்பரப்புகை முடிவுற்ற நிலையில் அங்கு வந்த கோபர்சேவுக்கு அங்கு வந்த பின்புதான் சோவியத்தில் இருந்து புதிதாக வந்து குடியேறிய யூத மக்களால் அங்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை நேரில் உணர முடிந்தது. அவர்களின் வாக்குகள் தேர்தலில் ஏற்படுத்தும் தாக்கத்தையும்அதோடு அவர்கள் வருகை இஸ்ரேலின்நிலம், பாதுகாப்பு,உயிர் வாழ்வு. குடிப் பரம்பல் இவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் அவர் உணரக் கூடியதாக இருந்தது.

இஸ்ரேல் என்ற நாடு தோன்றிய சூழ்நிலையை நோக்கும் போது, இந்நாடு தென்னாபிரிக்காவைப்போன்று ஒரு இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடுபோல் தோற்றமளிக்கின்றது. ஆனால் தென்னாபிரிக்காவைப்போன்று பரந்த நிலப்பரப்பைக்கொண்ட நாடாக இஸ்ரேல் இருக்கவில்லை. இந்தநாடு மற்ற நாடுகளுடனான போர்களில் ஈட்டிய வெற்றிகளுக்கு அந்த நாட்டிலுள்ள திறமையான இராணுவமே காரணமாகும். ஆனால் பெருமுயற்சிகளால் ஏற்பட்ட வெற்றிகளால் சிக்கல்களே உருவாகியுள்ளன. பாதுகாப்பை வலுப்படுத்தும் காரணங்களுக்காக அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் நிலப்பரப்புக்களை இந்நாடு கையகப் படுத்தியுள்ளது. இப்படியாக அயல்நாட்டு நிலப்பரப்புக்களை கையகப்படுத்தியமையால் இந்த நாட்டின் எதிரிகளான பாலஸ்தீனியர்களும், அராபியர்களும் இஸ்ரேலின் அரசியலில் பங்கு பெற இடமளிக்கப்பட்டது. இதன்மூலம் மாறிவரும் அரசியல் சமநிலை இஸ்ரேலுக்குப் பாதகமாகவே இருக்கின்றது.

## குடிப்பரம்பலால் ஏற்படும் இக்கட்டான நிலை

இதைவிட இஸ்ரேலிய சமுதாய அமைப்பில் நிறவேறுபாடுகளும், வகுப்பு வேறுபாடுகளும் தோன்றியுள்ளன. கட்சிகளிடையேயுள்ள போட்டி, போட்டிகளினால், தேர்தலின் போது இக்கட்சிகள் கொடுத்த வாக்குறுதிகள், இச்சிக்கல்களை வெளிக்கொணர்ந்து இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. யூதமதத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் சமமானவர்கள் என்ற கோட்பாடு இருந்தபோதிலும், இத்தத்துவம் இஸ்ரேலில் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

யூதர்களில் ஒவ்வொரு பிரிவினருக்குமிடையே இருக்கும் வேற்றுமைகள் அமெரிக்காவிலுள்ள கறுப்பினத்தவர்களுக்கும் வெள்ளை இனத்தவர்களுக்குமிடையே இருக்கும் வேற்றுமைகள் போன்று கடுமையானவையாயுள்ளன. இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்குவதற்காகப் பாடுபட்ட மக்களாகிய ஐரோப்பாவி லிருந்து வந்த அஸ்கெனசிம் (Ashkenazim) என்ற யூதப்பிரிவைச் சார்ந்தவர்களே அங்கு நிருவாகத்தையும், வாணிபத்தையும் இன்னமும் நடத்திவருகின்றார்கள் என 'அராபிய உலகத்துக்கு மேலாகப் புயல் வீசுகின்றது' என்னும் தங்களது பிரபலமான நூலில் இயூசின் பிசர் (Eugene Fisher) அவர்களும் செறிப் பசியோயினி ( Cherif Bassiouni) அவர்களும் விளக்கியுள்ளனர்.

சில அகராதிகளில் செபர்டிம் [Sephardim] என்ற வார்த்தைக்கு கருத்துத் தெரிவிக்கையில் அஸ்கெனசிம் பிரிவினர்களிலும் பார்க்கக் கருமையானவர்கள் எனக்கூறப்பட்டுள்ளது. இந்த இரு பிரிவினர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் இதுவும் ஒன்றாகும். முக்கியமான வேறுபாடு அவர்களினது பண்பாட்டில் காணப்படுகின்றது. பலநூற்றாண்டுகாலமாக செபர்டிப் இனமக்கள் இசுலாமியப் பண்பாட்டிலேயே வாழ்ந்து வந்துள்ளனர். இதற்கு மாறாக அஸ்கெனசிம் இனமக்களோ 2000 ஆண்டுகளுக்கு மேலாக மேலைத்தேய சூழ்நிலையில் வாழ்ந்து ஐரோப்பிய யூதேய - கிறிஸ்தவ பண்பாட்டை பின்பற்றுபவர்களாயுள்ளனர். [பம்பாயிலிருந்து வந்த யூதக்குடும்பத்தவர் வீட்டில் சோறும், கறியும் சாப்பிட்ட என்னால் இந்த சமூக பொருளாதார சமநிலையற்ற வேறுபட்ட வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ள முடியும்.]

இஸ்ரேல் என்ற நாடுதான் உலகத்திலுள்ள முதலாவதும், ஒரேயொரு யூதநாடும் ஆகும். இந்நாட்டின் தனித்தன்மையை பேணுவதோடு அயல்நாடுகளான அராபிய நாடுகளில் தாம் கையகப்படுத்திய பிரதேசங்களை இணைத்து வைத்திருப்பதற்குப் பண்டைக்காலத்தில் நடைபெற்ற யூதவெளியேற்றத்தை போல் பெருமளவு யூதர்கள் இடம்பெயர்ந்து வரவேண்டியது அவசியமாகின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வாழ்ந்து வரும் யூதமக்கள் தங்கள் வீடுவாசல்கள், சகலவசதிகளிலும் கொண்ட வாழ்க்கை என்பவற்றைத் துறந்து இஸ்ரேலுக்கு வந்து குடியேறவிரும்பவில்லை. ஆனால் மில்லியன் டாலர்கள் கணக்கில் இஸ்ரேலுக்கு நிதி சேகரிக்கும் நிறுவனங்களுக்கு அவர்கள் நிதியுதவி செய்துவருகின்றார்கள்.

ஆனபடியால் இஸ்ரேலில் குடியேறுவதற்குத் தேவையான யூதக்குடிமக்கள் வேறு இடங்களிலிருந்து அழைத்து வர வேண்டியுள்ளது. இஸ்ரேலிய இராணுவம் எத்தியோப்பியாவில் வாழ்ந்துவந்த கறுப்பின யூதர்களை உலங்கு வானூர்தி மூலம் இஸ்ரேலுக்குக் கொண்டுவந்திறக்கியது. இது இஸ்ரேலிய பாது காப்புப்படையின் பகட்டு வித்தையை வெளிக்காட்டுகின்றது. அஸ்கெனசிம் இனத்தவர் அல்லாத யூதமக்களைக் குடியமர்த்துவது ஆட்சிசெய்யும் அம்மக்களின் இனவிகிதாசாரத்தை மாற்றி அஸ்கெனசிம் பிரிவினரின் அரசியல் பலத்தை இழக்கச் செய்கின்றது.

## முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து குடிபெயர்வு

சோவியத் ஒன்றியத்தில் பெருமளவில் இஸ்ரேலுக்கு இடம் பெயரச் செய்யக் கூடிய யூதமக்கள் இருந்தார்கள். முன்னாள் சோவியத் ஒன்றியத்திலுள்ள யூதர்கள் தங்கள் படிப்பாற்றலாலும், வேறு விடயங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தமையாலும் அந்நாட்டிலுள்ள மற்றைய சமூகத்தவர்களிலும் பார்க்க முன்னணி நிலையில் இருந்தனர். யூத இனத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் நல்ல நிலையில் இருந்தனர். இப்படி இருக்கும் வேளையில் தான் சோவியத் ஒன்றியம் பெரும் பொருளாதார வீழ்ச்சியை அடையத் தொடங்கியது. இதனால் அவர்கள் இஸ்ரேலுக்கு இடம் பெயர விரும்பினார்கள்.

1980ம் ஆண்டு வரையும் சோவியத் ஒன்றியத்திலிருந்து ஒரு யூதக்குடும்பம் கூட குடிபெயர்வது சுலபமாக இருக்கவில்லை. குடிபெயர விண்ணப்பிப்பவர் ஒரு நிபுணராகவோ அல்லது தேர்ச்சிபெற்ற தொழிலாளியாகவோ இருந்தால் இக்கட்டுப்பாடு மிகக்கடினமாக இருந்தது. அவருடைய கல்விக்கும் சிறப்புப் பயிற்சிக்கும் சோவியத் ஒன்றியம் அதிகளவு செலவு செய்துள்ளபடியால் குடிபெயர்பவர் தனக்கும் தன் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பெருந்தொகையான பணத்தைச் செலுத்த வேண்டும். இது அவர்களுக்குப் பெருந்தடையாக இருந்தது. திரு. கொர்பர்சேவ் இவைகளெல்லாவற்றையும் முற்றாக மாற்றியமைத்தார்.

1989ம் ஆண்டுக்குப் பின்னர் 350,000 யூதமக்கள் முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்தனர். இதனாற்றான், இஸ்ரேலிலுள்ள புகழ்பெற்ற 'ரெக்னியோன்' (Technion) தொழில்நுட்ப நிறுவனத்தால் வழங்கப்பட்ட சமாதானத்துக்கான பரிசைப் பெறுவதற்காகத் திரு. கொபர்சேவ் சென்றவாரம் வந்திருந்தபோது அங்குள்ள பத்திரிகைகள் இவருக்குத் 'தீரர்' (Hero) எனப் புகழாரம் சூட்டின. சோவியத் ஒன்றியத்திலிருந்து வந்த 240, 000 மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னர் கருத்துக் கணிப்பொன்றை நடத்திய மாரிவ் என்னும் பத்திரிகை இது இஸ்ரேலின் மொத்த வாக்குகளில் 8% வீதம் எனக் கூறுகின்றது. இதில் 180,000 மக்கள் வாக்களிப்பார்கள் என எண்ண இடமுண்டு. இது புதிய வாக்காளர்களில் 30%வீதத்திற்கும் கூடவாகும். 120 உறுப்பினர்களைக்கொண்டபாராளுமன்றத்துக்கு நடக்கும்தேர்தலில் இவர்கள் அனைவரும் ஒரேயொரு கட்சிக்கு வாக்களித்தார்களாயின் விகிதாசாரமுறைப்படி அந்தக்கட்சிக்கு ஆறு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

ஒலிம் (Olim) என இஸ்ரேலில் அழைக்கப்படும் சோவியத் ஒன்றியத்திலிருந்து குடிபெயர்ந்து வந்த வாக்காளர்கள் அப்படிச் செய்வார்களாயின் அது அவர்களை அரசியலில் செல்வாக்குடையவர்களாக்கிவிடும். லிகுட் கட்சியினதும் தொழிற்கட்சியினதும் 'தேசிய ஒற்றுமை' அரசாங்கம் 1990ம் ஆண்டு யூன் மாதம் வீழ்ச்சியுற்ற போது, பிரதம மந்திரி திரு. யிற்சாக் சாமிர் ஒரு வலதுசாரி லிகுட் அரசாங்கத்தை அமைத்தார். இவருக்கு நாடாளுமன்றத்தில் 40 உறுப்பினர்களது வாக்குகளையே பெறமுடியுமாகவிருந்தபோதிலும் இவரது அரசாங்கம் இவ்வளவு காலம் நீடித்ததற்கு இந்நாட்டிலுள்ள மதச்சார்புடைய சிறு சிறு கட்சிகளும், இடது சாரிக்கட்சிகளும் ஒரு பொதுத்தேர்தலைத் தவிர்த்துக்கொள்வதற்காக இவருக்குக்கொடுத்து வந்த ஆதரவே காரணமாகும்.

## சமாதான வழிமுறைகள்

எல்லாவற்றிலும் பார்க்க அமெரிக்காவின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கிழக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது போன்ற சவாலான சிக்கலை எதிர்நோக்கக் கூடிய உறுதியான பாராளுமன்றத்தையுடைய புதிய நிருவாகம் ஒன்று அமையுமா என்பதே தற்போதைய முக்கிய கேள்வியாகவுள்ளது.

நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெற்று வெள்ளை மாளிகையை அலங்கரிக்கின்றாரோ அவரிலேதான் மத்திய கிழக்குச் சமாதான மகாநாட்டை மீண்டும் கூட்டுவது தங்கியுள்ளது.

அமெரிக்காவினால் வழிநடத்திச் செல்லப்பட்ட 'பாலைவனப்புயல்' என்ற போர் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை உயர்த்தியுள்ளது. இந்தப் போரிலும் திரு. கோபர்சேவ் அவர்களின் சோவியத் ஒன்றியம் முக்கியமான பங்கை வகித்துள்ளது.

குவைத் மீது ஈராக் படையெடுத்ததும் அதனைத் தனது நாட்டுடன் இணைத்ததும் தோன்றிய மத்திய கிழக்கு சிக்கலை அமெரிக்கா தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது.

முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்களாகிய பிரித்தானியாவும் பிரான்சும் கடைசி உலகப் போருக்கு முன்னாள் விலகிச் சென்ற பின்னர் இந்த அதிகார வெற்றிடத்தை அமெரிக்கா நிரப்புவதற்கு சவாலாக முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஆட்சியாளர்கள் தங்களுடைய நாட்டுக்கு அண்மையிலுள்ள அராபிய நாடுகளை அரவணைத்து, அவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் புதிதாகத் தோன்றிய முற்போக்காளர்களுக்குப் பொதுவுடமைச் சித்தாந்தத்தில் நம்பிக்கை வளரச் செய்து தனது பக்கம் இழுத்தது, இதனால் இந்த அராபிய முற்போக்குவாதிகள் அமெரிக்காவை எதிர்க்கத் தொடங்கினர்.

அமெரிக்க இராசாங்க அமைச்சின் பகுப்பாய்வின்படி 1945 ம் ஆண்டுக்கு முன்பிருந்தே சவுதி அரேபியா மிகப்பெரிய வளங்களைக்கொண்ட கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த நாடாகக் கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்நாட்டுடன் உறவாடினால், உலக வரலாற்றில் பாரிய நன்மைகள் ஏற்படும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. நிலநெய் விலையேற்றத்தினால் அந்நாட்டுக்குக் கிடைத்த மிதஞ்சிய பெற்றோல் டாலர்களை ஆயுத விற்பனை, முதலீடு, கட்டட நிர்மாணத்துறை என்பன மூலம் தனது நாட்டுக்குள் வர அமெரிக்கா வழிவகுத்தது.

அதிகளவு நிலவாயு பாவிப்பாளரான அமெரிக்கா தனது தேவைகளை நிறைவுசெய்ய மத்திய கிழக்கில் இருந்து பெறும் நில நெய்யில் தங்கியிருப்பதைக் குறைத்துக் கொண்டு தனக்குத் தேவையான ஆற்றல் வளங்களை வேறு வகைகளில் உற்பத்தி செய்ததுடன் தனக்குத் தேவையான ஆற்றல் வளங்களையும்

சேமித்து வைத்திருக்கின்றது. இருந்தும் தனது வெளிநாட்டுக் கொள்கைகளில் மத்திய கிழக்குப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை கொடுத்துவந்துள்ளது.

இராஜரீக ரீதியில் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட முதல் வெற்றி எகிப்தை தன் பக்கம் சாரவைத்ததே ஆகும். 1979 -ம் ஆண்டில் 'காம்ப் டேவிட்' (Camp David) டில் அமெரிக்க சனாதிபதி கார்ட்டர் (Carter) எகிப்திய சனாதிபதி அன்வர் சதாத் (Anwar Sadat) இஸ்ரேலியப் பிரதமர் மெனாச்சம் பெகின் (Menachem Begin)ஆகியோர் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பினால் ஒரு புதிய கருத்து ஒற்றுமை ஏற்பட்டதோடு 1967 ம் ஆண்டு நடைபெற்ற ஆறுநாள் போரின்போது இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட சினாய் பாலைவனப்பிரதேசம் மத்திய கிழக்கில் சமாதான பேச்சுவார்த்தை அடுத்த எகிப்துக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. இதற்குப்பதிலாக எகிப்து இஸ்ரேலை அங்கீகரித்தது. (அராபியர்களின் உலகப்படத்தில் இஸ்ரேல் என்ற நாடு முன்பு குறிப்பிடப்படுவதில்லை)

எகிப்து அமெரிக்கக் கூட்டணியுடன் ஒன்று சேர்ந்தது. இப்படியிருக்கும்போது தீவிர கொள்கையுடைய சிரியாவும் சதாம் குசெயினுக்கெதிராகஅதனுடைய எதிரிகளுடன் கூட்டுச்சேர்ந்தது. மொஸ்கோ சார்புள்ள சிரியா இஸ்ரேலின் அயல்நாடாகும். இது அமைதிகாக்கும் பணிக்கு 20,000 படைவீரர்களை லெபனானில் வைத்திருக்கின்றது. லெபனான் மீது இஸ்ரேல் படையெடுத்ததன் காரணமாக சிரியாவின் படைகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சிரியாவின் கோலன் குன்றுகளை இஸ்ரேல் கைப்பற்றித் தன்வசம் வைத்திருக்கின்றது.

இராசதந்திர ரீதியில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த யெவ்யெனி பிறிமாகோவின் தூதுக்குழுவின் முயற்சிகள் வெற்றியளிக்காமையினால், எகிப்தும், சிரியாவும் தனது பக்கத்தில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்ட அமெரிக்கா சதாம்குசேயினுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை அறிந்து கொண்டது. திரு.கொபர்சேவின் தூதுவரான பிறிமாகோவ் சதாம்குசேயினைப் பேச்சு வார்த்தைகள்மூலம் வழிக்குக் கொண்டுவர முயன்றார். இதனால் திரு.கோபர்சேவ் பாலைவனப் போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குக் காலம் கிடைக்கும் என எண்ணினார். பிறிமாகோவ் அவர்களின் முயற்சிகள் சதாமின் மனதை மாற்றவில்லை இதனால் முன்னாள் சோவியத்ஒன்றியம்பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவற்றுடன் சேர்ந்து சதாமுக்கு எதிரான நடவடிக்கைக்குச் சாதகமாக வாக்களித்தது. சீனா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. பொருளாதார வீழ்ச்சியில் சிக்கியிருந்த சோவியத் ஒன்றியம்மேலதிகமாக எதுவும்செய்யும் நிலையில் இருக்கவில்லை.

## நிலப்பரப்பு சமநிலை

நிலப்பரப்பு சமநிலை இப்போரினால் பெருமாற்றம் அடைந்தது. ஈராக் தனிமைப் படுத்தப்பட்டு அழிக்கப்பட்டது. தனி ஒரு வல்லரசாக வளர்ந்துநிற்கும் அமெரிக்காவுக்கு சவா லாக இப்போது ஈரானும், இசுலாமும் மாத்திரம் இருக்கின்றன.

இந்தப் போரின் போது சதாம் பாலத்தீன சிக்கலைமுன் கொண்டுவந்து அராபிய இஸ்ரேலிய மோதலை கொண்டு வர முயன்றார்.

இதனை தடுக்கும் முகமாகவும், தம்மோடு கூட்டாக நின்ற அராபிய நாடுகளின் நல்லெண்ணத்தை பேணுமுகமாக வும் பாலஸ்தீனியர்களுக்கு சுயாட்சிகொடுக்கும் ஓர் திட்டத்தை அமெரிக்கா முன்வைத்தது.

இதனைக் குழப்ப சாமீர் கையகப்படுத்திய நிலப்பரப்பில் விரைவாக குடியேற்றங்களை ஏற்படுத்த முயன்றார். ஆனால் அதற்கு தேவையான பணத்தை அமெரிக்கா தரமறுத்துவிட்டது அமெரிக்காவிடம் இருந்து பெருமளவில் உதவி பெறும் நாடுகளில் இஸ்ரேல் முதலிடம் வகிக்கின்றது. இஸ்ரேல் ஆண்டொன்றுக்கு 3.5 பில்லியன் டாலர்களை அமெரிக்காவிடமிருந்து உதவியாகப் பெறுகின்றது.

இந்த சிக்கல்களில் சில திரு.சாமிர் மதச்சார்புடைய கட்சி களின் ஆதரவைப் பெறுவதால் ஏற்படுகின்றன. இம்மதச்சார்பு டைய கட்சிகள், புனித பூமியிலிருந்து ஒரு அங்குல நிலமேனும் நம்பிக்கையில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படாது எனக்கோரு கின்றன. இதற்கிடையில் ருசியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த யூதர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலிலுள்ள கோல் இஸ்ரேல் (Kol Israel) என்ற பிரதேசத்தில் வசிக்கும் ஒரு ருசிய மருத்துவ நிபுணர் ஜெருசலத்தில் கடைச்சிப்பந்தியா கவும், இன்னொரு மருத்துவ நிபுணர் வீதிகளை சுத்தம் செய் பவராக தொழில் புரிவதாகத் தெற்காசியாவில் முன்னாளில் கார்டியன் பத்திரிகையின் நிருபராக இருந்த திரு. எறிக் சில்வர் கூறுகின்றார்.

87031

வேலையில்லாத் திண்டாட்டமும், பணவீக்கமுமே லிகுட் அரசாங்கத்துக்குப் பிரதான தலைவலியாக இருக்கின்றது. ''கிசுரேடற்'' (Histradut) என அழைக்கப்படும் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் தலைவரும் மூளைசாலியுமான திரு. சிமேன் பெரேஸ் என்பவரிடமிருந்து தொழிற்கட்சியின் தலைமைப் பதவியைப்பெற்றுக்கொண்ட ஜெனரல் யிற்சாக்ராபின் (Yltzak Rapin) சமாதானப் பேச்சுவார்த்தையில் நாட்டங்கொண்டவர். ஆறுநாள் போரின் நாயகனாக இவர் மரியாதைக்குரியவராக இருக்கின்றார் தொழிற்கட்சிக்கு ஆதரவு கொடுக்கும் கட்சிகள் இடதுபக்கம் சாயும் கட்சிகளாகும். சென்ற புதன்கிழமை காலையில் தொழிற்கட்சிக்கு வெற்றிவாய்ப்பு இருப்பதாகவும், அது முன்னணியில் இருப்பதாகவும் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

★✕★

22456 c

## கேட்டால் தவறு

காவல்துறையினரைப் பார்த்து ஒருவர், சார், இங்கே காரை நிறுத்தலாமா? என்று கேட்டார்.

''நிறுத்தக் கூடாது'' என்றார் காவல்துறையைச் சேர்ந்தவர்.

வியப்படைந்த அவர் ''இங்கே பல கார்கள் நிற்கின்றதே அது எப்படி?'' என்று கேட்டார்.

''அவர்கள் யாரும் என்னிடம் கேட்கவில்லை'' என்று பதில் தந்தார் காவல்துறையைச் சேர்ந்தவர்.

# பகை வாசலில் எங்கள் புலிக்கொடி ஆடும்

**பல்லவி**

நீலக் கடலே நெடுவெண் நிலவே
நீங்கள் பேசுங்கள்!
ஈழ மண்ணில் என்றும் வருவீர்
நீங்கள் பேசுங்கள்!

**சரணங்கள்**

ஞாலம் முழுதும் சுற்றிவந்தோம்
நாங்கள் தாழ்வோமா? — எங்கள்
ஆளும் உரிமை விட்டு மாற்றார்
அடியில் வாழ்வோமா?

எத்தனை சிங்களர் தங்கள்கால்களை
இந்த மண்ணில் பதிப்பாரோ? — அட
அத்தனை ஆணவம் அவர்கள் பெற்றால்
ஆளும் புலிகள் பொறுப்பாரோ?

மானமும் வீரமும் போனதன் பின்னே
மறவர் நாங்கள் உயிர்வாழோம் — வெறும்
வீணர்கள் ஆகியே எங்கள் தாயை
விலைகள் பேசி உடல்பேணோம்!

பாசறை எரிப்போம் கோட்டைகள் தகர்ப்போம்
படகுகள் உடைப்போம் வாருங்கள் — பகை
வாசலில் எங்கள் புலிக்கொடி ஆட
அண்ணனின் படையில் சேருங்கள்!

— பண்டிதர் வீ. பரந்தாமன்

பதிப்பு: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.